
வட ஆர்க்காடு



பத்தாண்டு சாதனைகள்

வட ஆர்க்காடு

பத்தாண்டுச் சாதனைகள்

தமிழ்நாடு அரசாங்க
செய்தித்துறை வெளியீடு

முதற் பதிப்பு: டிசம்பர், 1961

விலை: 25 காசுகள்

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை-5



முன்னுரை

மக்கள் வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்பதற்காக ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. அத் திட்டங்களின் கீழ் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அந்தந்தப் பிரதேசத்தின் அமைப்பு, இயற்கை வளங்கள், மக்கள் மனப் போக்கு ஆகியவற்றுக்கேற்ப, முன்னேற்றத்தின் அளவு அமைந்திருக்கிறது. ஆனால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சிறந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியைப் பிறநாடுகளிலிருந்து வருகின்ற தலைவர்களும் பாராட்டி யிருக்கிறார்கள்.

மாவட்ட வாரியாக நம்முடைய சாதனைகளைத் தொகுத்துத் தனித்தனியாக 12 நூல்களை வெளியிட்டு இருக்கிறோம். எல்லாம் சாதித்தாகிவிட்டது என்று பூரித்துப் பேசுவது இந்த நூல் வரிசையின் நோக்கமல்ல. எந்த அளவுக்கு அபிவிருத்தி வேலைகள், நடந்துள்ளன என்னும் விவரம் இதன் மூலம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. உருவாகி வரும் சுபிட்ச மாளிகையின் எழுத்து உருவம் இது. அந்த மாளிகையைப் பூரணமாகக் கட்டி முடிப்பதில் நடந்துள்ள பணியை அறியவும், நடக்க வேண்டிய வேலையை அனுமானிக்கவும் இது பயன்படும். ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றிக்குப் பொது மக்கள் தொடர்ந்து ஒத்துழைக்க, இந்த நூல் பெரும் தூண்டுகோலாக இருக்கும் என்று நம்புகிறோம்.

சென்னை-9
12-12-1961


நெறியாளர்,
தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை.

அட்டைப் படம்

உழைப்பின் சின்னமாக உயர்ந்தோங்கி விளங்கும் சாத்தனூர் அணை, வட ஆர்க்காட்டின் பாசன வளத்திற்கு அரண் செய்கிறது. சீர்ப் பயணச் (Tourism) சிறப்பிடமாகவும் எழில் கொழிக்கும் இவ் அணைக்கட்டை அட்டைப் படம் சித்திரிக்கிறது.

பொருளடக்கம்

வட ஆர்க்காடு மாவட்டம்.



பரப்பு 4,729 சதுர மைல்கள்

மக்கள் தொகை 31·4 லட்சம் பேர்

ஆண்கள் 15·8 லட்சம் பேர்

பெண்கள் 15·6 லட்சம் பேர்

எழுதப் படிக்கத் தெரிந்தோர் சதவீதம் 23·7

ஆண்டுச் சராசரி மழையளவு 965·7 மில்லி மீட்டர்

குறிப்பு:-

மாவட்ட எல்லை

வட்டஎல்லை

ரயில்பாதை

தேசீய நெடுஞ்சாலை

மாநில நெடுஞ்சாலை

ஆறுகள்

மக்கள் திட்டம்

பொழுது புலர்ந்தது. புள்ளினம் ஆர்த்தன. ஆர்த்தன முரசம். பொங்கியது எங்குஞ் சுதந்திர நாதம். வெள்ளிய சங்கம் முழங்கின. வீதியெலாம் அடிமை விலங்கொடித்த அணிவகுப்பின் ஆரவாரம். அந்த ஆரவாரத்தோடு நாட்டின் பொருளாதார சுபிட்சத்துக்கான புதிய போராட்டம் ஆரம்பமாயிற்று. தாழ்வும் நலிவும் நீங்கி, மகிழ்ச்சியும் பொலிவும் நிறைந்த புதுவாழ்வு காண மாபெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இடையில் ஏற்பட்ட இடையூறுகள் அனைத்துக்கும் ஈடு கொடுத்துப் புது வாழ்வு என்னும் பயிரைத் திட்டமிட்டு வளர்க்கத் தொடங்கினோம்.

1951-ல் முதல் ஐந்தாண்டுத் திட்ட வேலை ஆரம்பமாயிற்று. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்பு இப்போது மூன்றாவது திட்ட வேலை தொடங்கியிருக்கிறது. மூன்றாவது திட்டம் மிகப் பெரியது என்று அனைவரும் கருதினாலும், அதில் வெற்றி காணமுடியும் என்ற தன்னம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது. இந்தத் தன்னம்பிக்கையை நமக்குக் கொடுத்தது எது? முதல் இரு திட்டங்களில் கிடைத்த வெற்றியே.

ஐந்தாண்டுத் திட்டம் என்றால் சமுதாயத்தின் மேல்தளத்தில் உள்ள சிலர், கீழே இருக்கும் பலரை வேலை வாங்கும் திட்டமல்ல. இது மக்கள் திட்டம். மக்கள் நலனுக்காக மக்கள் ஒத்துழைப் பைக் கொண்டு நடத்தப்படும் திட்டம். இந்தியாவின் பொருளா தார ஜனநாயகத்துக்குக் கொடுக்கப்பட்ட வரிவடிவமே இது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான தேசீயத் திட்டம், மூன்று பெரும் பிரிவுகளைக்கொண்டது. மத்திய அரசாங்கத் திட்டம்; மாநில அரசாங்கத் திட்டம், தனியார்துறைத் திட்டம் என்பன அந்த மூன்று பிரிவுகள் ஆகும்.

புதிய உருக்காலைகள் அமைப்பு, கனரக யந்திரத் தொழிற் சாலை, ரசாயன உரத் தொழிற்சாலை, நிலக்கரிச் சுரங்கம், எண் ணெய் வளம் கண்டுபிடித்தல், எண்ணெய் சுத்திகரிப்பு, பெரிய துறைமுகங்கள், ரயில்வேக்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி வேலைகள் முதலியன மத்திய அரசாங்கத் திட்டம் என்ற பிரிவில் வருகின்றன.

மாநில அரசாங்கத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சமூகநலப் பணிகள், சுகாதாரம், கிராம முன்னேற்றம் முதலியன அடங்கும்.

மூன்றாவது, தனியார் துறை. ஜவுளி, சர்க்கரை, சிமிட்டி, இஞ்சினிரிங் மற்றும் இதர பொருள்கள் உற்பத்திக்கான ஸ்தாபன ரீதியான தொழில்களில் பொதுமக்கள் முதலீடும், வேளாண்மை, வீடு கட்டுதல் ஆகியவற்றில் பொதுமக்கள் முதலீடும் இந்தப் பிரிவில் சேர்ந்தவை.

திட்டச் செலவுகள்

முதல் இரண்டு திட்டக் காலங்களில் இந்தியா முழுவதற்குமாக ரூ. 10,110 கோடி செலவிடப்பட்டது. மூன்றாவது திட்டத்தில் இந்தியா முழுவதற்குமாக உத்தேசமாக ரூ. 11,600 கோடி செலவாகும். இதில் மத்திய அரசாங்கம் ரூ. 3,775 கோடி செலவழிக்கும். மாநில அரசாங்கங்கள் ரூ. 3,725 கோடி செல வழிக்கும். தனியார்துறை ரூ. 4,100 கோடி செலவிடும்.

தமிழ் நாட்டின் முதலாவது, இரண்டாவது திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 266 கோடியாகும். அதா வது முதல் திட்டத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டத் தில் ரூ. 186 கோடியும் செலவிடப்பட்டது.

திட்ட வேலைகளின் பயனாக இந்தப் பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வேளாண்மை, பாசனம், கல்வி, மின்சாரம், தொழில்கள், சமுதாய நலன், போக்குவரத்து ஆகிய எல்லாத் துறைகளிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் உணவு உற்பத்தி 38 லட்சம் டன்னாக இருந்தது. இரண்டு திட்டங்களை நிறைவேற்றிய தின் பயனாக உற்பத்தி இப்போது 53 லட்சம் டன் ஆக உயர்ந் துள்ளது. ஏக்கர் விகித மகசூலை அதிகரிக்கும் முறையில் உயர்தர வித்துக்களைப் பரப்புவதிலும் ஜப்பானியமுறைச் சாகுபடியை அனு சரிப்பதிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக மாநிலத்தில் நெல் சாகுபடியாகும் பரப்பு பூராவிலும், புஞ்செய் தானியங்கள் சாகுபடியாகும் பரபபில் 45 சதவீதத்திலும் உயர்தர வித்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. சென்ற பத்து ஆண்டு களில் வேளாண்மை, சமுதாயநலத் திட்டங்களின்கீழ் சுமார் ரூ. 42 கோடி செலவில் இந்த அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன.


பாசனமும், மின்சாரமும்

தமிழ் நாட்டில் பாசன வசதிகளைப் பெருக்க சென்ற பத்து ஆண்டுகளில் ரூ. 37 கோடிக்குமேல் செலவிடப்பட்டது. 14 பாச னத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக 4·65 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசனம் பெற்றன. ரூ. 35 கோடி செலவாகக் கூடிய பரம்பிக்குளம் - ஆளியாறு திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் 2·4 லட்சம் ஏக்கர் பாசனம் பெறும்.

மின்சாரப் பெருக்கம் தமிழ் நாட்டின் மற்றொரு முக்கிய சாதனை யாகும். சென்ற பத்து ஆண்டுகளில் மின்சார அபிவிருத்திக் காக மட்டும் சுமார் ரூ. 110 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக மின்சார வசதி பெற்ற கிராமங்களின் எண் ணிக்கை 1,610-லிருந்து 11,000-ஆக அதிகரித்துள்ளது. மின் சாரத்தால் இயங்கும் பம்பு செட்டுகளின் தொகை சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 14,000-லிருந்து 1,16,000-ஆக அதிகரித் துள்ளது.

கல்வி

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் சுமார் 16,000 ஆரம் பப் பள்ளிகள் இருந்தன. தற்போது ஆரம்பப் பள்ளிகளின் தொகை கிட்டத்தட்ட 27,000 ஆகும். 1951-ல் பள்ளிகளுக்குச் சென்ற குழந்தைகள் தொகை 18·53 லட்சம். 1961-ல் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகள் தொகை 33·80 லட்சம் ஆகும். குழந்தை கள் பள்ளிக்கு வரும்படிச் செய்வதில் ஊக்கமளிப்பதற்காக நண் பகல் உணவுத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டது. இத் திட்டப்படி, ஒவ்வொரு ஏழைக் குழந்தைக்கும் பத்துக் காசு செலவில் இலவசமாக உணவு அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் சுமார் 10 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைகின்ற னர். இலவச நண்பகல் உணவு மட்டுமின்றிச் சுமார் 3·6 லட்சம்



நெய்வேலியில் உருவாகிவரும் புதிய அனல் மின்சார நிலையம்

குழந்தைகளுக்கு இலவசமாக சீருடை வழங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடத்துவதும் கல்வித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும். இத்திட்டத்தின் மூலம் ஆங்காங்கே உள்ள பொதுமக்கள் பள்ளிக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய முன்வருகின்றனர். ரொக்கமாகவும் பொருளாகவும் உதவுகின்றனர். இந்த வகையில் அளிக்கப்பட்ட உதவியின் மதிப்பு ரூ. 6·47 கோடி.

தொழில் நுட்பக் கல்வி வசதியில் இரண்டாவது திட்டக் காலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு மொத்த இடவசதி 662 ஆகும். இரண்டாம் திட்ட முடிவில் இந்த இடவசதி 1,157-ஆக அதிகரித்தது. பாலிடெக்னிக்குகளில் இடவசதி சென்ற 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 822-லிருந்து 2,910-ஆக அதிகரித்துள்ளது.


தொழில் வளர்ச்சி

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்துள்ளது. நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டம், தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப் பட்ட மாபெரும் தொழில் முயற்சியாகும். இத் திட்டத்துக்குச் செலவு மதிப்பு 110 கோடி ரூபாய். இந்திய அரசாங்கம் இதுவரை

ரூ. 49 கோடி முதலீடு செய்துள்ளது. பழுப்பு நிலக்கரி எடுக்கும் வேலை தொடங்கி விட்டது. நெய்வேலியில் புதிய அனல் மின்சார நிலையம் 1961-62ல் உற்பத்தி தொடங்கும். முதல் கட்டத்தில் 2·5 லட்சம் கிலோவாட் உற்பத்தித் திறனுடையதாக அது இருக்கும். 1·52 லட்சம் டன் யூரியா உற்பத்தி செய்யக்கூடிய ரசாயன உரத் தொழிற்சாலையும், 3·5 லட்சம் டன் சுட்ட நிலக்கரிக் கட்டிகள் தயாரிக்கக் கூடிய ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்துவதற்கு வகை செய்யப்படுகிறது. நெய்வேலி ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் பெரிய தொழில் பிரிவுகளான இந்த வேலைகள் வெற்றி கரமாக நிறைவேறுவதை யொட்டி, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி கணிசமான முன்னேற்றத்தைக் காணும்.

சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலையும் முக்கியமான ஒரு தொழில் அபிவிருத்தி வேலையாகும். இதுவும் மத்திய அரசாங்கத் தொழில் திட்டத்தில் சேர்ந்தது. ரூ. 7·35 கோடி செலவில் அமைந்த இந்தத் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 300 பெட்டிகளுக்கு ஆசன வசதிகள் முதலியன செய்யக் கூடிய தொழில் பிரிவு புதிதாக ரூ. 3·60 கோடி செலவுமதிப்பில்

நிலத்தைக் குடைந்து மண்ணையெல்லாம் அகற்றிவிட்டு நிலக்கரியை வெட்டிக் கொண்டு வருவதென்பது சாதாரண காரியமல்ல. நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் மண்ணை அகற்றும் பெரும் பணிக்கு உரிய பெரிய யந்திரம்



ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. ரயில் பெட்டித் தொழிற்சாலையில் சுமார் 7,800 பேர் வேலை செய்கிறார்கள்.

ரயில் பெட்டி உற்பத்தியானது, பல துணைத் தொழில்கள் பெருகவும் வாய்ப்பு அளித்திருக்கின்றது. உருக்கு வார்ப்புகள், ஸ்பிரிங்குகள், ரப்பர் சாமான்கள் முதலிய சுமார் 200 வகைப் பொருள்கள் உள்நாட்டுத் துணைத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன. இதனால் சென்னை நகரின் சுற்றுப் பிரதேசங்களிலும், மற்றும் நாட்டில் பல்வேறு இடங்களிலும் துணைத் தொழில்கள் பெருக ஊக்கம் ஏற்பட்டுள்ளது.

தனியார் துறை

தமிழ் நாட்டில் தனியார் துறையில் சிமிட்டி, துணி ஆலைகள், இஞ்சினீரிங் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத்தில் 1934-க்கும் 1946-க்கும் இடையே மூன்று சிமிட்டித் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் முன்பு 7·58 லட்சம் டன்களாக இருந்தது. இப்பொழுது உற்பத்தி 8·13 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. ராஜபாளையம் பகுதியில் ஒரு சிமிட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1·94 லட்சம் டன்களாகும். இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்றும் திட்டக் காலத்தில் இரண்டு சிமிட்டித் தொழிற்சாலைகளைப் புதிதாகத் தொடங்கச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

துணி உற்பத்தித் தொழிலைப் பொறுத்த வரையில் இந்தியாவில் 131 லட்சம் கதிர்கள் இருக்கின்றன. இவற்றில் 31 லட்சம் கதிர்கள் தமிழ் நாட்டு ஆலைகளில் உள்ளன. 1951-ல் மாநிலத்தில் 71 ஆலைகள் இருந்தன. தற்போது 134 ஆலைகள் இருக்கின்றன. துணி ஆலைத் தொழிலினால் 1950 ல் 90,000 பேர்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. இன்று சுமார் 1·2 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைத்து வருகிறது.

தனியார் துறையின்கீழ், வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி, சென்னை அருகே திருவொற்றியூரில் உள்ள ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை, அம்பத்தூரில் உள்ள டி. ஐ. சைக்கிள் கம்பெனி, எண்ணூரில் உள்ள அசோக் லேலெண்ட் லிமிடெட் ஆகிய தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. மேட்டூர் அருகில் மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. ஈரோட்டுக்கருகில் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது; இதில் அரசாங்கம் ரூ. 1 கோடி முதலீடு செய்ய முன் வந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் சாகுபுரத்தில் தாரங்கதரா ரசாயனத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 30,000 டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்து வருகின்றது. காஸ்டிக் சோடா தயாரிப்பில் இது இந்தியாவிலேயே பெரிய தொழிற்சாலையாகும்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்துக்கருகில் ரெயான் என்னும் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வேலை தொடங்கி விட்டது. இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.


அம்பத்தூரில் உள்ள டன்லப் ரப்பர் கம்பெனி, மேட்டுப் பாளையம் செயற்கை வைரத் தொழிற்சாலை ஆகியனவும் தனியார் துறையில் குறிப்பிடத்தக்க தொழில் அமைப்புக்களாகும்.

சர்க்கரை ஆலைகள்

ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப் பின் தமிழ் நாட்டில் நெல்லிக் குப்பம், புகளூர், பாண்டிய ராஜபுரம் ஆகிய இடங்களில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருந்தன. பின் இரண்டாம் திட்டக் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டம் வடபாதி மங்கலத்திலும், திருச்சி மாவட்டம் பேட்டைவாய்த்தலையிலும் இரு சர்க்கரை ஆலைகள் அமைக்கப் பட்டன. இவையல்லாமல் உடுமலைப்பேட்டை, ஆம்பூர், படாலம் ஆகியவைகளில் கூட்டுறவுச்சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்துவதில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது.

சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கிண்டியிலும், விருதுநகரிலும் தொழிற் பண்ணைகள் அமைக்கப் பட்டன. ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, பேட்டை, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் தொழில் பேட்டைகள் அமைக் கப்பட்டுள்ளன. காட்பாடியில் ஒரு தொழில்பேட்டை உருவாகி வரு கிறது. இவற்றின் மூலம் சிறு தொழில்கள் வளர வாய்ப்பு ஏற் பட்டுள்ளது. பயிற்சி—உற்பத்தி நிலையங்கள் 44 ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்தத் தொழில் வளர்ச்சி முக்கியமாக இரண்டாவது திட்டத்தில் ஏற்பட்டதாகும்.

சென்ற பத்து ஆண்டுகளில் சாலை வசதி 21,198 மைல்களி லிருந்து 25,878 மைல்களாக அதிகரித்துள்ளது.



பெரிய துறைமுகங்களையும், ரயில்வேக்களையும் அபிவிருத்தி செய்வது மத்தியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். உலக பாங்கியிட மிருந்து கடன் உதவியுடன் சென்னைத் துறைமுகத்தை ரூ. 16 கோடி செலவில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டமும், தாம்பரம்—செங் கற்பட்டு—விழுப்புரம் இடையில் மின்சார ரயில் அமைப்புக்கான திட்டமும் செயலாக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவ வசதிகள்

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் உள்ள மருத்துவ மனை களில் மொத்தம் 8,500 படுக்கைகள் இருந்தன. தற்போது படுக்கை களின் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்துள்ளது. செங்கற் பட்டு, பாளையங்கோட்டை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், கடலூர், சேலம் ஆகியவைகளில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்குக் கட்டிடங்கள் கட்டும் வேலை ரூ. 53 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சா வூரில் ரூபாய் 130 லட்சம் செலவில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கிராமப் புறங்களில் 110 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

கூட்டுறவு

1955-56 ல் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் குடியானவர் களுக்கு ரூபாய் 6 கோடி வேளாண்மைக் கடன் வசதி அளிக்கப் பட்டது. 1960-61 ல் இது ரூபாய் 25 கோடியாக அதிகரித்திருக் கிறது. மாநிலத்தில் தற்போது எல்லாக் கிராமங்களும் கூட்டுறவுச் சங்க அனுகூலங்களைப் பெற்று வருகின்றன. முழுக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 43 வட்டாரங்களிலுள்ள கிராம மக்கள் பயனடை கின்றனர். இவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் குறைந்த காலக் கடன் வசதிகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற வகை செய்யப்பட்டிருக்கிறது. இக் குடியானவர்களுக்கு ஜாமீன் இன்றி முன் பணம் கொடுப்பதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற் படக்கூடிய நஷ்டத்திற்கு அரசாங்கம் ஈடு செய்யும். தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிரச் சாகுபடித் திட்டம் அமுலிலிருந்து வருகிற 23 வட்டாரங்களும் இதில் அடங்கும்.

தமிழ் நாடு 375 அபிவிருத்தி வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. 363 வட்டாரங்களுக்குப் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப் பட்டுள்ளன. அடி மட்டத்தில் இந்த ஜனநாயக நிர்வாக முறையானது நாட்டின் அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கும்.

சென்ற பத்து ஆண்டுகளில் பின்னடைந்த வகுப்பினர் நிலையில் அபிவிருத்தி சம்பந்தமாக முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் திட்டம் முதற்கொண்டு ஹரிஜன நலத் திட்டங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வந்தது. அத்துடன் புதிய ஹரிஜன நலத் திட்டங்களுக்காக ஆண்டுதோறும் மேற்கொண்டு சுமார் 2 கோடி செலவு செய்யப்படுகிறது. சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 1·71 லட்சம் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. 27,000 உணவு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. ஹரிஜனங்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 20,200 வீடுகள் கட்டப்பட்டன.

வீட்டு வசதி

சென்னை நகரில் சேரிச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 478 புதிய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன; 1,546 மனை இடங்கள் அபி விருத்தி செய்து தரப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்காக அரசாங்க உதவியுடன் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1,377 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 239 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

குறைந்த வருமானக்காரர்களுக்கு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 3,160 வீடுகள் கட்டப்பட்டன. 467 மனை இடங்கள் ஏற்படுத்தித் தரப்பட்டன. இந்திய ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் நிதி உதவியுடன் கூடிய நடுத்தர வருமானக்காரர்களுக்கான வீடு வசதித் திட்டத்தின்கீழ் 120 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. போலீஸ்காரர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 260 லட்சம் செலவில் சுமார் 4,200 வீடுகள் கட்டப்பட்டன.

வேளாண்மைப் பெருக்கம், மின்சார வசதிகளில் பெரும் முன்னேற்றம், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டவேலை, தொழில் நுட்பக் கல்வியில் அதிகப்படியான பயிற்சி வசதிகள் முதலியன காரணமாகத் தமிழகத்தின் தொழில் வளத்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் பலமான அஸ்திவாரம் அமைக்கப்பட்டுவிட்டது. அரசாங்கத் தொழில் துறை, தனியார்துறை இரண்டிலுமே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் மாவட்டவாரியாக முன்னேற்ற வேலைகளைத் தொகுத்துத் தரும் நூல் வரிசையில் வட ஆர்க்காடு மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளை அடுத்துவரும் அத்தியாயங்களில் காணலாம்.

" தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடுதீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்துளிசிதற
ஆமாம்பிணை அணையும்பொழில் அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினையிலரே "

—சம்பந்தர்

வளமார்



வட ஆர்க்காடு

அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், அழகிய ஏரி குளங்கள், கலையின் நிலைக்களனாகவும், வரலாற்றுச் சின்னமாகவும் விளங்கும் வேலூர்க் கோட்டை, அப்பரும் ஆளுடைப்பிள்ளையும் பாடிப் பரவிய தெய்வத் தலமாம் திருவண்ணாமலை, கலைச் செழிப்பும் பயன் செறிவும் மிக்க பல தொழில்களின் வளர்ச்சி முதலிய காரணங்களால் வட ஆர்க்காடு புகழ் எய்தியுள்ளது.

தமிழ் நாட்டின் பெரிய மாவட்டங்களுள் ஒன்றாக வட ஆர்க்காடு விளங்குகிறது. இம்மாவட்டம், ஆந்திரம், மைசூர் ஆகிய மாநிலங்களின் எல்லையில் அமைந்துள்ளது. இங்குள்ள எண்ணற்ற கோட்டைகளும், போர்க்களங்களும் நமக்குச் சரித்திர நிகழ்ச்சிகளை விளக்கிக்கொண்டிருக்கின்றன. இங்கே நடைபெற்ற சில நிகழ்ச்சிகள், ஆங்கிலேயர்களின் ஆட்சி இந்நாட்டில் வேரூன்ற உதவின. இதனாலும் வரலாற்று முக்கியத்துவம் பெற்று இம்மாவட்டம் திகழ்கிறது.

இம்மாவட்டத்திற்கு ஆர்க்காடு என்று பெயர்வரக் காரணம் என்ன? முதலாவது, ஆர் என்றால் ஆத்திமரம் என்று பொருள்.


ஆகையினால் ஆர்க்காடு என்பது, ஆத்திமரங்கள் நிறைந்த பகுதியைக் குறிக்கிறது. இதுவே பொருந்தக் கூடிய காரணமாக இருக்கிறது. இதனை விலக்கிப் புராணங்களை ஆதாரமாகக் கொண்டு, ஆறு காடுகள் இருந்த இடம் ஆற்காடு ஆயிற்று என்று கூறுவாரும், ஆறும் காடும் நிறைந்த பகுதி ஆகவே ஆற்காடு ஆயிற்று என்று உரைப்பாரும் உள்ளனர்.

ஆர்க்காடு என்பது ஒரு மாவட்டத்திற்கும் ஒரு நகரத்திற்கும் பெயராக இருக்கிறது. ஆர்க்காடு நகரம் 18-ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றது. இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட நவாபுகள் மூலமாக இங்கு ஆங்கிலேய ஆட்சிக்கு வேரூன்றப் பெற்றது. ஆங்கிலேயர்கள் தங்களது ஆட்சிக் காலத்தில் ஆர்க்காட்டின் பெயரை இரு மாவட்டங்களுக்குச் சூட்டினர். இவ்வாறு வட ஆர்க்காடு மாவட்டமும், தென் ஆர்க்காடு மாவட்டமும் தோன்றின.

வரலாறு

சங்க காலத்தில் அருவா நாட்டின் ஒரு பகுதியாகவும், பிற்காலத்தில் தொண்டை நாட்டின் ஒரு பகுதியாகவும் வட ஆர்க்காடு மாவட்டம் விளங்கியது. தொண்டை நாட்டில் கி. பி. 300-ல் பல்லவர் ஆட்சி ஏற்பட்டது. திருப்புறம்பியப் போரில் பல்லவர் தோற்றதனால் சோழர் ஆட்சி தோன்றியது. இடையே, இராட்டிரகூட

வரலாற்றுச் சிறப்புடைய வேலூர்க் கோட்டை



மன்னனை மூன்றும் கிருட்டினன் தக்கோலம் போரில் பராந்தக சோழனை வெற்றி கண்டான். அதனால், கி. பி. 968 வரை இராட்டிரகூடர் ஆட்சி செலுத்தினர். சோழர்களின் ஆட்சி கி. பி. 1300 வரை நிலவியது. இவர்களது ஆட்சிக் காலத்தில் சாலைகளும், சத்திரங்களும் ஏற்பட்டன.

வட ஆர்க்காடு மாவட்டம் கி. பி. 15ம் நூற்றுண்டில் விஜயநகர ஆட்சியின் கீழ் வந்தது. வேலூரில் கோட்டையும், விஜயநகர மாளிகையும் கட்டப்பட்டன. விஜயநகரம் அழிவெய்தியதைத் தொடர்ந்து சில ஆண்டுகள் மராத்திய மன்னர்கள் செங்கோல் செலுத்தினர். பின்னர் நிலைபெற்ற ஆட்சியாகக் கர்நாடக நவாபு களின் நிர்வாகம் ஏற்பட்டது. முஸ்லிம்களின் ஆட்சியில் ஆர்க்காடு தலைநகராயிற்று.

பதினெட்டாம் நூற்றுண்டில் இம் மாவட்டத்தில் ஆர்க்காட்டு நவாபு, ஐதர் அலி, ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர்கள் ஆகியோ ரிடையே தொடர்ந்து பலப் பரீட்சை நடைபெற்றது. மாவட்டத் தில் பல ஊர்களில் கடும் போர்கள் மூண்டன. எனினும் இறுதி யில் ஆங்கிலேயர்கள், அனைவரையும் வெற்றிகொண்டனர். கப்பம் கட்ட மறுத்த பாளையக்காரரை அடக்கிப் பல கோட்டை களை அழித்து, வீரர்கள் பலரை வீழ்த்தித் தங்கள் ராணுவ பலத்தால் இம்மாவட்டத்தை அடக்கி ஒடுக்கினர். கி. பி. 1800 முதல் 1947 வரை ஆங்கிலேயர்களின் ஆட்சி இங்கு நடை பெற்றது. 1947 ஆகஸ்டு 15-இல் அடைந்த சுதந்திரத்தின் பயனுக இன்று இம்மாவட்டம் கூட்டுறவு, போக்குவரத்து, கல்வி முதலிய துறைகளில் நல்ல முன்னேற்றம் எய்தி வளர்ந்து வருகிறது. இதற் குச் சிறந்த எடுத்துக் காட்டாகச் சாத்தனூர் அணை விளங்கு கிறது.

நிர்வாகப் பிரிவு

வட ஆர்க்காடு மாவட்டத்தின் வடக்கில் சித்தூர் மாவட்ட மும், கிழக்கில் செங்கற்பட்டு மாவட்டமும், தெற்கில் தென் ஆர்க் காடு மாவட்டமும், மேற்கில் சேலம், சித்தூர் மாவட்டங்களும் எல்லைகளாக உள்ளன. இம்மாவட்டத்திலுள்ள பதினேரு வட்டங் களும் நிர்வாக வசதிக்காக நான்கு ரெவின்யூ டிவிஷன்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு:—

டிவிஷன் பெயர்	வட்டங்கள்
1. ராணிப்பேட்டை	1. வேலூர்
	2. வாலாஜா
	3. அரக்கோணம்


2. செய்யாறு	1. ஆரணி 2. செய்யாறு 3. வந்தவாசி
3. திருப்பத்தூர்	1. திருப்பத்தூர் 2. குடியாத்தம்
4. திருவண்ணாமலை	1. திருவண்ணாமலை 2. செங்கம் 3. போளூர்

இருப்புப் பாதைகள்

வட ஆர்க்காடு மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 4,654 சதுர மைல்களாக இருந்தது. பின்னர், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சித்தூர் மாவட்டத்திலிருந்து 32கிராமங்கள் இம்மாவட்டத்திற்கு மாற்றப்பட்டன. சென்னையையும், கோயம்புத்தூரையும் இணைக்கும் பிராட் கேஜ் ரயில் பாதை இம்மாவட்டத்தின் வட பகுதியிலும், ரேணிகுண்டாவையும், விழுப்புரத்தையும் இணைக்கும் மீட்டர் கேஜ் ரயில் பாதை ஏறத்தாழ மாவட்டத்தின் மத்தியில் வடக்கு தெற்காகவும் போகின்றன.

ஊர்கள்

இம்மாவட்டத்தில் 2,116 கிராமங்களும், 22 நகரங்களும் இருக்கின்றன. இவ் இருபத்து இரண்டு நகரங்களில் பதினொரு நகரங்களில் நகராட்சி மன்றங்கள் உள்ளன. வேலூர் நகரம் இம் மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். காட்பாடி-விழுப்புரம் மீட்டர் கேஜ் ரயில் பாதையில் காட்பாடிக்கு மூன்று மைல் தெற்கில் வேலூர் அமைந்துள்ளது. திருவண்ணாமலை ஒரு புண்ணியத் தலமாக விளங்குகிறது. வனப்பு மிக்க இம்மலையில், கார்த்திகைத் திருநாளில் ஏற்றப்படும் தீபத்தைக் காண ஆண்டுதோறும் பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வருகின்றனர். ராணிப்பேட்டையில், தமிழ்நாடு அரசாங்கத்தால் நடத்தப்படும் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையம், பாரி கம்பெனி மண் பாண்டப் பிரிவு முதலியவை இருக்கின்றன. இவற்றால் இந்நகரம் புகழ்பெற்று விளங்குகிறது. ராணிப்பேட்டை, ஆம்பூர், விஷாரம், வாணியம்பாடி, பேரணாம்பட்டு ஆகியவை தோல் பதனிடு தொழிலுக்குப் பெயர் பெற்றுள்ளன. இத்தொழிலின் மூலம் நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தமிழ்நாடு - மைசூர் - மத்திய அரசாங்கங்களால் நடத்தப்படும் கம்பளத்தயாரிப்பு தொழிற்சாலை ஆகியவை ஆம்பூர் நகரை அடுத்து அமைந்திருக்கின்றன. வந்தவாசி வரலாற்றில் இடம் பெற்ற ஊர் ஆகும். வந்தவாசிப் போரில்தான் பிரஞ்சுக்காரர்கள் தோல்வி



திருவண்ணாமலைக் கோயில்

யடைந்து, இந்தியாவில் தங்கள் பிடிப்பை இழந்தார்கள். குடியாத்தம் கைத்தறிக்குப் பெயர் பெற்ற இடம். காட்பாடி, திருப்பத்தூர், வாணியம்பாடி, வாலாஜா, அரக்கோணம், போளூர் ஆகியவை இம் மாவட்டத்தின் மற்ற முக்கிய நகரங்கள் ஆகும்.

மலைகள்

இம்மாவட்டத்தில் ஜவ்வாது மலை உயரமான மலையாகும். இம்மலை திருப்பத்தூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியிலும், செங்கம் வட்டத்தின் வடமேற்குப் பகுதியிலும், போளூர் வட்டத்தின் மேற்குப் பகுதியிலும் பரவியுள்ளது. வேலூர் வட்டத்திலும் இது வியாபித்துள்ளது. ஜவ்வாது மலை பொதுவாக 2,500 அடி உயரம் உள்ளது. சிகரங்கள் 4,200 அடிவரை உயர்ந்திருக்கின்றன.

திருப்பத்தூர் வட்டத்தின் மத்தியப் பாகத்தில் ஏலகிரி மலை உள்ளது. செங்கம் வட்டத்தின் தென் பகுதியில் உள்ள மலை தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த காயன் மலைத்தொடரின் பகுதியாகும். வேலூர், போளூர், செங்கம் வட்டங்களில் அநேக குன்றுகள் ஆங்காங்கே இருக்கின்றன. மேற்கிலிருந்து கிழக்கே செல்லச் செல்லப் பொதுவாக நிலம் சரிவாக உள்ளது.

தேசிய வனக் கொள்கைப்படி ஒரு நாட்டில் மூன்றில் ஒரு பகுதி காடாக இருக்க வேண்டும். தமிழ் நாட்டில் மொத்தம்

சுமார் 17 சதவித நிலப் பகுதியே காடாக இருக்கிறது. இம் மாவட்டத்தில் 1,343 சதுரமைல் காடுகள் உள்ளன. இந்தப் பரப்பளவு, மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பாகத்திற்குக் கொஞ்சம் குறைவு. ஆகையினால், வட ஆர்க்காடு மாவட்டம் வன வளத்தில் சிறந்து விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

குடியாத்தம் வட்டத்திலுள்ள காடுகள் விறகு மரங்களும், முட் புதர்களும் நிறைந்தவை. மற்ற வட்டங்களில் உள்ள ஒதுக்கப்பட்ட காடுகளில் மலைக் காடுகள், சமவெளிக் காடுகள், புதர்ப் பகுதிகள் முதலானவை அடங்குகின்றன. மலைப்பகுதி காடுகளில் சந்தன மரங்களும், மூங்கிலும் கிடைக்கின்றன.

மழை அளவு

தென் மேற்குப் பருவக் காற்றினாலும், வட கிழக்குப் பருவக் காற்றினாலும் இம் மாவட்டத்தில் மழை பெய்கிறது. ஆயின், இவை இரண்டும் இப் பகுதியை அடையும் பொழுது வேகம் குறைந்து விடுகின்றன. ஆகையினால், பொதுவாக இங்குப் போதுமான அளவு மழை பெய்வது இல்லை. இம் மாவட்டத்தின் பல்வேறு வட்டங்களிலும் பெய்யும் ஆண்டுச் சராசரி மழை அளவு பின் வருமாறு :—

வட்டம்	ஆண்டு மழை அளவு (அங்குலங்களில்)
குடியாத்தம்	33·09
வேலூர்	42·30
வாலாஜா	38·22
அரக்கோணம்	39·05
திருப்பத்தூர்	34·42
போளூர்	39·82
ஆரணி	39·27
செய்யாறு	41·12
வந்தவாசி	44·81
செங்கம்	38·44
திருவண்ணாமலை	40·53

பருவ நிலை

அரக்கோணம், செய்யாறு, போளூர், வந்தவாசி ஆகிய இடங் களில் ஆண்டு முழுவதும் அதிகக் குளிர் இல்லாமலும், அதிக வெப்பம் இல்லாமலும் சுமாரான சீதோஷ்ண நிலை இருக்கிறது. ஆயின், வேலூர், ஆரணி, வாலாஜா, குடியாத்தம் ஆகிய வட்டங் களில் குன்றுகளும், மலைகளும் இருக்கின்ற காரணத்தினால் கோடையில் வெப்பமாகவும், குளிர் காலத்தில் குளிராகவும் இருக் கிறது. திருவண்ணாமலை, செங்கம், திருப்பத்தூர் ஆகிய இடங் களில் குளிர் காலத்தில் குளிராகவும், மற்றக் காலங்களில் மித மான சீதோஷ்ண நிலையாகவும் இருக்கிறது.

இம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதி ஏறத்தாழ உடைப்பு இல்லாத ஒரே சமவெளியாக இருக்கிறது. மத்தியப் பகுதியும், தெற்குப் பகுதியும் அநேகமாக மலைப்பாங்காய் இருக்கின்றன. மேற்குப் பகுதியானது, சித்தூர் மாவட்டத்தின் கங்குண்டி ஜமீனுடு கூட மைசூர் பீடபூமியை நோக்கிப் படிப்படியே உயர்ந்து செல்கிறது. இது மணல் சார்ந்த குறுமண் பூமி. பதினறு சத வீத பூமி கரிசல் மண் ஆகும். பாலாறு, பெண்ணை, செய்யாறு ஆகிய பகுதிகளில் இந்தக் கரிசல் மண் காணப்படுகிறது. குடியாத்தம், வாலாஜா, அரக்கோணம், செய்யாறு, வேலூர் ஆகிய வட்டங்களில் களிமண் வகைகள் காணப்படுகின்றன.

பாசனம்

வட ஆர்க்காடு மாவட்டம் பெரும்பாலும் வறட்சிப் பிரதேசம் ஆகும். இம் மாவட்டத்தில் ஓடும் பாலாறு, செய்யாறு, பெண்ணை ஆகிய ஆறுகள், இப் பிரதேசத்தின் வேளாண்மைச் செழிப்புக்கு ஓரளவு காரணமாகும். இம் மூன்று ஆறுகளின் குறுக்கேயும் அணைகள் கட்டப்பட்டுள்ளன. வெள்ளக் காலங்களில் இவ்வணைகள் போதுமான நீரைத் தேக்கி வைக்கின்றன. இவற்றிலிருந்து நூற்றுக்கணக்கான குளங்கள் நீர் நிரம்பப் பெற்றுப் பாசன வளர்ச்சிக்கு உதவுகின்றன. இவ் வகைக் குளங்களேயல்லாமல், பெரும்பாலும் மழை நீரையே நம்பி இருக்கும் குளங்களும் உள்ளன. மேலும் ஆற்றுக் கால்வாய்கள், ஊற்றுக் கால்வாய்கள், கஸக் கால்வாய்கள் ஆகியவையும் இம் மாவட்டத்தில் பாசன ஆதாரங்களாக விளங்குகின்றன. பூமிக்கு அடியில் அபரிமிதமாக இருக்கும் நீரைப் பயன் படுத்திக்கொள்ள மணற்பாங்கான படுகைகளில் பல மைல் நீளத்திற்குக் கால்வாய்கள் தோண்டப் படுகின்றன. ஊற்றுக் கால்வாய்கள் முக்கியமாகக் குடியாத்தம், வேலூர் வட்டங்களில் தோண்டப்படுகின்றன. மலைகளில் உற்பத்தியாகும் பல ஓடைகள் எண்ணற்ற குளங்களுக்குத் தண்ணீர் அளிக்கின்றன. ஆனல் இவற்றை நிச்சயமாக நம்ப முடியாது. ஆகையினல் கிணறுகள் மிகுந்த அளவில் தோண்டப்பட்டுள்ளன. இம் மாவட்டம் பெரும்பாலும் மழையை நம்பி இருப்பதனல், மழை பொய்த்துவிடும் காலங்களில் விளைச்சலும் பாதிக்கப்படுகிறது.

பயிர்கள்

உஷ்ணப் பிரதேசத்துப் பயிர்கள் இம் மாவட்டத்தில் விளைகின்றன. நெல், கரும்பு, சோளம், ராகி ஆகியவை இங்கு விளையும் முக்கியமான உணவுப் பயிர்கள். நிலக் கடலை முக்கியமான வர்த்தகப் பயிராகும். எள்ளும் அதிக அளவில் விளைகிறது. கரும்பு அதிக அளவில் பயிராகிறது. ஆம்பூரில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தொடங்கப்பட்டிருப்பதனல் மாவட்டத்தின் கீழ்ப் பகுதி வட்டங்களில், முக்கியமாகப் பாலாற்றுப் படுகைகளில், கரும்பு பயிராகும் பரப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்ப

சந்தனக் கட்டை, மூங்கில், விறகு மரங்கள் முதலியவையும், புளி போன்ற காடுபடு சிறு பொருள்களும் இம் மாவட்டத்தின் முக்கிய வனப் பொருள்கள் ஆகும்.

மக்கள் தொகை

இம் மாவட்டத்தின் மக்கள் தொகை 1941-ம் ஆண்டிற்கும் 1951-ம் ஆண்டிற்கும் இடையில் 10·9 சத விதம் உயர்ந்தது. அதாவது மக்கள் தொகை 25,77,540 லிருந்து 28,59,157 ஆக உயர்ந்தது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட கடந்த பத்தாண்டுகளில் 8·4 சதவிதம் உயர்ந்து, 31, 41, 983 ஆக அதிகரித்திருக்கிறது. (1951-1961 காலத்தில் ஏற்பட்ட எல்லை மாற்றங்களும் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன.) தமிழ்நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள குறைந்த அளவு மக்கள் தொகை அதிகரிப்பை ஒட்டியே இந்த உயர்வும் உள்ளது. பின்வரும் முக்கியப் புள்ளி விவரங்களிலிருந்து கடந்த பத்தாண்டுகளில் இறப்பைக் காட்டிலும் பிறப்பு 3,55,674 அதாவது 12·5 சதவிதம் அதிகரித்திருப்பது தெரிய வருகிறது.

இறப்பு விகிதம் கடந்த பத்தாண்டுகளில் குறைந்து வந்திருக்கிறது.

ஆண்டு	பிறப்பு	ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் பேருக்குப் பிறப்பு விதம்	இறப்பு	ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் பேருக்கு இறப்பு விதம்
1951—52	70,382	27·81	43,958	17·4
1952—53	75,829	29·96	45,348	17·9
1953—54	61,685	24·37	35,051	13·8
1954—55	74,751	29·54	32,669	12·9
1955—56	82,623	32·64	35,016	13·8
1956—57	70,035	30·44	34,994	13·8
1957—58	71,124	28·10	41,011	15·9
1958—59	79,456	31·04	36,656	14·9
1959—60	78,831	31·01	33,213	13·1
1960—61	68,067	26·89	39,193	15·5
ம்	7,32,783		3,77,109	

விண்ணப்பதாரர்களை வேலையில் அமர்த்தும் புள்ளி விவரங்களை ஆராய்ந்து பார்த்தால் முதல் திட்டக் காலத்திலும், இரண்டாவது திட்டக் காலத்திலும் வேலை வாய்ப்புக்கள் பெருகி வந்திருப்பது புலனாகிறது. வேலூர் வேலை தேடித்தரும் அலுவலகம் (Vellore Employment Office) கடந்த பத்தாண்டுகளில் சுமார் 16,500 பேரை வேலையில் அமர்த்தியுள்ளது. அதே நேரத்தில், வேலை தேடி வருவோர் தொகையும் ஒத்த அளவில் அதிகரித்து வந்துள்ளது. வேலை தேடித்தரும் அலுவலகத்தின் மூலமாக வேலை பெற வருவோர் தொகை 1951 மார்ச் இறுதியில் 2,348 ஆக இருந்தது: இது 1961 மார்ச் இறுதியில் 10,114 ஆக அதிகரித்தது.

1961 மார்ச் இறுதியில் வேலை தேடி வந்த விண்ணப்பதாரர்களை ஆராய்ந்ததில் சுமார் 66 சதவீதம் பேர் தொழில் நுட்பமில்லாத வேலைகளையும், 34 சதவீதம் பேர் தொழில் நுட்ப வேலைகளையும் நாடி வந்தவர்கள் என்பது தெரிந்தது. தொழில் நுட்ப அலுவலாளர்கள் போதிய அளவில் கிடைக்கவில்லை.

வேலை வாய்ப்பு

தொழில் நுட்பம் தேவைப்படாத வேலைகளுக்குத்தான் தேவைக்கதிகமான நபர்கள் வந்தனர். வேலை வாய்ப்புத் தகவல் நிலவரங்களைச் சேகரிக்கும் பணி அரசாங்கத் துறையில் வட ஆர்க்காட்டில் 1958-ல் தொடங்கப்பட்டது. இது பின்னர் தனியார் துறைக்கும் 1960-ல் விஸ்தரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களிலிருந்து, கடந்த மூன்றாண்டுகளில் அரசாங்கத் துறையில் வேலை வாய்ப்புக்கள் ஏறத்தாழ இரட்டித்திருப்பது புலனாகிறது. தனியார் துறையில் வேலை வாய்ப்பு 1956-ல் 12,182 லிருந்து 1961-ல் 18,613 ஆக அதாவது 50 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து தனியார் துறையிலும் வேலை வாய்ப்பு அபிவிருத்தி அடைந்து வந்துள்ளது தெளிவாகிறது. அரசாங்க, தனியார் நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்தும், வேலூர் வேலை தேடித்தரும் அலுவலகத்தில் ஏற்பட்ட அனுபவத்திலிருந்தும் பின்வரும் வேலைகளுக்குப் போதிய ஆட்கள் இல்லாத நிலவரம் புலனாகிறது.

சிவில், மெக்கானிக்கல், எலக்ட்ரிகல் எஞ்சினீர்கள், எஞ்சினீயரிங் போதகாசிரியர்கள், டாக்டர்கள், கணிதம், விஞ்ஞானம் போதிக்கும் உயர்தரப் பள்ளி ஆசிரியர்கள், சுகாதார அதிகாரிகள், தகுதி வாய்ந்த அக்கௌண்டெண்ட்டுகள், லேபரட்டரி டெக்னீஷியன்கள், இந்தி ஆசிரியர்கள், பைப் லைன் பொருத்துவோர்கள், குழாய் இன்ஸ்பெக்டர்கள், மருந்து கலக்குவோர்கள்.

வேலை காலி பற்றிக் கட்டாயமாக அறிவித்தாக வேண்டும் என்ற விதி காரணமாக அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் தகுதியான ஆட்களுக்கு வேலை கிடைக்க வழியேற்படுகிறது. வேலை தேடிவரும் இளைஞர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக, வேலை தேடித்தரும் அலுவலகத்தில் ஆலோசனைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.



பூம்புனல்

"நீரின்று அமையாது உலகு" என்பது வள்ளுவர் வாய்மொழி. உலகம் தழைப்பதற்கு நீரே காரணம். வானத்திலிருந்து மழைத் துளி கீழே விழாவிட்டால், பூமியில் எதுவும் விளைவது அரிது. அதனால், உயிருக்கு வேண்டிய உணவின் பெருக்கத்திற்கு நீர்வளம் மிக இன்றியமையாதது என்பதைத் தெளிவாக உணரலாம். இந்த உண்மையினை,

> "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
> உணவெனப் படுவது நிலத்தொடு நீரே."

என்ற புறநானூற்று வரிகள் நன்கு உணர்த்துகின்றன.

"மாமழை போற்றுதும்!" என்று வாழ்ந்த நம் முன்னோர்க்கு வானம் வரையாது வழங்கி வந்தது. அத்துடன், உலகு புரந்து ஊட்டும் அளவற்ற ஆறுகள் நிலச் செழிப்பை மிகுவித்தன. அந் நாளிலேயே நம் முன்னோர் குளங்களையும் ஏரிகளையும் வெட்டி வைத் தனர். நிலம் குழிவான இடங்களில் எல்லாம் நீரைத் தேக்கித் தம் புகழையும் நிலைநிறுத்தினர். அதற்குக் காரணம் என்ன? நீர்வளம் மிகுதியாக இருக்கின்ற காலத்தில் அதை வறிதே கடலில்

கலக்கும்படி விடுவதால், மன்னுயிருக்குப் பயன் ஒன்றும் இல்லை. மாறாக, அதனைத் தடுத்துத் தேக்கி வைத்தால், தேவைப்படும் பொழுது நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்; கழனிக்குப் பக்கத்தில் ஏரி, குளம் இருந்தால், அவற்றின் ஓதம் நிலவளத்தை மிகுவிக்கும்; மழை தவறிப்போகும் காலத்தில் நாம் கலங்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த உண்மைகளை நாம் இன்று போற்றிப் பின்பற்ற வேண்டியது மிக முக்கியமாகும். ஏனெனில் நமக்கு அடிக்கடி பருவ மழை பொய்த்துப் போகிறது. அதனால் விளைச்சல் குன்றுகிறது.

நீருயர நெல்லுயரும்

இன்று மக்கள்தொகை மிகுதியாக இருக்கின்ற காரணத்தினால் விரிந்த அளவில் வேளாண்மையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. உணவுப் பெருக்கத்திற்கு இருபோகம், முப்போகம் விளைவிக்க வேண்டியுள்ளது. இதனால், பேரணைகள் பலவற்றை நாம் உருவாக்கியுள்ளோம். அந்நியர் ஆட்சிக் காலத்தில் குறைவான அணைக்கட்டுகளே கட்டப்பட்டன. ஆயின் சுதந்திரம் பெற்ற பின்னர், நாம் பல பெரிய நீர்த் தேக்கங்களையும், எண்ணற்ற சிறு அணைக்கட்டுகளையும் உருவாக்கியுள்ளோம். இவற்றால் பாசனப் பரப்பு அதிகமானதுடன், ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டது; இவற்றைச் சார்ந்த சிறு தொழில்கள் வளர்ச்சியடைந்தன; உழவரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

நீரைத் தேக்கி, உற்பத்தியை உயர்த்துவதோடு அணைக்கட்டுகளின் பயன் முடிவடைந்துவிடுவது இல்லை. பெருமழைக் காலங்களில் வெள்ளம் கரைபுரண்டு ஊர்களை அழித்துவிடாமலும் அவை பாதுகாக்கின்றன. இதனால், வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் அணைகளைக் கட்டிப் பாசன வளத்தை மிகுவிக்கச் சுதந்திர அரசாங்கம் முனைந்து செயலாற்றியது.

கிடைக்கும் நீர் வசதிகளைத் திட்டமிட்டுத் தக்க வழியில் பயன்படுத்திக் கொள்வதைப் பாசனம் என்று கூறலாம். இது தமிழருக்குப் புதிய கலையன்று; தொன்றுதொட்டே நிலவி வருவது. வட ஆர்க்காட்டில் பருவ மழை தவறிவிடுகிறது; போதிய அளவு மழை பெய்வது இல்லை. ஆகையினால், இங்குப் பாசனத் திட்டங்களுக்குச் சிறப்பிடம் உண்டு. இவற்றின்மூலம் நல்ல வளமான பாசன ஏற்பாடுகளைச் செய்தால்தான், போதிய மழையில்லாக் குறையை ஈடுசெய்ய முடியும்.

நிர்வாக நன்மையைக் கருதி இப்பொழுது, இருக்கின்ற ஏரி, குளங்களை இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். அவற்றுள்

ஒன்று சிறு பாசன ஆதாரங்கள்; இன்னொன்று பெரும் பாசன ஆதாரங்கள். இருநூறு ஏக்கர்களுக்குமேல் ஆயக்கட்டு உள்ள ஏரி, குளம் பெரும் பாசன ஆதாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பொதுப் பணித்துறை (Public Works Department) நிர்வகித்துக்கொள்ளுகிறது.


வட ஆர்க்காடு மாவட்டத்தில் மூன்று முக்கிய அணைக்கட்டுகள் உள்ளன; பாலாறு அணை, செய்யாறு அணை, பெண்ணை அணை என்பன அவை. ஆர்க்காடு நகரத்துக்கு நான்கு மைல் கீழே பாலாறு அணை அமைந்திருக்கிறது. பாலாறு அணைக் கட்டிலிருந்து புறப்படும் நான்கு கால்வாய்களாவன: (1) மகேந்திரவாடி, (2) காவேரிப்பாக்கம், (3) சக்கரமள்ளூர், (4) தூசி. இந்நான்கு கால்வாய்களும் 317 குளங்களுக்கு நீர் அளித்து, 80,916 ஏக்கர்களுக்குப் பாசன வசதி அளிக்கின்றன. இம் மாவட்டத்தில் வாலாஜா, அரக்கோணம், செய்யாறு ஆகிய வட்டங்கள் பலன் அடைகின்றன. குளங்கள், கால்வாய்கள் இவற்றைப் பராமரிக்க ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்ச ரூபாய் செலவிடப்படுகிறது.

செய்யாறு அணை

ஆரணிக்குக் கிழக்கே பத்து மைலில் செய்யாறு அணை அமைந்திருக்கிறது. இவ்வணைக்கட்டிலிருந்து புறப்படும் செய்யாறு தலை வாய்க்கால் (Main Channel) முக்கியமான கால்வாய் ஆகும். இத்திட்டத்தின் மூலம் 144 குளங்கள் நீர் பெறுகின்றன; 24,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது. செய்யாறு, வந்தவாசி வட்டங்கள் நன்மை அடைகின்றன. இந்த அணைக் கட்டுத் திட்டத்தின் பராமரிப்புக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60,000 செலவிடப்படுகிறது.

பெண்ணை ஆற்றின் குறுக்கே ஓர் அணைக்கட்டு இருக்கிறது. பெண்ணை ஆறு பாலாற்றின் கிளை ஆறு ஆகும். அணைக்கட்டிலிருந்து மூன்று பிரதான வாய்க்கால்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. கிழக்குப் பிரதான வாய்க்கால் 13,807 ஏக்கர்களுக்கும், மேற்குப் பிரதான வாய்க்கால் 2,827 ஏக்கர்களுக்கும், தெற்குப் பிரதான வாய்க்கால் 4,793 ஏக்கர்களுக்கும் பாசன வசதி அளிக்கின்றன. 129 குளங்களுக்கு நீர் கிடைக்கிறது. வாலாஜா, அரக்கோணம் வட்டங்கள் நன்மை அடைகின்றன. இந்த அணைக்கட்டு திட்டத்தின் பராமரிப்புக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60,000 செலவிடப்படுகிறது.

முதல் திட்டக் காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரிய பாசனத் திட்டம் சாத்தனூர் அணைக்கட்டு ஆகும். இது 1958-ல் முடிக்கப்பட்டது. இந்த நீர்த் தேக்கத்தின் உயரம் 147 அடி;



சாத்தனூர் அணை

கொள்ளளவு 46,000 லட்சம் கன அடி. இதன் மூலம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, செங்கம் வட்டங்களும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டமும் பாசனம் பெறுகின்றன.

செங்கம் வட்டம் சாத்தனூர்க் கிராமத்தின் அருகில், பெண்ணையாற்றின் குறுக்கே இவ் அணை கட்டப்பட்டுள்ளது. இதற்குச் சுமார் 4 மைல் கீழே கட்டப்பட்டிருக்கும் கசிவு நீரைத் தேக்கும் அணைக்கட்டிலிருந்து கால்வாய்கள் வெட்டப்பட்டுப் பாசன வசதி அளிக்கப்படுகிறது. சாத்தனூர் அணைக்கட்டின் மொத்தச் செலவு மதிப்பீடு ரூ. 258 லட்சம். வட ஆர்க்காடு மாவட்டத்தில் சுமார் 15,000 ஏக்கர்களும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சுமார் 5,800 ஏக்கர்களும் பாசனம் பெற்றுள்ளன. ஆண்டுதோறும் 9,000 டன் கூடுதல் அரிசி உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை இந்த அணைக்கட்டுக்குச் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 230 லட்சம்.

சிறு பாசனம்

இம்மாவட்டத்தில் 3,337 சிறு பாசன ஆதாரங்கள் இருக்கின்றன. இவற்றைப் பராமரிப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. இந்த ஆதாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாப் முறையாகப் பழுது பார்க்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பழுது பார்க்கும் வேலை மேற்கொள்ளப்படுகிறது. இதே முறையில், 6 ஆண்டுக் காலத்தில் மாவட்டத்தில் உள்ள எல்லாப்

பாசன ஆதாரங்களும் பழுது பார்க்கப்படும். கரைகளைப் பலப் படுத்துதல், மதகுகளைப் பழுது பார்த்தல், புதுப்பித்தல், நீர் வழி வதால் பாதிக்கப்படும் பகுதியைப் பழுது பார்த்தல் ஆகிய காரியங் கள் இத்திட்டத்தில் அடங்குகின்றன. இதன் பொருட்டு ஆண்டு தோறும் ரூ. 4 லட்சம் முதல் 5 லட்சம்வரை செலவிடப்படுகிறது.

இந்த ஆதாரங்களைப் பராமரிப்பதுடன், பெரிய வேலை இனங் களையும் பொதுப்பணித்துறை எடுத்துக் கொள்கிறது. முதல் திட்டக் காலத்தில் 1917·62 ஏக்கர்களுக்குப் பாசன வசதி அளிக்க 20 திட்டங்கள் ரூ. 3,60,133 செலவில் மேற்கொள்ளப் பட்டன. குளங்களைப் புனரமைப்புச் செய்தல், தூரெடுத்தல், குளக்கரைகளை உயர்த்துதல், பழுது பார்த்து அபிவிருத்தி செய் தல் ஆகிய காரியங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் 3 திட்டங்கள் முதல் திட்டக் காலத்திலேயே முடிக்கப்பட்டன; மற்ற 17 திட்டங்களும் இரண்டாவது திட்டக் காலத்தில் நிறை வேற்றப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில், விசேஷ சிறு பாசனத் திட்டங்களைத் தவிர, 63·16 ஏக்கர்களுக்குப் பாசனம் அளிக்க 16,697 ரூபாய் செலவில் ஒரு திட்டம் எடுத்துக் கொள் ளப்பட்டது. ஆயக்கட்டு நிலங்களில் 29·16 ஏக்கர்கள் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டவை.

குளத்துப் பாசனம்

இரண்டாவது திட்டக் காலத்தில் விசேஷ சிறு பாசனத் திட்டத்தின் கீழ், பொதுப் பணித் துறையாலும், உணவு உற்பத்தித் துறையாலும் (Food Production Department) பாசனக் குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. பொதுப் பணித் துறையினரால் 40 வேலைகள் எடுத்துக் கொள்ளப் பட்டன. அவற்றுள் 19 முடிக்கப்பட்டுள்ளன; மற்ற 21 வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவைகளுக் காக இதுவரை ரூ. 4·436 லட்சம் செலவாகியுள்ளது. இவற்றால் ஏற்கெனவே பாசனத்தில் இருந்த 2,819 ஏக்கர்களுக்கும், புதிதாக 148 ஏக்கர்களுக்கும் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள் ளது. இந்த அபிவிருத்தியின் மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1,521 டன் அதிக உணவு தானியம் உற்பத்தியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. குளக்கரைகளை உயர்த்துதல், தூரெடுத்தல், புறக்கணிக்கப்பட்ட குளங்களைப் புனரமைப்புச் செய்தல், விசேஷ முறையில் பழுது பார்த்தல், அபிவிருத்தி செய்தல் முதலான காரி யங்கள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டாவது திட்டக் காலத்தில் உணவு உற்பத்தித் துறையி னரால் 282 பாசன வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. உணவுப் பெருக்கத்தை முன்னிட்டு, பழுதடைந்திருந்த பாசன

ஆதாரங்கள் பழுதுபார்க்கப் பட்டன. 10 ஏக்கர்களுக்கு மேல் பாசனம் அளிக்கக்கூடிய, ரெவின்யூ துறையினர் மேற்பார்வையில் உள்ள அரசாங்கப் பாசன ஆதாரங்களும் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. மதகுகளைப் பழுதுபார்த்தல், தூரெடுத்தல், அணைக் கட்டுகள் முதலியவற்றை அமைத்தல் ஆகிய காரியங்கள் மேற் கொள்ளப்பட்டன. எடுத்துக் கொள்ளப்பட்ட 282 வேலைகளில் 234 வேலைகள் முடிக்கப்பட்டன. இவற்றால் 4,678 ஏக்கர்கள் பயன் அடைந்தன. இவற்றை முடிக்கச் செலவான தொகை சுமார் ரூ. 20·54 லட்சம். இந்த அபிவிருத்தியின் மூலம் 3,500 டன் அதிக உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

I பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப் பட்ட பாசன வேலைகள்	முதல் திட்டக் காலத்தில்	இரண்டாவது திட்டக் காலத்தில்
(அ) எடுத்துக் கொள்ளப் பட்ட வேலைகள்	20	1
(ஆ) முடிக்கப்பட்ட வேலைகள்	3	17
(இ) இதுவரை செலவான தொகை	ரூ. 3,76,830	
(ஈ) பயன் அடைந்த பரப்பு		1,961·62 ஏக்கர்கள்
(உ) எதிர்பார்க்கப்படும் கூடுதல் உற்பத்தி		1,106 டன்கள்

II. விசேஷ சிறு பாசனத் திட்டத்தின்கீழ் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட பாசன வேலைகள்

(அ) எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள்	——	40
(ஆ) முடிக்கப்பட்ட வேலைகள்	——	19
(இ) இதுவரை செலவான தொகை	——	ரூ. 4,43,647
(ஈ) பயன் அடைந்த பரப்பு	——	1,278·18 ஏக்கர்கள்
(உ) எதிர்பார்க்கப்படும் கூடுதல் உற்பத்தி	——	594 டன்கள்

III. உணவு உற்பத்தித் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட பாசன வேலைகள்

(அ) எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள்	——	282
(ஆ) முடிக்கப்பட்ட வேலைகள்	——	234
(இ) இதுவரை செலவான தொகை	——	ரூ. 20,54,656
(ஈ) பயன் அடைந்த பரப்பு	——	4,678 ஏக்கர்கள்
(உ) எதிர்பார்க்கப்படும் கூடுதல் உற்பத்தி	——	3,478 டன்கள்

———



உலகம் இடையருது இயங்க உணவு மிக முக்கியம் ஆகும். உணவு இல்லாவிட்டால், உயிர் இனங்கள் அனைத்தும் பசியால் வாடி மடிந்துவிடும். இதனல், உயிர் வாழ உணவு கொடுப்போரின் தொண்டு மிக உன்னதமானது ஆகும். அதனை அளவிட்டு உரைக்க வந்த மணிமேகலை ஆசிரியர், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று புகழ்கிருர். தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

> " சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனுல்
> உழந்தும் உழவே தலை "

என்று அருளியுள்ளார்.

இலக்கியங்களில் காணப்படும் இவை பொன்ற மணிமொழிகள், பண்டைக் காலத்தில் இந்நாட்டில் உழவுத் தொழில் எவ்வாறு போற்றப்பட்டு வந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அக்காலத்தில் நம் நாட்டில் " களிறு மாய் கழனிகள் " மிக்கிருந்தன. " மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த " நாட்கள் அவை. அப்பொழுது

இந்நாட்டு உழவர் பெருமக்கள் உள்நாட்டு உணவுத் தேவையைத் தணித்ததோடு, கடல் கடந்த பல அயல் நாடுகளுக்கும் உணவு வகைகளை அனுப்பி அரும்பொருள் ஈட்டி வந்தனர். நம்முடைய நாட்டிலிருந்து பாபிலோனியாவுக்கு அரிசி ஏற்றுமதியானது என்பதற்கு, ஹிப்ரு மொழியில் 'அரிசி' என்ற தமிழ்ச் சொல், 'அரைசா' என்று எழுதப்பட்டிருப்பதே போதுமான சான்றாகும்.

"நாடென்ப நாடா வளத்தன" என்ற குறள் பிறந்த நாட்டில் இந்நிலை தொடர்ந்து நீடித்ததா? இல்லை. இந்நாட்டை அடிமை கொண்ட ஆங்கிலேயர் சீரான வேளாண்மையையும் சிதைத்தனர். அதனால் தேவைக்கு ஏற்ற அளவில் இங்கு விளைச்சல் குவியாமல் போயிற்று. அந்நிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யும் அவல நிலையும் உண்டாயிற்று.

உற்பத்தி உயருகிறது

உரிமைக்குப் பின்னர் இந்த இழிநிலை மறையலாயிற்று. "உழவினார் கைம்மடங்கின்" உலகம் இல்லை என்பதை உணர்ந்துள்ள சுதந்திர அரசாங்கம், உற்பத்திப் பெருக்கத்திற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தது. பாசன வசதி செய்து தருதல், உயர்தர வித்துக்களை வழங்குதல், ரசாயன, கழிவு உரங்கள் கிடைக்கச் செய்தல், முன்னேற்றக் கருவிகளைப் பயன்படுத்த வகை செய்தல் முதலிய அரும்பெரும் காரியங்களை அரசாங்கம் மேற்கொண்டது. அவற்றின் பயனாக இன்று உற்பத்தியில் உயர்வைக் கண்டு வருகிறோம்.

வட ஆர்க்காடு மாவட்டம் முக்கியமாக வேளாண்மைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. சீதோஷ்ண நிலை கோடையில் வெப்பமாகவும், குளிர் காலத்தில் குளிராகவும் இருக்கிறது. சாத்தனூர், பாலாறு, செய்யாறு, பெண்ணை அணைக்கட்டுகள் இருக்கின்றன. இந்த ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும்பொழுது எண்ணற்ற ஏரி, குளங்கள் நிரம்புகின்றன. இவையே அல்லாமல், மழையையே நம்பியிருக்கும் குளங்கள், கிணறுகள், ஆறுகள் அல்லது கஸக் கால்வாய்கள் ஆகியவை முக்கியமான பாசன ஆதாரங்களாக விளங்குகின்றன. மழையை நம்பி வாழும் மாவட்டம் ஆகையினால், மழை குறைவாகப் பெய்யும் காலங்களில் விளைச்சல் குன்றுகிறது. எனினும், பாசன வசதிகள் நல்ல முறையில் செய்து தரப்பட்டுள்ள காரணத்தினால், இம் மாவட்டத்தின் வேளாண்மை உற்பத்தி அளவு, மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கதாக விளங்குகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகும் தானியங்களில் முக்கால் பாகம் அரிசி; கால்பாகம் புஞ்செய் தானியங்கள்.

1950-51-ல் இங்கு 166,000 டன் அரிசி உற்பத்தியாயிற்று. 1960-61-ல் அரிசி உற்பத்தி சுமார் 409,000 டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகையினால், கடந்த பத்தாண்டுகளில் அரிசி உற்பத்தி $1\frac{1}{2}$ மடங்கு அதிகரித்துள்ளது என அறியலாம். இவ்வாறே புஞ்செய் தானிய உற்பத்தியும் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. 1950-51-ல் விளைந்ததைவிட இப்பொழுது 40 சதவீதம் அதிகரித்துள்ளது. முக்கிய எண்ணெய் வித்தாக விளங்கும் நிலக்கடலை 1950-51-ல் 154,670 டன் உற்பத்தியாயிற்று. இந்த அளவு 1960-61-ல் 229,300 டன்னாக உயர்ந்தது. அதாவது, ஏறக்குறைய 50 சதவீத உயர்வு கண்டிருக்கிறது. 1950-51-ல் 41,170 டன் கரும்பு (வெல்ல அளவில்) உற்பத்தியாயிற்று. 1960-61-ல் இந்த அளவு 76,410 டன்னாக அதிகரித்தது. அதாவது, கரும்பு உற்பத்தியில் 90 சதவீத உயர்வு காணப்பட்டது. 1950-51-ல் எள் உற்பத்தி 800 டன்; இந்த அளவு 1960-61-ல் 1,500 டன்னாக அதிகரித்தது. அதாவது எள் உற்பத்தியில் 90 சதவீத உயர்வு காணப்பட்டது.

இம் மாவட்டத்தில் சாகுபடிக்குத் தகுதியான நிலங்கள் அனைத்தும் பெரும்பாலும் சாகுபடியின்கீழ்க் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. (மேலும் சாகுபடிக்குக் கொண்டுவரக் கூடிய நிலம் மிகக் குறைந்த அளவே உள்ளது.) ஆகையினால், முனைப்பான முறையிலும், முன்னேற்றமான புதிய வழி முறைகளிலும் சாகுபடி செய்ய வேளாண்மைத் துறையினர் முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன் மூலம் விளைச்சல் அதிகரிக்கப் பாடுபட்டனர். (1) உயர்தர வித்துக்களை உற்பத்தி செய்து விநியோகித்தல்; (2) ரசாயன, தழை உரங்களைப் பயன் படுத்துதல்; (3) முன்னேற்றச் சாகுபடி முறைகள்; (4) மண்வளப் பாதுகாப்பு; (5) நில அபிவிருத்தி ஆகியவை இத்துறையினர் மேற்கொண்ட முக்கியமான பணிகள் ஆகும். வர்த்தகப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தோட்டக் கலை, பழ அபிவிருத்தி, முந்திரி அபிவிருத்தி, எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தி முதலான பல திட்டங்களையும் இத் துறையினர் மேற்கொண்டனர்.

விளைச்சலைப் பெருக்கும் வித்துக்கள்

உயர்தர வித்துக்களை உற்பத்தி செய்து விநியோகிப்பது முதன்மையான காரியம் ஆகும். ஏனெனில், இவை நன்றாக முளைத்து வருகின்றன; பூச்சிகள், நோய்கள் இவற்றால் பாதிக்கப்படாமல் இருக்கின்றன; பலவகைப்பட்ட மண், சீதோஷ்ண நிலை, சுற்றுச் சூழ்நிலை ஆகியவற்றிற்குப் பொருந்துகின்றன. இவற்றுக்கும் மேலாக, அவை அதிக விளைச்சலைத் தருகின்றன.

முதல் திட்டக் காலத்தில், ஆரம்பக் கட்டத்தில் வித்துக்களைப் பெருக்கும் பொறுப்பு குடியானவர்களிடம் விடப்பட்டது. இதனால் நல்ல பலன் விளையவில்லை. ஆகவே, விதைப் பண்ணைகளை (State Seed Farms) நடத்தும் பொறுப்பை அரசாங்கமே மேற்கொண்டது. இதன் மூலம், அரசாங்க விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகும் வித்துக்கள் குடியானவர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்கள் மூலமாகக் கிராம விதைப் பண்ணைகளில் அவை பெருக்கப்படுகின்றன. இதனால், தரமான உயர்ந்த இன வித்துக்களே பெருக்கப்படும் நிலை உண்டாகிறது. அண்மையில் 75 ஏக்கரா பரப்புள்ள ஒரு விதைப் பண்ணை ராணிப்பேட்டை நவலாக் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வேலூர் தென் டிவிஷனில் வாழவச்சனூர், மருதாடு, கீழ் நர்மா, அத்தியந்தல் ஆகிய இடங்களிலும் அரசாங்க விதைப் பண்ணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மாவட்டத்தில் வினியோகிக்கப்பட்ட பல்வேறு உயர்தர வித்துக்கள் பின் வருமாறு :—

(மூதல்நிலை விதைப் பண்ணைகளும் கிராம விதைப் பண்ணைகளும்)	முதல் ஐந்தாண்டுத் திட்டம்	இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்
நெல் வித்துக்கள்	1,062 டன்	6,376 டன்
புஞ்செய் தானிய வித்துக்கள்	52 டன்	438 டன்
நிலக்கடலை, மற்ற எண்ணெய் வித்துக்கள்	14 டன்	3,865 டன்
பருத்தி	78 டன்	55 டன்
கரும்புக் கரணைகள் (லட்சத்தில்)	425	1,210

ரசாயன உரம்

முன்னேற்றச் சாகுபடி முறைகள், உரங்கள் முதலானவற்றின் அவசியத்தைப் பற்றி வேளாண்மைத் துறையினர் கடந்த காலங்களில் செய்து வந்த பிரசாரத்தின் பலனாக, இம் மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் அதிக அளவில் ரசாயன உரங்கள் பயன் படுத்தப் படுகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 15,770 டன் ரசாயன உரங்கள் வினியோகிக்கப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 24,592 டன் ரசாயன உரங்கள் வழங்கப்பட்டன. எனினும், இவற்றிற்குத் தேவை அதிகம் இருந்தது. ரசாயன உர வினியோகத்தில் ஒழுங்கீனங்கள் நடந்துவிடாமல் தடுக்க, வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், மாவட்டம் முழுவதிலும் உள்ள அதன் விற்பனை நிலையங்களின் வாயிலாக வினியோகிக்கப்படுகிறது.

அதே நேரத்தில், கூடவே உள்ளூர் எரு வசதிகளின் அபிவிருத்திக்கும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

தழை உரங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து பயன் படுத்துவதன் மூலம் நெல், கரும்பு, பருத்தி முதலானவற்றின் சாகுபடியின் போது நிலம் இழந்து விடும் நைட்ரஜன் சத்தை ஈடு செய்ய இயலும். மாட்டுச் சாணம், சிறுநீர், அழுகிய பொருள்கள், களைகள், குப்பைகள் முதலியவற்றைக் குழியில் போட்டு உரம் தயாரித்துப் பயன் படுத்துவதன் மூலம், நிலம் இழந்த நைட்ரஜன் சத்தை அடையச் செய்ய



விளைச்சலைப் பெருக்கும் தழை உரம்

முடியும். ஆனால் நம் நாட்டில் துரதிருஷ்டவசமாக மாட்டுச் சாணம் அதிக அளவில் எரிக்கப்படுவதுடன், பண்ணைகளின் கழிவுப் பொருள்களும் விலங்குச் செல்வங்களுக்கு உணவாக அளிக்கப்படுகின்றன. ஆகவே, சீமை அகத்தி, அவுரி போன்ற தழை உர ஆதாரங்களை அபிவிருத்தி செய்வதன் வாயிலாக நாம், உள்ளூர் எருத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். முதல் திட்டக் காலத்தில் 162 டன் தழை உர வித்துக்கள் வழங்கப் பட்டன; இரண்டாவது திட்டக் காலத்தில் 318 டன் வழங்கப் பட்டன.

அதே சமயத்தில், நகர கழிவு உரத் திட்டத்தின் (Urban Compost Scheme) மூலமும், கிராமக் கழிவு உரத் திட்டத்தின் (Rural Compost Scheme) மூலமும் கழிவு உர அபிவிருத்தியும் மேற்கொள்ளப் பட்டது. நகராட்சிகளும், பெரிய பஞ்சாயத்துகளும்


நகரக் கழிவு உரத்தைத் தயாரிக்கின்றன. குப்பை கூளங்கள், கழிவுப் பொருள்கள் ஆகியவற்றிலிருந்து உரம் தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 56,253 டன் கழிவு உரம் உற்பத்தி செய்யப்பட்டுக் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் 2,254 டன் உணவு தானியங்கள் கூடுதலாக உற்பத்தி ஆயின. இரண்டாவது திட்டக் காலத்தில் 79,704 டன் நகரக் கழிவு உரம் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப் பட்டது.

கிராமக் கழிவு உரம்

மாட்டுச் சாணம், சிறுநீர், மற்றப் பண்ணைக் குப்பைகள் ஆகியவற்றை உபயோகித்துக் கிராமக் கழிவு உரம் தயாரிக்கப் படுகிறது. வீணாக எறியப்படும் காய்கறிகள், சருகுகள், களைகள், தாள்கள் முதலியவற்றைப் பயன் படுத்தி உரம் தயாரிக்கவும் உழவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத் திட்டத்தின் கீழ் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 36,254 டன்களும், இரண்டாவது திட்டக் காலத்தில் 81,642 டன்களும் கழிவு உரம் தயாரிக்கப்பட்டது. இதன் மூலம், முதல் திட்டக் காலத்தில் 1,440 டன்களும், இரண்டாவது திட்டக் காலத்தில் 4,082 டன்களும் கூடுதல் உணவுத் தானிய உற்பத்தி ஏற்பட்டது.

வேளாண்மைத் துறையினரால் முன்னேற்றச் சாகுபடி முறைகளும் பரப்பப்பட்டு வருகின்றன. உழவர்களுக்கு இவற்றை

ஜப்பானியமுறைச்சாகுபடி



விளக்குவதன் நோக்கம், உற்பத்தி உயர்வு ஏற்பட வேண்டும் என்பதே. உதாரணமாக, ஜப்பானிய முறைச் சாகுபடியின் மூலம் அதிக உற்பத்தி காண்கிறது. ஆகையினால், அதை எல்லாப் பயிர்களுக்கும் பின்பற்றப் பிரசாரம் செய்யப்படுகிறது. ஜப்பானிய முறைச் சாகுபடி முனைப்பான முறையில் இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப் பட்டது. 4·82 லட்சம் ஏக்கர்கள் இச் சாகுபடி முறையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. பல கிராமங்களில் செயல் முறைக் காட்சிப் பாத்திகளும் (Demonstration plots) ஏற்படுத்தப்பட்டன. மாவட்டத்தின் தெற்கு டிவிஷனில் மட்டும் 5,800 க்கு மேற்பட்ட செயல் முறைக் காட்சிப் பாத்திகள் அமைக்கப்பட்டன.

திருந்திய முறைக் கருவிகள்


முன்னேற்றச் சாகுபடியில் புதிய கருவிகளைப் பயன்படுத்த வேண்டியதும் முக்கியமாகும். மேலூர்க் கலப்பைகள், கூப்பர் கலப்பைகள், இயந்திரக் கலப்பைகள், பரம்படிக்கும் கருவிகள், தெளிப்பான்கள் ஆகியவை உழவர்களிடையே பிரபலம் அடைந்துள்ளன. இரண்டாவது திட்டக் காலத்தில் 8,500 கருவிகள் உழவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

முன்னேற்றச் சாகுபடி முறைகளைக் கையாண்டால் மட்டும் போதாது. பூச்சிகள், நோய்கள் இவற்றிலிருந்தும் பயிர்களைக் காப்பாற்ற வேண்டும். பூச்சிகளை அழித்துப் பயிர்களைக் காப்பாற்றினால், அதிக அளவு உணவுத் தானியங்கள் வீணாவது தடுக்கப்படும் என்பதை, தொடர்ந்து ஏற்பட்டு வரும் அனுபவம் நமக்கு உணர்த்துகின்றது.

பயிர்ப் பாதுகாப்பு

நோய்களை இரண்டு வகைகளில் தடுக்கலாம். ஒன்று விதைக்கு முன்னரே வித்துக்களை நோய்கள் அணுகாதவாறு பாதுகாத்தல்; இன்னொன்று பயிரில் மருந்துகளைத் தூவி நோய்களைக் கட்டுப்படுத்தல். பயிர் நோய்களை எதிர்த்துப் போராடுவதில் வேளாண்மை டிமான்ஸ்ரேட்டர்கள், வேளாண்மை நலப்பரப்பு அதிகாரிகள், பயிர்ப் பாதுகாப்பு உதவியாளர்கள் ஆகியவர்கள் பணியாற்றி வருகிறார்கள். நோய்த் தடுப்பு மருந்துகள் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. அதிக அளவில் மருந்து தூவுவதற்காக ஒவ்வொரு வட்டாரத் தலைமையிடத்திலும் மின்சாரத்தினால் இயங்கும் ஒரு தூவி வைக்கப்பட்டுள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 90,000 ஏக்கர்களிலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1·46 லட்சம் ஏக்கர்களிலும் பூச்சி, நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்



பயிர் நோயை அழிக்க மருந்து தெளிக்கப்படுகிறது

பட்டன. 1·361 லட்சம் மரங்களுக்கு நோய்த் தடுப்புமுறை அனுசரிக்கப்பட்டது.

அபிவிருத்திக்கான முன்னேற்றச் சாகுபடி முறைகளைப் பரப்ப வேளாண்மைத் துறையினர் மேற் கொண்ட நடவடிக்கைகளே மேலே விவரிக்கப் பட்டன. இவற்றைத் தவிர, தோட்டக் கலை அபிவிருத்தி, முந்திரி அபிவிருத்தி, எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தி முதலான வர்த்தகப் பயிர் அபிவிருத்திக்கும் இத் துறையினர் மற்றொரு முக்கியமான திட்டத்தை நிறைவேற்றியுள்ளனர். உணவு உற்பத்தியைஅதிகரிக்கச் செய்வது போலவே, குடியானவர்களின் வருமானத்தை உயர்த்த வர்த்தகப் பயிர்களையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்பது இத் துறையினரின் நோக்கம். மேலும், உணவுப் பயிர்களைப் போலவே வர்த்தகப் பயிர்களும் முக்கியமானவை ஆகும். புதிய தோட்டங்களை உண்டாக்குவதற்கும், பழையனவற்றைப் புதுப்பிப்பதற்கும் நீண்ட கால, குறுகிய காலக் கடன்கள் உழவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. புதிய தோட்டங்களை வைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 விதம் ரூ. 24,000 வரையும், 271 ஏக்கர்கள் பழைய தோட்டங்களுக்கு எருவிட்டுப் புதுப்பிப்பதற்கு ரூ. 17,000 வரையும் கடனுகை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 1958-59 ம் ஆண்டில் அமுலுக்கு வந்தது.

முந்திரி அந்நியச் செலாவணி ஈட்டும் பொருள் ஆகும். ஆகையினால், முந்திரியின் வளர்ச்சிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.


இரண்டாவது திட்டக் காலத்தில் மாவட்டத்தில் 125 ஏக்கர்களில் முந்திரி பயிராக்க ரூ. 9,960 கடனுக அனுமதிக்கப் பட்டது.

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியிலும் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. சுமார் 2 லட்சம் ஏக்கர்களில் நிலக்கடலை பயிரா கிறது. எள், ஆமணக்கு முதலான எண்ணெய் வித்துக்களின் உற் பத்தியை அதிகரிக்கச் செய்யப் பின்வரும் மூன்று நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. (1) உயர்தர வித்துக்களை வினியோ கித்தல், (2) முன்னேற்றச் சாகுபடி முறைகள், (3) வித்துக்கள் பயிராகும் பரப்பை விஸ்தரித்தல்.

எண்ணெய் வித்துக்கள்

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் ஒரு திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சாத்த னூர் அணைக்கட்டுக் கால்வாய்ப்பிரதேசத்தில் அமுலாக்கப்பட்டது. மேலும் வினியோகிக்கப்படக் கணிசமான அளவில் வித்துக்களை உற் பத்தி செய்ய விதைப்பண்ணைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தென்னை மிகுந்த அளவில் பயி ராகிறது. வடக்கு டிவிஷனில் மட்டும் 6,000 ஏக்கர்களில் தென்னை



தென்னைச் சாகுபடி


சாகுபடியாகிறது. தென்னைச் சாகுபடியை அபிவிருத்தி செய்வ தற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 20,000

தென்னம் பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டன. முன்னேற்ற முறையில் தென்னைச் சாகுபடியை மேற்கொள்ளும் வழி முறைகள் பற்றி உழவர்களுக்கு இலவசமாகத் தொழில் நுணுக்க ஆலோசனை அளிக்கப்பட்டது.

உண்ணி வளர்ப்பு

குடியாத்தம் வட்டம் மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்பட்டிருக்கும் உண்ணி வளர்ப்பு நிலையத்தில், தென்னை மரங்களுக்கு வரும் பூச்சி நோயைப் போக்குவதற்காக உண்ணிகள் வளர்க்கப்படுகின்றன. நிலையம் நிறுவிய மூன்றாண்டுகளில் 14 லட்சம் உண்ணிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றால் 80,000 மரங்கள் இந் நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம், உழவர்களுக்குக் கரும்புக் கரணைகளை அபிவிருத்திசெய்து அளிப்பதுடன்அல்லாமல், கரும்புத் தோட்டம் வளர்ப்பவர்களுக்குப் பயன்படும் தகவல்களை



மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையச் சோதனைச்சாலை


யும் தருகின்றது. இப்பொழுது இந்நிலையத்தில் சி. ஒ. 419, சி. ஒ. 449 கரும்புக் கரணைகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. முன்னேற்ற வகைகளைச் சேர்ந்த கரும்புக் கரணைகள் சுமார் 1,300 லட்சம் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன ; சுமார் 10,000 ஏக்கர்களில் தரமான கரும்பு பயிராக்கப்பட்டுள்ளது. (இது 1956-60-க்கு ஆன புள்ளிவிவரமாகும்.)

வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவினர், டிராக்டர்கள், எண்ணெய் எஞ்சின்கள், வடிமுனைக் கிணறுகள், குழாய்க் கிணறுகள் முதலான நில அபிவிருத்திக்கான வசதிகளைச் செய்து தருகின்றனர். மண்வளப் பாதுகாப்பு மிக இன்றியமையாதது ஆகும். ஏனெனில், அது மண் சாரத்தைக் காப்பதுடன், நில சமன் மட்டத்தையும் பாதுகாக்கிறது. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் 1956-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. சம உயரக் கரை கட்டல், மட்டப்படுத்துதல், சமன் செய்தல், நீர்ப் போக்கைத் திருப்பி விடுதல் ஆகிய பணிகளின் மூலமாக 15,000 ஏக்கர்களில் மண் வளம் பாதுகாக்கப்பட்டது.

வேலூர் வட்டத்தில் 10 கிராமங்களிலும், வாலாஜா வட்டத்தில் 6 கிராமங்களிலும், குடியாத்தம் வட்டத்தில் 3 கிராமங்களிலும், திருப்பத்தூர் வட்டம், குடியாத்தம் வட்டம், வாலாஜா வட்டக் கிராமங்களிலுமாக மொத்தம் 15,982 ஏக்கரில் மண்வளப் பாதுகாப்பு வேலைகள் நடைபெற்றன. இவற்றிற்கு ஆன மொத்தச் செலவு சுமார் ரூ. 8 லட்சம் ஆகும்.

புதியன புகுதல்

நில அபிவிருத்திக்கு மண்வளப் பாதுகாப்புத் திட்டத்துடன் கூட, டிராக்டர்களை வாடகைக்குவிடும் திட்டமும், டிராக்டர் வாடகைக் கிரயத் திட்டமும் நிறைவேற்றப்பட்டன. இம்மாவட்டத்தில் இத்திட்டங்கள் செயல்படுவதைக் கவனிக்க ஒரு உதவி வேளாண்மைஎஞ்சினீயர் 1959 மத்தியில் நியமிக்கப்பட்டார். எண்ணெய் எஞ்சின்களை வாடகைக்கு விடும் திட்டம், வடிமுனைக் குழாய்த் திட்டம், ஊற்றுக் குழாய்த் திட்டம் முதலான திட்டங்களும் இவர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



இம்மாவட்டத்தில் 7 புல்டோசர்களும், 3 டிராக்டர்களும் வாடகைக்குக் கிடைக்கின்றன. 1959-க்கு முன்னர் 475 ஏக்கர்கள் தரிசு நிலம் மீட்கப்பட்டுள்ளது; 383 ஏக்கர்கள் நிலம் நல்ல முறையில் உழப்பட்டுள்ளது. இரண்டாவது திட்ட முதல் மூன்றுண்டுகளில் இந்தப் புல்டோசர்களாலும், டிராக்டர்களாலும்

3,885 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது. டிராக்டர் வாடகைக் கிரயத் திட்டத்தின் கீழ், வந்தவாசி வட்டத்தில் குடியானவர்களுக்கு மூன்று டிராக்டர்கள் கொடுக்கப்பட்டன.

எண்ணெய் எஞ்சின் வாடகைத் திட்டத்தின் கீழ், 30 எண்ணெய் எஞ்சின்கள் வாடகைக்கு விடப்பட்டன. மாவட்டம் முழுவதிலும் உழவர்களுக்கு 25 எண்ணெய் எஞ்சின்களும், 100 மின் சார மோட்டார்களும் வாடகைக் கிரய அடிப்படையில் வழங்கப்பட்டன. 1959-60, 1960-61-ம் ஆண்டுகளில் 109 வடிமுனைக் குழாய்கள் இறக்கப்பட்டுள்ளன. ஊற்றுக் கிணறுகளில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை. குடியாத்தம் வட்டத்தில் ஒரே ஒரு துணை ஊற்றுக் கிணறு இறக்கப்பட்டது.

நிலச் சீர்திருத்தங்கள்

"தம்மில் இருந்து தமது பாத்துண்"ணும் பண்பைத் தமிழர் ஓம்பிப் பாதுகாத்து வந்துள்ளனர். பசித்தோர் முகம் பார்த்து, நல்லறமும் நட்பும் நன்றென்று வாழ்ந்து வருதல் நல்லோர் மரபு.

உழைப்புக்கு ஏற்ற பெருமை அளிக்க வேண்டும். உழுதுண்டு வாழ்வோரை ஊக்குவிக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே நிலச் சீர்திருத்தங்கள் இயற்றப்படுகின்றன. உற்பத்தியைப் பெருக்கி, மக்கள் வாழ்வை உயர்த்த வேண்டும் என்பதே இவற்றின் லட்சியம். உழவர் பெருமக்கள் வறுமையால் வாடினால், வேளாண்மையும் வாடிச் சாம்பிப்போகும். அதனால், அவர்களது நிலையை உயர்த்தவே நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

சாகுபடியின் மூலம் வரும் வருமானத்தை நம்பி வாழும் கிராமக் குடும்பத்தைப் பொதுவாக ஆராய்ந்து பார்த்தால், சீர்திருத்தங்களுக்கு முன்பிருந்ததைவிட இப்பொழுது வருமானம் அதிகரித்திருப்பது தெரிகிறது. சாகுபடியில் வரும் வருமானத்தை இப்பொழுது அவர்கள் ஆண்டு முழுவதும் பாதுகாத்து வைக்க முடிகிறது. ஆனால், முன்பெல்லாம் சாகுபடி நடைபெறாத காலங்களில் அவர்கள் வாழ்க்கைக்காகப் போராட வேண்டியிருந்தது.

வீட்டு விலங்கினங்கள்

'மாடு' என்ற சொல் பண்டைக் காலத்தில் செல்வத்தைக் குறித்து வந்தது. மாடுகளின் பயனை ஆராய்ந்து பார்த்தால், இதன் பொருத்தம் தெளிவாக விளங்கும். நமக்கும்,

"பாலைப் பொழிந்துதரும், பாப்பா!—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!"

என்று பாடத் தோன்றும்.

விலங்குச் செல்வங்கள் வளமுற்று விளங்கினால், வேளாண்மையும் சிறப்படைய இயலும். நிலத்திற்கு நீர் இறைக்க வலிமை மிக்க காளைகள் வேண்டும்; ஆகையினால், கிராமப் பொருளாதாரத்தின் உயர்வுக்கு உடல் வன்மை பெற்ற விலங்குச் செல்வங்கள் இன்றியமையாதன என்பது தெற்றெனப் புலனாகிறது.

கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம், ஊட்டச் சத்து நிறைந்த பால், ஊன், முட்டை முதலானவை நல்ல தரத்தில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதும், விலங்குச் செல்வங்களின் வளத்தைப் பேணிக் காப்பதும் ஆகும். கால்நடைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் கம்பளி, தோல், கொம்புகள் முதலானவற்றை நன்கு பயன்படுத்துவதன் மூலமாகவும் பொருளாதார முன்னேற்றத்துக்கு வகை செய்ய முடியும். எனவே, நமது திட்டங்களில் வேளாண்மைக்கும், அதனோடு தொடர்புடைய கால்நடை அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

சுதந்திரத்திற்கு முன்னர் விலங்குப் பராமரிப்புத் துறையினர் மிகக் குறுகிய அளவில்தான் செயல்பட்டு வந்தனர். எங்கேயாவது கால்நடை நோய் பரவுகிறது என்று ரெவின்யூ துறையினர் அறிவித்தால், அங்கே சென்று பணியாற்றுவர். இதுவே அவர்களது முக்கியமான சேவையாக இருந்து வந்தது. வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே விலங்கு மருத்துவ நிலையங்கள் இருந்தன. ஆரணி, ஆம்பூர், செங்கம், செய்யாறு, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் இருந்தன.

செயற்கைக் கருமுறை

ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டதும் இத் துறையின் வேலைத் திட்டங்களில் மறுமலர்ச்சி தோன்றியது. கோழி வளர்ப்பு யூனிட்டுகள், செயற்கைக் கருமுறை நிலையங்கள் முதலியன ஏற்பட்டன. கால்நடை அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை மக்கள் உணருமாறு செய்வதற்காகக் கால்நடைக் காட்சிகள் நடத்தப்பட்டன. செயற்கைக் கருமுறை நிலையங்கள் திறக்கப்பட்டன. மாவட்டத்திலுள்ள நாட்டுக் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக உயர்ந்த இனப் பொலிகாளைகள் விநியோகிக்கப்பட்டன. சிறப்பான முறையில் கால்நடைகளை வளர்க்கும் வழிவகைகளைப் பிரபலப்படுத்துவதற்காகத் துணை விஸ்தரிப்பு நிலையங்கள் திறக்கப்பட்டன. இத் திட்டங்களுக்காக முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 64,000 ரூபாயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2·554 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் ரூ. 3·2 லட்சம் செலவிடப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல வேலைத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 1947-ல் 3 ஆக இருந்த விலங்கு



கால்நடை நோய்த்தடுப்பு ஊசி போடப்படுதல்

மருத்துவ மனைகள் 1956-ல்10 ஆக அதிகரித்தன. ஏறத் தாழ ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு மருத்துவ மனையோ, அல்லது ஒரு உதவி மருத்துவ நிலையமோ ஏற்பட்டது. அரக்கோணம், திருப்பத்தூர், வாணியம்பாடி, கிழ் பென்னாத்தூர் ஆகிய இடங்களில் விலங்கு மருத்துவ மனைகளும், ஆம்பூர், வாலாஜா, தேசூர் ஆகிய இடங்களில் உதவி மருத்துவ நிலையங்களும் அமைக்கப்பட்டன. கால்நடைகளுக்கு வரும் நோய்களை உடனடியாக ஒழித்துக் கட்டுவதற்காக வேலூர் விலங்கு மருத்துவ மனையில் சிகிச்சைச் சோதனை நிலையம் ஒன்று 1953-ல் திறக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கோழி வளர்ப்புச் செயல் முறைப் பயிற்சி யூனிட் ஒன்று வேலூரில் ஆரம்பிக்கப்பட்டது; இப்பொழுது அது திருவண்ணாமலைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் பயனாக, அண்மைக் காலங்களில் பலபேர் அரசாங்க உதவி பெற்றுக் கோழி வளர்ப்பில் ஈடுபட முன்வருகின்றனர்.

இரண்டாவது திட்டக் காலத்தில் அதிக அளவு வேலைத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. முக்கியமாகக் கேந்திரக் கிராமத் திட்டத்தின் மூலம் கால்நடை அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் முனைப்பான முறையில் பணிகளை நிறைவேற்ற இத்திட்டம் வகை செய்கிறது. தரம் குறைந்த நாட்டுக் காளைகளைக் காயடித்தல், செயற்கைக் கருமுறை நிலையங்களின் மூலம் கால் நடைகளின் தரத்தை உயர்த்தல், மானிய உதவி அடிப்படையில் கன்றுகளை வளர்த்தல், தீனி ஆதாரங்களை அபிவிருத்தி செய்தல் முதலியவை இத் திட்டத்தின் அம்சங்கள் ஆகும்.

நிறைவேற்றப்பட்டுவரும் முக்கியமான திட்டங்கள் பின் வருமாறு: (1) செயற்கைக் கருமுறை நிலையங்கள்; (2) நடமாடும் விலங்கு மருத்துவ யூனிட்டுகள்; (3) துணை விஸ்தரிப்பு நிலையங்கள்; (4) கோழிவளர்ப்புத் திட்டங்கள்; (5) கால் நடைக் காட்சிகள். வேலூர், மல்லவாடி, ராணிப்பேட்டை ஆகிய மூன்று இடங்களிலும் செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்கள் இருக்கின்றன. வேலூரில் 2 சிந்தி, 2 முர்ரா கிடாக்களும், மல்லவாடியில் 2 காங்கயம், 2 முர்ரா கிடாக்களும், ராணிப்பேட்டையில் 2 முர்ரா கிடாக்களும் இருக்கின்றன. செயற்கைக் கருமுறை மிகப் பிரபலம் அடைந்து வருகிறது என்பதில் ஐயமில்லை.

பொலி காளைகள்

தேர்ந்தெடுத்த முறையில் கால்நடைகளை வளர்க்கும் வகையைப் பிரபலப்படுத்தத் துணை விஸ்தரிப்பு நிலையங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. பொலிகாளைகளும், எருமைக் கிடாக்களும் அவற்றைப் பாதுகாக்க முன்வரும் கிராம மக்களிடம் அளிக்கப்படுகின்றன. இவற்றைப் பாதுகாக்கக் காளை ஒன்றுக்கு ரூ. 30 மானியமாக வழங்கப்படுகிறது. இந்தக் காளை சுற்றுப் புறத்தில் இனப் பெருக்கத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. போளூர், காவேரிப்பாக்கம், நெமிலி ஆகிய மூன்று இடங்களிலும் துணை விஸ்தரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு உள்ளன. இம்மூன்று நிலையங்களுக்கும் 116 காங்கயம் காளைகள் உள்பட 150 பொலி காளைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நல்ல முறையில் வளர்க்கும் வேலைத் திட்டத்தோடு கூட, இந்நிலையங்கள் வளங்குன்றிய காளைகளைக் காயடித்தல், தொத்து நோய்களைத் தடுத்தல், கால்நடைகளின் அபிவிருத்திக்குப் பிரசாரம் செய்தல் முதலான பணிகளிலும் ஈடுபடுகின்றன.

நடமாடும் விலங்கு மருத்துவக்குழு ஒன்றும் 1958-59 முதல் பணியாற்றி வருகிறது. வியாதிகளைப்பற்றி வரும் அறிக்கைகளைக் கவனித்தல், விலங்குகளுக்கு மருந்து கொடுத்தல், தொத்து நோய்கள் பரவாமல் தடுத்தல், வளங்குன்றிய காளைகளைக் காயடித்தல், கால்நடை அபிவிருத்தியைப் பற்றிப் பிரசாரம் செய்தல் முதலானவை இக்குழுவின் முக்கியப் பணிகள் ஆகும். நெடுந் தொலைவிலுள்ள கிராமங்களுக்கும் இது மருந்து வகைகளை எடுத்துச்

செல்கிறது. வேட்டவலத்தில் 1959-60ல் ஒரு உதவி மருத்துவ நிலையம் தொடங்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இதனோடு இம்மாவட்டத்தில் மொத்தம் பதினேரு மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஏறத்தாழ ஆண்டுக்கு ஒருமுறை மாவட்டக் கால்நடைக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. அப்பொழுது அதிக அளவில் முனைப்பான முறையில் பிரசாரம் செய்யப்படுகிறது. நல்ல முறையில் சிறப்பாக வளர்க்கப்பட்ட கால்நடைகளின் சொந்தக் காரர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

கோழி வளர்ப்பு

இரண்டாவது திட்டக் காலத்தில், கோழி வளர்ப்பை விஸ்தரிக்கும் முக்கியமான மற்றொரு திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கோழி வளர்ப்பு நிலையங்களின் வளர்ச்சி, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் என்று சொல்லத் தேவையில்லை. கோழி வளர்ப்பில் ஈடுபட முன்வருபவர்களை ஊக்குவிக்கும் முறையில் அரசாங்கம் மானிய உதவி அளித்து வருகிறது. இம்மாவட்டத்தில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள எண்மருக்கு மானிய உதவியாக ரூ. 3,200 அளிக்கப்பட்டுள்ளது. கோழி வளர்ப்பு யூனிட்டுகள் மிகவும் திருப்திகரமான முறையில் இயங்கி வருகின்றன. கோழி வளர்ப்பைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்காகத் துருஞ்சாபுரத்தில் 1961ம் ஆண்டில் கோழிக் காட்சி ஒன்று

கோழிப்பண்ணை



நடத்தப்பட்டது. இதற்கு அரசாங்க மானியமாக ரூ. 100 அளிக்கப் பட்டது.

செம்மறி, வெள்ளாடுகளின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்காக, கிராம மக்களுக்கு உயர்ந்த இனச் செம்மறிக் கிடாக்கள் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நெல்லூர் செம்மறிக் கிடாக்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. கீழ் வைத்தினுங் குப்பத்தில் 1961ல் செம்மறி, வெள்ளாடுகள் காட்சி ஒன்று நடத்தப்பட்டது.

'கோ சம்வர்த்தன' வாரம் 1960ல் கொண்டாடப்பட்ட போது, திருப்பத்தூரில் ஒருநாள் கால்நடைக் காட்சி நடத்தப்பட்டது.

விலங்கு மருத்துவ நிலையங்களில் மின்சார வசதி செய்து தரப்பட்டது. திருவண்ணாமலை, ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள விலங்கு மருத்துவ மனைகளுக்கு அணுப் பெருக்காடிகள் வழங்கப்பட்டன.

மருந்து தயாரிப்பு நிலையம்

ராணிப்பேட்டையில் உள்ள விலங்கு நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையத்தைப் பற்றிக் குறிப்பிடாவிட்டால், கால்நடை அபிவிருத்தித் துறையின் சாதனைகளை முற்ற எடுத்துரைத்தது ஆகாது. இந் நிலையம் 1932ல் எளிய முறையில் தொடங்கப்பட்டது. கோமாரி நோயிலிருந்து கால்நடைகளைக் காப்பாற்றக் கோமாரி தடுப்பு நிண நீர் மருந்துகள் தயாரிக்கப்பட்டன. பின்னர் படிப் படியே, மிருகங்களைப் பீடிக்கும் பல்வகைப்பட்ட நோய்களைப் பற்றி ஆராய்வதுடன், விலங்கு நோய்களுக்கான மருந்துப் பொருள்கள் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளது. முதல் திட்டக் காலத்தில் இங்கு ரூ. 7,000 செலவில் ஒரு நூல் நிலையம் அமைக்கப்பட்டது. இங்குத் தயாரான கோமாரி அம்மைப் பால் ஆந்திரா, குடகு ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்டது.

மாநிலத்தில் கோமாரி நோய் ஒழிக்கப்பட்டுவிட்ட போதிலும், அகில இந்தியத் திட்டத்தின்கீழ் இந் நோயை ஒழிப்பதற்காகத் தொடர்ந்து அம்மைப்பால் தயாரிக்கப்பட்டது. இதற்கு இந்திய அரசாங்கம் உதவியதுடன், வேண்டிய சாதனங்களையும் கொடுத்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2·421 கோடி டோஸ்கள் அம்மைப் பால் தயாரிக்கப்பட்டு, திட்டத்தில் கலந்து கொண்ட பல்வேறு மாநிலங்களுக்கும் 2·167 கோடி டோஸ்கள் வழங்கப்பட்டன. கடந்த நான்கு ஆண்டுகளில் அம்மைப்பால் தயாரிப்புக்கு ரூ. 4·58 லட்சம் செலவிடப்பட்டது; அதன் விற்பனையிலிருந்து ரூ. 4·70 லட்சம் கிடைக்கப் பெற்றது. ராணிப்பேட்டையில் அமைந்துள்ள இந் நிலையத்தின் சாதனைகளைக் குறித்து வட ஆர்க்காடு மாவட்டம் உண்மையில் பெருமைப்பட முடியும்.

சாதனை விவரம்	இரண்டாவது திட்ட இறுதியில்
(1) விலங்கு மருத்துவ மனைகள் (உதவி மருத்துவ நிலையங்களையும் சேர்த்து)	11
(2) செயற்கைக் கருமுறை நிலையங்களின் எண்ணிக்கை	8
இந்நிலையங்களில் உள்ள காளைகளின் எண்ணிக்கை	10
(3) துணை விஸ்தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை	3
இந்நிலையங்களில் உள்ள காளைகளின் எண்ணிக்கை	150
(4) மானிய உதவி அளிக்கப்பட்ட கோழி வளர்ப்போர் எண்ணிக்கை	8
மானிய உதவியாக அளிக்கப்பட்ட தொகை	ரூ. 3,200
(5) மாவட்டக் கால்நடைக் காட்சிகள், செம்மறி, வெள்ளாடு காட்சி, கோழிக் காட்சி	5
(6) விலங்கு நோய்த் தடுப்பு மருத்துவ நிலையம் :	
உற்பத்தி செய்யப்பட்ட டோஸ்கள்	2,42,00,000
மற்ற மாநிலங்களுக்கு விநியோகிக்கப் பட்ட டோஸ்கள்	2,16,70,000
உற்பத்திக்குச் செலவான தொகை	ரூ. 4·58 லட்சம்
விற்பனையில் கிடைத்த தொகை	ரூ. 4·70 லட்சம்

வான்மழை தரும் வனங்கள்

காடும் காடு சார்ந்த இடமும் முன்னாட்களில் 'முல்லை' எனக் குறிக்கப் பெற்றன. காடுகளின் இன்றியமையாச் சிறப்பைத் தமிழர் தெளிவாக உணர்ந்திருந்தனர். வெயில் நுழைய முடியாதவாறு தழைத்து வளர்ந்த வனங்களும், அடர்ந்து இருண்ட காடுகளும் அக்காலத்தில் நிறைந்திருந்தன. அதனால் அவர்களது வாழ்க்கையிலும் வளம் பெருகிக் காணப் பட்டது.

காடுகள் மழை வளஞ் சிறக்க உதவுகின்றன ; வெள்ளங்களைத் தடுக்கின்றன ; வாணிபப் பொருள்களை அளிக்கின்றன ; வன விலங்குகளைப் பாதுகாக்கின்றன. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை தமிழ் நாட்டில் அடர்ந்த காடுகள் இருந்துவந்தன. காட்டுப் பாக்கம், மறைக்காடு, திண்டி வனம், ஆர்க்காடு, ஆலங்காடு, வேற் காடு முதலிய ஊர்ப் பெயர்கள் இந்த உண்மையினை நிலைநாட்டு கின்றன. நாகரிகப் பாங்கும், அந்நிய ஆட்சியின் புறக்கணிப்பும் இக்காடுகள் அழிந்துவரக் காரணமாயின. வனக் குறைவினால் வளங்குறைவதும் இயல்பாயிற்று. ஆகையினால், நாம் காடுகளை

மிகுந்த கவனத்துடன் பாதுகாத்து வளர்த்துவர வேண்டியது அவசியம் ஆகும்.


இம்மாவட்டத்தில் வனத்துறையினரின் கண்காணிப்பிலிருக்கும் வனவகைகள் பின்வருமாறு: (1) ஒதுக்கப்பட்ட காடுகள்; (2) முன்னாள் பஞ்சாயத்து ஒதுக்கக் காடுகள்; (3) முன்னாள் ஜமீன் காடுகளும், ஒதுக்கப்பட்ட நிலங்களும். புதுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டபோது, பின்னால் சொல்லப்பட்ட இருவகை வனங்களும் மிக மோசமான நிலையில் இருந்தன. கட்டுப்பாடற்ற முறையில் ஆடுமாடுகள் மேய்க்கப்பட்டதாலும், மிக அதிக அளவில் வனங்கள் அழிக்கப்பட்டதாலும் அவை இந்த நிலைக்கு ஆளாயின. இவ்வாறு சீரழிந்த காடுகளுக்குப் புனர் வாழ்வளிக்க முதல் திட்டக் காலத்திலும் இரண்டாவது திட்டக் காலத்திலும் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. காடுகளை அபிவிருத்தி செய்தல், அதிக அளவில் காடுகளை உண்டாக்குதல் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களாக விளங்கும் மர ஆதாரங்களை அபிவிருத்தி செய்தல், வீட்டுக்கும் வேளாண்மைக்கும் தேவைப்படும் மரங்களை அளித்தல் முதலியவற்றிற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

விறகு மரங்கள்

கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் வெட்டு மரத்திற்கும் விறகுக்கும் இருக்கும் தேவையை ஈடுசெய்வதற்காக அழிந்த பஞ்சாயத்துக் காடுகள் புதுப்பிக்கப்பட்டன. விறகு மரங்களையும், புல் தரைகளையும் உண்டாக்குவதின் மூலம், மண் அரிப்பைத் தடுத்து மண் வளத்தைப் பாதுகாக்க முடியும். இதனால் அருகிலுள்ள சாகுபடி நிலங்களிலும் மண் வளம் பாதுகாக்கப்படும். விறகு மரங்கள், புல் வகைகள் பயிராக்கப்பட்ட பரப்பும், அதற்குச் செலவான தொகையும் பின்வருமாறு:

	ஏக்கர்கள்	செலவு
முதல் ஐந்தாண்டுத் திட்டம்	4,230	ரூ. 97,836
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்	20,759	ரூ. 6,66,910

வனத் துறையினரால் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மிக மோசமாக மண்ணரிப்பு ஏற்பட்ட மலைச் சரிவுகளில் மறுபடியும் மரங்களை நடுவதின் மூலம் மண் அரிப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கலாம் என்பதே திட்டத்தின் நோக்கம். இச்செடிகள் மரங்களாக வளர்ந்ததும் எரிக்க விறகும் கிடைக்கும். இத்திட்டத்தின்கீழ் 3,374 ஏக்கர் பரப்பு



மண்வளப் பாதுகாப்புக்கு மரங்கள் நடப்பட்டுள்ளன

எடுத்துக் கொள்ளப்பட்டது ; ரூ. 1·461 லட்சம் செலவில் காடுகள் வளர்க்கப்பட்டன.

	ஏக்கர்	செலவு
முதல் ஐந்தாண்டுத் திட்டம்	550	ரூ. 18,581
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்	2,824	ரூ. 1,27,546

தீக்குச்சி மரங்கள்

திக்குச்சி மரத்தின் தேவை அதிகரித்து வருகிறது. அந்தமானிலிருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் அதிக அளவில் திக்குச்சி மரம் இறக்குமதி செய்யப்படுகிறது. எனவே, நமது தேவையை நமது நாட்டிலேயே பூர்த்தி செய்துகொள்ளும் அளவில் "திக்குச்சி மர அபிவிருத்தி" திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இரண்டு திட்டக் காலங்களிலும் 781 ஏக்கரா பரப்பில் ரூ. 62,000 செலவில் திக்குச்சி மரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

	ஏக்கர்	செலவு
முதல் ஐந்தாண்டுத் திட்டம்	229	ரூ. 15,127
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்	552	ரூ. 46,610

கட்டட வகையறாக்களுக்குத் தேவையான மதிப்பு வாய்ந்த நல்ல வெட்டு மரங்களை விநியோகிப்பதற்காக, தேக்கு, நூக்க மரம், மூங்கில் போன்ற வாணிப மதிப்பு மிக்க வெட்டு மரங்களை நட்டுப் பயிராக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. முதல் திட்டக்கால இறுதி வரையில் இத்திட்டம் உருப்பெறவில்லை. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 20,626 செலவில் மதிப்பு வாய்ந்த வெட்டுமர வகைகள் 255 ஏக்கர்களில் வைக்கப்பட்டன.

தேக்கும் மூங்கிலும் பயிராக்கப்பட்டன. பயிராக்கப்படும் மூங்கில்கள் வளர்ந்த நிலையில், எதிர்காலத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள காகித ஆலைக்குத் தேவையான மூங்கில்களை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கால்நடை அபிவிருத்திக்காக வனத்துறையினரால் இரண்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது, (1) மேய்ச்சல் காடுகளை உண்டாக்குதலும், புல்வெளியை அபிவிருத்தி செய்தலும், (2) தீனி, மேய்ச்சல் நிலங்களை அபிவிருத்தி செய்தல். முதல் திட்டத்தின் நோக்கம் ஒதுக்கப்பட்ட காடுகளின் உட்புறத்தில் தீனி ஆதாரங்களை அபிவிருத்தி செய்தல் ஆகும். அப்பொழுது கூடவே ஒதுக்கப்பட்ட காடுகளின் உட்புறத்திலுள்ள வற்றாத நீர் ஆதாரங்களும் அபிவிருத்தி யடைகின்றன. இரண்டாவது திட்டத்தின் நோக்கம் ஒதுக்கக் காடுகளில் அரிக்கப்பட்ட நிலப்பரப்பில் கரைகளை உயர்த்துவதன் மூலமும், இடைவெளிகளை அடைத்துச் சமப்படுத்துவதன் மூலமும் அந்தப் பகுதியை மீட்டல்; கால்நடைகளுக்கு வேண்டிய புல், தீனி ஆதாரங்களை உண்டாக்குதல். இரண்டாவது திட்டக் காலத்தில் இத்திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்பட்ட வேலைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் பின்வருமாறு :

	ஏக்கர்கள்	செலவு
புல்வெளிகளை ஏற்படுத்தல்	1,375	ரூ. 20,782
தீனி, மேய்ச்சல் தரைகளை அபிவிருத்தி செய்தல்	1,414	ரூ. 77,282

குடியிருப்பு வசதி

வனத்துறை அதிகாரிகளுக்குக் காடுகளை அடுத்துள்ள பகுதிகளில் குடியிருப்பு இல்லங்களை அமைத்துக் கொடுக்க வேண்டியதும் அவசியமாகும். ஏனெனில், அப்பொழுதுதான் அவர்கள் காடுகளை நல்ல முறையில் பாதுகாத்துக் கொள்வர் ; மரம் நடும் வேலையையும் செம்மையான முறையில் மேற்பார்வையிடுவர். இவ்வித இல்லங்கள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் முதல் திட்டக் காலத்திலேயே நன்கு உணரப்பட்டிருந்த போதிலும் அப்பொழுது இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள முடியவில்லை. இரண்டாவது திட்டக் காலத்தில் சுமார் ரூ. 1·82 லட்சம் செலவில் 26 இல்லங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

கிராமப்புறங்களில் தரிசாகக் கிடக்கும் நிலங்களில் மர வகைகளை வளர்க்கும் ஒரு விசேஷ திட்டம் 1960-61-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்குப் பண்ணைக்காடு வளர்ச்சித் திட்டம்

என்று பெயர். சமுதாயநல வளர்ச்சி வட்டாரங்கள் மூலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டான 1960-61-இல் ரூ. 38,000 செலவில் வெம்பாக்கம், பெரணமல்லூர் வட்டாரங்களில் 508 ஏக்கரா பரப்பில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு சமுதாய நல வளர்ச்சி வட்டாரத்திலும் 100 ஏக்கரா பரப்பில் பண்ணைக்காடு வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இத்திட்டம் மூன்றாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இத்திட்டத்தோடு கூட தழை உர வித்துக்கள் பண்ணைகளும். ஏற்படுத்தப்படுகின்றன. வேளாண்மைக் காரியங்களுக்காகத் தழை உரங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு வித்துக்களை விநியோகிப்பது இப்பண்ணைகளின் நோக்கமாகும். இந்தக் காரியத்திற்காக 1960-61ல் 20 ஏக்கரா பரப்பு பயன்படுத்தப்பட்டது.

கல்விப் பணி

ஜவ்வாது மலைகளில் வாழும் மக்களின் நலத்திற்கான ஒரு சில திட்டங்களையும் வனத்துறையினர் நிறைவேற்றி வருகின்றனர். திருப்பத்தூர் ஜவ்வாது மலைகளில் வாழும் மலையாளிகளுக்கு உழவுக் காளைகள் வாங்கக் கடன் அளிக்கப்பட்டது. மலையாளிகளின் நலன் கருதி வனத்துறையினர் 8 தொடக்கப் பள்ளிகளை நடத்துகின்றனர். புதூர் தொடக்கப்பள்ளி அண்மையில் உயர் தொடக்கப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. அத்துடன் அங்கு ஒரு உணவு விடுதியும் கட்டப்பட்டது. இந்தப் பள்ளிகள் அனைத்திலும் மாணவர்களுக்கு நண்பகலுணவு அளிக்கப்படுகிறது. இவ்வாறு வனத்துறை மெல்ல நலத்துறையாகவும், காலத்தை ஒட்டி மாறிவருகிறது.

வேளாண்மை நடைபெறாத காலங்களில் மலையாளிகளுக்கு வனத்துறையினர் வேலை வாய்ப்பு அளித்துள்ளனர். ஜவ்வாது மலைகளில் வாழும் மலையாளிகளுக்கு, காடுகளைப் புனரமைப்புச் செய்தல், சந்தனக் கட்டை, மற்ற வெட்டு மரங்கள் போன்றவற்றை எடுததல் முதலிய காரியங்களுக்கு நிலவரத்திலுள்ள வழக்கமான கூலி விதங்களே கொடுக்கப்படுகின்றன.

மூங்கில், விறகு, புளியமரம் மற்றக் காடுபடு சிறு பொருள்கள் ஆகியவை இம்மாவட்டக் காடுகளில் கிடைக்கும் முக்கியமான பொருள்களாகும். இவற்றில் மிகச் சிறந்து விளங்குபவை சந்தனக் கட்டைகளாகும். இம்மாவட்ட மலைகளில் சந்தனக் கட்டைகள் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. இவை ஆண்டுக்கு இரு முறை திருப்பத்தூர் மார்க்கெட்டில் விற்கப்படுகின்றன. மலைகளில் கிடைக்கும் சந்தனக் கட்டைகள், வெட்டு மரவகைகள்

போன்றவற்றை அருகிலுள்ள சமவெளி மார்க்கெட்டுகளுக்குக் கொண்டுவர நல்ல பாதை வசதி அவசியமாகும்.

வட ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களிலுள்ள காடுகளைக் கவனித்துக் கொள்ள ஒரு புதிய எஞ்சினீயரிங் டிவிஷன் 1958-இல் ஏற்படுத்தப்பட்டது. பழைய பாதைகளை அபிவிருத்தி செய்தல், புதுப் பாதைகளைப் போடுதல் ஆகிய இரண்டு காரியங்களையும் இந்தப் பிரிவு கவனித்துக் கொண்டது. இதுவரை 22 மைல்கள் புதிய காட்டுப் பாதைகள் போடப்பட்டுள்ளன ; 18½ மைல்கள் பழைய பாதைகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. மேலும் 17 மைல்கள் புதிய காட்டுப் பாதைகள் அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (சேலத்தில் போடப்பட்ட காட்டுப் பாதைகளின் நீளமும் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.)

எதிர் காலத்தில்


முன்னாள் பஞ்சாயத்துக் காடுகள், முன்னாள் ஜமீன் காடுகள் உள்ளிட்ட, ஏறத்தாழக் காடழிந்த பரப்பு முழுவதிலும் கடந்த பத்தாண்டுகளில் முனைப்பான முறையில் காடுகள் வளர்க்கப்பட்ட காரணத்தினால் கணிசமான அளவு காட்டுப் பகுதிகள் விரிவடைந்துள்ளன. தீப்பெட்டித் தொழிற்சாலை போன்ற சிறு அளவுத் தொழில்களுக்கு எதிர்காலத்தில் வேண்டிய கச்சாப் பொருள்கள் கிடைக்கும். முதல் திட்டக் காலத்தில் ரூ. 2,500 செலவில் வாட்டிலும், புளுகமும் 45 ஏக்கரா பரப்பில் நடப்பட்டன. தாழ்ந்த மலைப் பிரதேசங்களில் நடப்பட்டுள்ள மரங்கள் வேர் ஊன்றி வலிவு பெற்றுவிட்டால் நல்ல சாகுபடி நிலங்களில் மண் அரிப்பு வெகுவாகக் குறைக்கப்பட்டுவிடும். மாவட்ட முழுவதிலும் வரப்போகிற ஆண்டுகளில் வளர்க்கப்படப் போகும் பண்ணைக்காடு திட்டத்தின் மூலம், பிரதேச மக்களுக்கு விறகும், வெட்டு மரமும் கிடைக்கும்.

		முதல் திட்டம்	இரண்டாவது திட்டம்
I	காடுகள் புனரமைப்பு		
	(ஏக்கர் பரப்பில்)	4,239	20,759
	(செலவு)	ரூ. 97,336	ரூ. 6,66,910
II	மரங்கள் நடுவதன் மூலம் மண்வளப் பாதுகாப்பு		
	(ஏக்கர் பரப்பில்)	550	2,824
	(செலவு)	ரூ. 18,581	ரூ. 1,27,546
III	தீக்குச்சி மரங்கள் நடுதல்		
	(ஏக்கர் பரப்பில்)	229	552
	(செலவு)	ரூ. 15,127	ரூ. 46,610
IV	மதிப்பு வாய்ந்த வெட்டு மரங்களை நடுதல்		
	(ஏக்கர் பரப்பில்)	—	255
	(செலவு)	—	ரூ. 20,626

V	புல் வெளிகளை ஏற்படுத்தல்		
	(ஏக்கர் பரப்பில்)	—	1,375
	(செலவு)	—	ரூ. 20,782
VI	தீனி, மேய்ச்சல்தரை அபிவிருத்தி		
	(ஏக்கர் பரப்பில்)	—	1,414
	(செலவு)	—	ரூ. 77,282
VII	பண்ணைக் காடு		
	(ஏக்கர் பரப்பில்)	—	508
	(செலவு)	—	ரூ. 38,000
VIII	வனத் துறையினரால் நடத்தப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை 8		

துள்ளும் மீன்கள்

நாட்டு வளத்தைப் பாடவந்த இலக்கியப் புலவர் அனைவரும் பண்டை நாளில் மீன் வளத்தையும் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். ஒரு நாட்டின் செழிப்புக்கு மீன் மிகுந்திருப்பதும் காரணம் என்பதை விளக்கத் தேவையில்லை. முத்தமிழ் நாட்டை ஆண்ட முடியுடை மூவேந்தரில் பாண்டியரின் கொடி மீனக் கொடியாகும். இதிலிருந்து, மீன்வளத்திற்கு நமது முன்னோர் அளித்து வந்த சிறப்பை நாம் உணர முடியும்.



ஆகையினால், கிராமப் பொருளாதார வளத்திற்கு மீன் அள அபிவிருத்தி முக்கியமானதாக விளங்குகிறது. மீன் வளர்ப்பின்மூலம் துணை வருமானம் கிடைக்கிறது. அத்துடன், கிராமத்தில் உணவுப் பிரச்சினையைப் போக்கவும் அது ஓரளவு உதவக் கூடும்.

மீன் வளர்ப்பு

வட ஆர்க்காடு மாவட்டம் உள் நாட்டில் இருப்பதனால், இங்கு உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் அபிவிருத்திக்குத் திட்டங்களைத் தீட்டுவதன் மூலமே பலன் அடைய இயலும். பாசன அணைக்கட்டில் மீன் அபிவிருத்தி, முனைப்பான முறையில் மீன் குஞ்சுகளைச் சேகரித்து விநியோகித்தல் ஆகிய இரண்டும் இத் திட்டத்தின் இரு பெரிய பிரிவுகள் ஆகும். மீன் அங்காடிகள் சுகாதாரமான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டன. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் உதவி அளிக்கப்பட்டது.

1958-ம் ஆண்டில் முடிக்கப்பட்ட சாத்தனூர் அணைக்கட்டில், 1959 ல் மீன் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

1961ம் ஆண்டு வரை சுமார் 9 லட்சம் மீன் குஞ்சுகள் விட்டு வளர்க்கப்பட்டன. இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு இவ்வாறு குஞ்சுகள் முனைப்பான முறையில் விட்டு வளர்க்கப்படும். அதன் பின்னர், அணைக்கட்டில் மீன் பிடிக்க லைசென்சுகள் வழங்கப்படும். இந்த அணைக்கட்டில் உள்ள மீன் அளத்தின் வாயிலாக 500 மீனவர்கள் பயன் பெறுவர் என்றும், அவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வருமானம் கிடைக்கும் என்றும் மதிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த அணைக்கட்டின் மூலம் 1963ம் ஆண்டிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 50,000 ராத்தல் மீன்கள் கிடைக்கும்.

முனைப்பான முறையில் மீன் குஞ்சுகளைச் சேகரித்து வினியோகிக்கும் திட்டத்தின் கீழ், விரைவில் வளர்ச்சி அடையும் பொருளாதார இனங்களைச் சேர்ந்த 25 லட்சம் மீன் குஞ்சுகள்



மீன் குஞ்சுகள் சேகரித்தல்


முதல், இரண்டாவது திட்டக் காலங்களில், இம் மாவட்டத்தில் உள்ள புதுநீர் நிலைகள் எல்லாவற்றிலும் விட்டு வளர்ப்பதற்காகச் சேகரிக்கப் பட்டன. திட்டக்காலத்தில் 6,000 ஏக்கர் அளவு வரை நீர் நிலைகளில் மீன்கள் வளர்க்கப்பட்டன. ஆண்டு ஒன்றுக்கு 12,000 ராத்தலுக்கு மேல் மீன் உற்பத்தி அதிகரித்தது. பெண்ணையாற்றின் குறுக்கே சாத்தனூர் அணை கட்டப்பட்டதன் காரணமாக, கசிவு அணைப் பகுதியில் புதிய மீன் குஞ்சுகள் சேகரிக்கும் நிலையம் அமைந்துள்ளது. இதிலிருந்து ஆண்டு தோறும் 3 லட்சம் மீன் குஞ்சுகள் சேகரிக்கப்படுகின்றன.

சுகாதார முறையில் மீன் அங்காடிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆரணி, திமிரி, ராணிப்பேட்டை நகரசபைகளுக்கு ரூ. 4,600 உதவித் தொகை (செலவில் 50 சதவீதம்) அளிக்கப் பட்டது. மீனவர்கள் மீன்பிடி கருவிகளை வாங்கவும், தங்கள் கடனை அடைக்கவும் அவர்களுக்கு ரூ. 13,400 கடனுதவி வழங்கப்பட்டது. இது நடுத்தரத் தவணைக் கடன். இதனை அவர்கள் ஐந்தாண்டுகளில் அடைக்க வேண்டும். இந்தக் கடன் தொகையானது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் காவேரிப்பாக்கம், வாழைப்பந்தல், முப்பது வெட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மூன்று மீனவர் கூட்டுறவுச் சங்கங் களின் மூலம் கொடுக்கப்பட்டது.

திருவண்ணாமலை, ஆரணியில் உள்ள நகரசபை, கோயில் குளங்கள் போன்ற செயல்முறைக் காட்சி நீர்நிலைகளையும் மீன் அளத்துறையினர் பாதுகாத்து வருகின்றனர். அதிக அளவில் மீன்கள் பிடிக்கப்பட்டுத் தினமும் பொதுமக்களுக்கு விற்கப்படு கின்றன. இந்த நகரங்களில் மீன் உணவு உட்கொள்ளும் மக்களுக்கு ஆண்டு தோறும் சுமார் 25,000 ராத்தல் மீன், மீன் அளத் துறையினரால் விநியோகிக்கப் படுகிறது.

இரண்டாவது திட்டக் காலம்

I.	பெரிய அணைக்கட்டுத் திட்டம்: (சாத்தனூர் அணைக்கட்டு) 1961 வரை விட்டு வளர்க்கப் பட்ட மீன் குஞ்சுகள்	9 லட்சம்
II.	முனைப்பான முறையில் மீன் குஞ்சுகளைச் சேகரித்து விநியோகித்தல்:	
	சேகரிக்கப்பட்ட மீன் குஞ்சுகள்	25 லட்சம் (முதல், இரண்டாவது திட்டங்கள்)
	மீன் விட்டு வளர்க்கப்படும் நீர் நிலைகளின் பரப்பு	6,000 ஏக்கர்கள்
	மீன் உற்பத்தி அதிகரிப்பு	ஆண்டு ஒன்றுக்கு 12,000 ராத்தல்
III.	மீன் அங்காடிகள் அபிவிருத்தி:	
	அங்காடிகளின் எண்ணிக்கை	3
	உதவித் தொகை	ரூ. 4,600
IV.	மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்:	
	கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை	3
	கடன் கொடுக்கப்பட்ட தொகை	ரூ. 13,400
V.	செயல் முறைக் காட்சி நீர் நிலைகள்:	
	பிடிபட்ட மீன்: ஆண்டு ஒன்றுக்கு (தோராயமாக)	25,000 ராத்தல்



கிராமங்களில் புதுவாழ்வு

"மாநிலம் பயனுற வாழ்வதற்கே" நமது திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் வெற்றி மக்களின் வெற்றி. ஆகையினால், திட்டங்களினால் நாட்டு மக்கள் அனைவருக்கும் நல் வாழ்வு கிட்டவேண்டும். அப்படியில்லாமல், சமுதாயத்தில் ஒரு சிலருக்கு மட்டும் வாய்ப்பும் வசதியும் அளித்து, மற்றவரைப் புறக் கணித்தால் அது உண்மையான முன்னேற்றம் ஆகாது. அதனால் சமுதாய வாழ்க்கை சீரழிந்தே போகும்.

நாடு என்பது என்ன? மாட மாளிகைகளும், கூட கோபுரங் களும் நிறைந்த பெரிய பெரிய பட்டணங்கள் மட்டும்தானா? இல்லவேயில்லை. வயலும் வரப்படுத்த வாய்க்காலும் நிறைந்த சிற்றூர்கள், மலைகள், ஆறுகள், அனைத்துக்கும் மேலாக நாட்டின் பல பாகங்களிலும் வாழும் மக்கள் ஆகிய அனைவரும் சேர்ந்தே ஒரு நாடாகின்றனர். எனவே, நாட்டு முன்னேற்றம் என்பது அந்நாட்டு மக்களின் முன்னேற்றமே ஆகும்.

இன்று தமிழ்நாட்டில் சுமார் 19,000 கிராமங்கள் இருக்கின்றன. இவற்றைப் புறக்கணித்து நாடு வளர்ச்சியடைய முடியாது. நகரங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் உழைப்பையும் கொடுத்து உதவுபவை கிராமங்களே. ஆகையினால் கிராமங்கள் முன்னேற்றம் பெற்று விளங்கினால்தான், நகரங்களும் நலமாக இருக்க முடியும். இதனை உணர்ந்தே, " இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்று பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். காந்தியடிகளும் நம் நாட்டின் இருதயம் இருக்கும் இடமாகக் கிராமங்களை மதித்து, அவற்றின் உயர்வுக்காக வாழ்நாளெல்லாம் அயராது பாடுபட்டார்.

கிராமங்களின் நல்வாழ்வு சமுதாய வாழ்க்கையின் அடிப்படையில்தான் அமைய முடியும். இந்த நிலைமை நம் நாட்டில் பண்டைக் காலத்தில் நீடித்திருந்தது. கிராமத்தின் பொதுக் காரியங்களை மக்களே ஒன்றுகூடிக் கவனித்துக் கொண்டார்கள். வைகையில் நீர் பெருக்கெடுத்துக் கரைபுரண்டபோது, வீட்டுக்கு ஓர் ஆள் வந்து கரையமைக்குமாறு பாண்டிய மன்னன் பணித்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. பொதுக் காரியத்தை நிறைவேற்றுவதில் அனைவருக்கும் பொறுப்பு உண்டு என்பதையே இந்நிகழ்ச்சி நினைவூட்டுகிறது.

கடமை நெறி


பொன் முடியார் என்ற புலவர் பெருமாட்டி பாடிய புறப்பாட்டு ஒன்றில், மகனைப் பெற்று வளர்த்தல் தனது கடமையாகவும், அவனைச் சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமையாகவும், வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமையாகவும், நன்னடை நல்கல் வேந்தனின் கடமையாகவும், போர்க்களத்தில் யானையைக் கொன்று வீழ்த்தல் அக்காளையின் கடமையாகவும் கூறப்பட்டுள்ளன. கிராம வாழ்க்கை சீராகச் செயல்படுவதற்கு ஒவ்வொருவரின் திறமை, தகுதிக்கு ஏற்றவாறு கடமைகள் வகுக்கப்பட்டிருந்தன.

மக்கள் அனைவருக்கும் வாய்ப்புக்கள் அளித்து, அவர்களைச் சிந்திக்கச் செய்து கிராமங்களின் மறுமலர்ச்சிக்கு வழிகோலவே சமுதாயநல வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. கிராம மக்களின் செயல்திறம், அறிவு, ஆற்றல், தொண்டுள்ளம், முன்னேற்ற ஆர்வம் முதலியவற்றை முறையாகப் பயன்படுத்தி அவர்களது வாழ்வு உயர வழிகாட்டிக் கைகொடுத்து உதவுவதே இத்திட்டங்களின் நோக்கம். இவை ஆரம்பத்தில் மக்கள் உதவி பெறும் அரசாங்கத் திட்டங்களாக இருந்து, இப்பொழுது அரசாங்க உதவி பெறும் மக்களின் திட்டங்களாக மாறியிருக்கின்றன.

ஒரு புதுச் சோதனையில் நாம் வெற்றிபெற்று அதன் பலனை அவனிக்கு உணர்த்த இருக்கின்றோம். ''எல்லாரும் அமர நிலை எய்தும் நன் முறையை'' இது உலகுக்கு விளக்கிக் காட்டு கிறது.

சமுதாய வளர்ச்சி

வட ஆர்க்காடு மாவட்டம் மொத்தம் 36 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 22 வட்டாரங்கள், இரண்டாம் திட்ட இறுதிவரையில் சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. மேலும் 4 வட்டாரங்கள் 1-4-61-ல் தொடங்கப்பட்டன. இவற்றுள் 7 வட்டாரங்களில் 1960 அக்டோபரிலும், 9 வட்டாரங்களில் 1961 ஏப்ரலிலும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டன. இரண்டாவது திட்ட இறுதியில், 4 பூர்வாங்க வட்டாரங்களும், ஒரு சமுதாயநல வளர்ச்சி வட்டார மும், 14 முதல் நிலை வட்டாரங்களும், 3 இரண்டாம் நிலை வட்டாரங் களும் இருந்தன.



சமுதாய நிலையம், வேலூர்ப் பஞ்சாயத்து

சமுதாய வளர்ச்சித் திட்டத்தில்பல அபிவிருத்தித் திட்டங்கள் அடங்குகின்றன: வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, உடல் நலமும் கிராமச் சுகாதாரமும், கல்வி, சமூகக் கல்வி, போக்கு வரத்து, கிராமக் கலைகள், கைத்தொழில்கள், கதர், குடியிருப்பு, பெண்கள் நலம் முதலியவை அடங்குகின்றன. சுருங்கக் கூறினால், சமுதாயநல வளர்ச்சித் திட்டம் கிராம வாழ்க்கையின் எல்லா அம் சங்களிலும் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கிறது; வேளாண் மைக்குச் சிறப்பான இடத்தை அளிக்கிறது.

வேளாண்மை விஸ்தரிப்புத் திட்டம், முன்னேற்றச் சாகுபடி முறைகளைக் கைக்கொள்ளுதல், புதிய சாகுபடிக் கருவிகளைப் பயன்படுத்துதல், தழை உரங்களைச் சாகுபடி செய்தல், நோய்த் தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்துதல், உயர்தர வித்துக்களை விநியோகித்தல் முதலானவற்றுக்கு வகை செய்துள்ளது. இவ்வித முன்னேற்றம் மிக்க முறைகளில் சாகுபடி செய்ய உழவர்களைத் தூண்டுவதற்கான எல்லா உதவிகளையும் சமுதாயநல வளர்ச்சி வட்டாரங்கள் செய்கின்றன. கருவிகளையும், சாதனங்களையும் பாதி விலைக்குக் கொடுத்தல், காய்கறி வித்துக்களைப் பாதி விலைக்கு விநியோகித்தல், தழை உரங்களைச் சாகுபடி செய்பவர்களுக்கு மானியம் அளித்தல் முதலான உதவிகள் அளிக்கப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில், இவ்வித முன்னேற்ற முறைகளைப் பற்றிக் குடியானவர்களுக்கு எடுத்து விளக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். ஏனெனில், அவர்கள் பரம்பரையாகப் பின்பற்றப் பட்டுவரும் பழைய முறைகளிலேயே கருத்தாய் இருப்பர். புதிய முறைகளில் உடனே நம்பிக்கை தோன்றுவது கொஞ்சம் சிரமமாக இருக்கும். இவற்றை அவர்கள் பின்பற்றச் செய்வதற்கான ஒரு வழி, அவர்களுக்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை மானியமாக அளிப்பது ஆகும். இதன் மூலம் அவர்களது உள்ளத்தில் அக்கறை உதயமாகுமாறு செய்யலாம். முன்னேற்ற முறைகளில் அதிகப் பலன் விளைகிறது என்பது அவர்களுக்கு ஒருமுறை கண்கூடாக விளங்கிவிட்டால், திட்டம் உறுதியாக வெற்றியடைந்துவிடும். திட்டம் மக்களின் திட்டமாக மாறும். அதிகாரிகளிடமிருந்து உழவர்கள் தொழில் நுணுக்க ஆலோசனைகளைப் பெற்று முன்னேற்ற முறைகளில் தொடர்ந்து பயிரிட்டு வருவார்கள்.

கண்கண்ட பலன்

முன்னேற்ற முறைகளைப் பின்பற்ற மானியம் அளிப்பதுடன், அவற்றைப் பற்றி உழவர்கள் நன்கு அறிந்துகொள்ளுமாறு செய்வதும், பலனைப் பற்றி நல்ல நம்பிக்கை ஏற்படுமாறு செய்வதும் அவசியம் ஆகும். சாகுபடி முறைகள் பலன் அளிக்க நீண்டகாலம் ஆகும்; நிச்சயமற்ற கால நிலை நிலவுதல், இயற்கையின் அனுகூலமற்ற தன்மை ஆகியவை, புதிய முறைகளினால் விரைவில் பலன் ஏற்படாதவாறு செய்யக்கூடும். ஆகையினால், காலப் போக்கில்தான் விஞ்ஞான முறைகளினால் உண்டாகும் பலன்களை உழவர்கள் உணர்ந்துகொள்ள இயலும். எனவே, சாகுபடி பற்றிய செயல் முறைக் காட்சிகளையும், பலன் பற்றிய செயல்முறைக் காட்சிகளையும், எச்சரிக்கையோடு திட்டமிட்ட முறையில் நிறைவேற்ற வேண்டும்.

அண்மைக் காலங்களில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வித முயற்சிகளினால் மிகுந்த பயன்

விளைந்துள்ளது. உழவர்கள் அனைவருமே ஜப்பானிய முறைச் சாகுபடியின் நன்மைகளை உணர்ந்துள்ளார்கள். தழை உரங்கள், பரம்படிக்கும் கருவிகள், இயந்திரக் கலப்பைகள் முதலானவற்றின் பயனும் அவர்களுக்குத் தெளிவாக விளங்கியுள்ளது. இப்போது இம் மாவட்டத்தில் ரசாயன உரத் தேவை மிக அதிகமாக இருக் கிறது; அவ்வளவையும் தீர்த்துவைப்பது கடினமாக இருக்கிறது.

சமீபத்தில் பல உழவர்கள் தழை உரங்களைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம்; ஒன்று, அதிக அளவில் ரசாயன உரங்கள் கிடைக்கவில்லை; இன்னொன்று, தழை உரத்தின் நன்மையை அவர்கள் உணர்ந்து கொண் டார்கள். சீமை அகத்தி போன்றவை இப்பொழுது குடியானவர்களுக்கு நன்கு பழக்கமாகியுள்ளன. இதே முறையில், உயர்தர வித்துக் களுக்கும் நல்ல கிராக்கி இருக் கிறது. இம் மாவட்டத்தின் வட பகுதியில் கரும்பு பயிராகிறது. தரமான கரும்புக் கரணைகளுக்கு மாவட்டத்தில் நல்ல தேவை இருக்கிறது. இதனைத் தீர்ப்பதற்கு, குடியாத்தத்தில் அமைந்துள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் பாடுபட்டு வருகிறது.



கிணறு தோண்டவும், காளைகள், வித்துக்கள், எரு முதலிய வற்றை வாங்கவும் வட்டாரங்களினல் குடியானவர்களுக்கு அளிக் கப்படும் கடன் தொகை அதிகரித்து வந்துள்ளது.

மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிகமாக மக்கள் வேளாண்மைத் திட்டங்களில் பங் கெடுத்துக் கொள்ள முயற்சிகள் செய்யப்பட்டன. கிராம மட்டத் திலிருந்து நிறைவேற்றுவதற்கு வேளாண்மைக் கிராம உற்பத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. முன்னேற்ற முறைகளின் பலனைக் கண்டு, அவற்றைப் பின்பற்றி வரும் குடியானவர்களைக் 'கிராம சகாயக்குக'ளாகத் தேர்ந்தெடுத்து, அவர்களின் மனமுவந்த ஒத் துழைப்பின் மூலம் மற்றவர்களும் விஞ்ஞான முறைகளைக் கையாள முயலப்பட்டு வருகின்றது. கிராமம் முழுவதற்கும் கிடைக்கக்கூடிய அளவில் உயர்தர வித்துக்களைப் பெருக்குதல் போன்ற பணிகளில் அவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கிறது. மாவட்டத்தின் பஞ்சா யத்து யூனியன்களில் அடங்கிய ஒவ்வொரு கிராமத்திலும், கிராம

சகாயக்குகள், மற்றக் குடியானவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பையும், விருப்பத்தையும் பெற்றே கிராம உற்பத்தித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மக்கள் பணமாகவும், உடல் உழைப்பாகவும் தங்கள் மனங் கனிந்த ஒத்துழைப்பை அளித்ததன் காரணமாக, வட்டாரங்களில் பல சாதனைகள் உண்டாக முடிந்தது. திட்டமிட்ட முறையிலும், பயனுள்ள வழியிலும், முனைப்பான நெறியிலும் பணிகள நிறைவேற்றப்பட்டன.

மக்களின் ஒத்துழைப்பு

மக்களின் ஒத்துழைப்பின் மூலம், சமுதாயநல வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எத்தகைய சிறந்த பணியாற்றமுடியும் என்பதற்கு, துருஞ்சாபுரம் வட்டாரத்தில் மல்லவாடி என்ற கிராமம் நல்லதொரு சான்றுக விளங்குகிறது. இது ஒரு சிறு கிராமம் ; மக்கள் தொகை 1957. இருந்தபோதிலும் இங்கு மக்களின் நலவளர்ச்சித் திட்டங்களுக்காக அரசாங்கம் ரூ. 1,16,000 அளவுக்கு உதவியுள்ளது. மக்களின் நன்கொடையாக ரூ. 43,000 கிடைத்தது.

கிராமத்தில் முன்பு இரண்டு பள்ளிகளே இருந்தன. அவற்றுள் ஒன்று ஹரிஜனநலத் துறையினரால் நடத்தப்பட்டது. இப்பொழுது இங்கு ஒர் உயர்நிலைப்பள்ளியும், மூன்று தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. பள்ளிகளுக்கு நல்ல கட்டடங்கள் இருக்கின்றன. அரசாங்கம் இவற்றுக்காக ரூ. 25,000 மானியம் அளித்துள்ளது. 5 குடிநீர்க் கிணறுகள் இறக்கப்பட்டன ; அல்லது பழுது பார்க்கப்பட்டன. ஒரு நீர்த்தொட்டி குடிநீர் கஷ்டத்தைத் நீர்த்து வைத்துள்ளது. தெருக்களில் வடிகால்கள் கட்டப்பட்டுள்ளன. கக்கூசுகள் கட்டப்பட்டிருக்கின்றன. கழிவுப் பொருள்களைச் சேர்க்கக் குப்பைத் தொட்டிகள் கொடுக்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொன்னல், கிராமம் சுகாதாரத் தூய்மையோடு விளங்குவதற்கான எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டுள்ளன.

பழங்குடி மரபினருக்காகவும், ஷெட்யூல்டு ஜாதியினருக்காகவும் ஹரிஜன நலத்துறையினரின் ஒத்துழைப்போடு 74 வீடுகள் கட்டப்பட்டன. கிராமத்தில் ஒரு வேளாண்மைப் பாங்கு உள்ளது. அதற்கு ரூ. 5,300 செலவில் ஒரு கிடங்கு கட்டப்பட்டிருக்கிறது. கயிறு உற்பத்தித்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் ஒன்று உள்ளது. ரூ. 2,250 மதிப்புள்ள கருவிகள் இதற்கு வழங்கப்பட்டுள்ளன. ஒர் இளைஞர் சங்கம் அமைக்கப்பட்டு, பாதி மானிய அடிப்படையில் ரூ.300 மதிப்புள்ள விளையாட்டுச் சாமான்கள் கொடுக்கப்பட்டுள்ளன ; ரூ. 3,700 செலவில் ஒரு வாசகசாலை திறக்கப்பட்டுள்ளது. ரூ. 700 செலவில் குழந்தைகள் பூங்கா ஒன்று அமைந்துள்ளது.

மூன்று மைல் நீளத்திற்குமேல் புதுப்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. மல்லவாடி, சொரந்தை பாசனக் குளங்கள் ரூ. 3,500 செலவில் அரசாங்கத்தால் பழுது பார்க்கப்பட்டன.

இந்த அளவு பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைத்ததனால், இக்கிராமத்தில் 1961-ல் ஆள் பலத்தைப் பயன்படுத்தும் திட்டம் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஆசிரியர்களுக்கு இரண்டு குடியிருப்புகள் கட்டப்பட்டன; இணைப்புச் சாலைகள் பழுது பார்க்கப்பட்டன; சாலைகளில் மரங்கள் வைக்கப்பட்டன. இந்தச் சிறப்புக்களுக்கெல்லாம் மேலாக, இம்மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட 3 செயற்கைக் கருமுறை நிலையங்களில் ஒன்று இக்கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நிலையத்தின் செலவு ரூ. 4,000; பொதுமக்கள் நன்கொடை ரூ. 2,000. திட்ட வேலைகளில் மக்கள் இணைந்து ஒத்துழைப்பதை இந்தக் கிராமம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

மாண்புறும் மக்களாட்சி

மக்களால், மக்களின் நன்மைக்காக நடத்தப்படும் மக்களது ஆட்சியே குடியாட்சி எனப்படுகிறது. உலக அரங்கில் பரிசோதனைக்கு உட்பட்ட எல்லா ஆட்சி முறைகளிலும் இதுவே சாலச் சிறந்ததாகத் திகழ்கிறது. "மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்" என்ற கருத்து மாறி, இன்று "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்ற லட்சியம் நிலைபெற்றுவிட்டது.

ஊராட்சியிலும் அபிவிருத்தி வேலைகளிலும் மக்களுக்குக் கூடுதல் உரிமைகளும் பொறுப்புகளும் வழங்கும் முயற்சியை ஒட்டி இன்று பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து போவதால், நிர்வாகம் மிகச் சக்தியுடனும் சுறுசுறுப்புடனும் செயல்பட முடிவதில்லை. அதைப் பரவலான முறையில் விநியோகம் செய்தால், நாட்டின் எல்லாப் பாகங்களும் முன்னேறுவதுடன், திட்டங்களின் நிறைவேற்றத்தில் மக்கள் பங்கும் மாண்பு பெற்று விளங்கும். தங்கள் பகுதி எவ்வாறு முன்னேற வேண்டும், அதற்கான வாய்ப்பும் வசதியும் யாவை, அவற்றை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வது போன்ற விஷயங்களை அப்பகுதி மக்களைக் காட்டிலும் மற்றவர்கள் திறம்பட உணர்ந்துகொண்டிருக்க இயலாது. ஆகையினால், ஒரு பகுதியின் முன்னேற்றத்திற்கு அங்கு வாழும் மக்களே முன்னின்று முனைந்து பணியாற்றினால் நல்ல பயன் ஏற்படுவது உறுதி.

பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டுக் கிராமங்கள் தம் வலுவிலேயே நிலைத்து நின்றன. அந்த அந்தக் கிராமத்துக்குத் தேவை

யான பொருள்கள் அவ்வப் பகுதிகளிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்று விளங்கியது. " நாடென்ப நாடா வளத்தன " என்று வள்ளுவர் நாட்டுக்குக் கூறியுள்ள இலக்கணம், கிராமத்திற்கும் பொருந்தியிருந்தது. முக்கியமாகச் சோழ மன்னர்களின் காலத்தில் கிராமங்கள் சிறு குடியரசுகளாகவே இயங்கி வந்தன. இதற்கு உத்திரமேரூர் கல்வெட்டு சிறந்த சான்றாக விளங்குகிறது. அக்காலத்தில் கிராமக் காரியங்களைக் கவனிக்கக் கிராமப் பிரதிநிதிகள் " குடவோலை " முறையால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் அக்கிராமத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள். அவர்களுக்கு வேண்டிய அதிகார வரம்பும் அரசனால் அளிக்கப்பட்டிருந்தது.

ஆயின், அந்நியர் ஆட்சிக் காலத்தில் நிர்வாக உரிமைகள் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு ஒரே இடத்தில் குவிக்கப்பட்டன. எந்த ஒரு காரியத்திற்கும் அரசாங்க உத்தரவு வேண்டும் ; மக்களின் பிரதிநிதிகளால் தம் விருப்பப்படி வளர்ச்சிப் பணிகளைச் செய்ய முடியாது என்ற நிலை ஏற்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னர்தான் இந்நிலை படிப்படியே மாற்றப்பட்டு அதிகாரம் மக்களின் கைக்குவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் கனிந்த ஒரு நிலையாகவே இன்று பஞ்சாயத்துகள் விளங்குகின்றன. இவை பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்குக் கடமைகளை மட்டும் கொடுக்கவில்லை ; அவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரங்களையும், பொருள் வசதியையும் அளித்துள்ளன. ஆகையினால், நம் நாட்டில் குடியாட்சி முறை அடித்தளத்திலிருந்து எழுப்பப்பட இவை வழிகாட்டுகின்றன. இவற்றின் வெற்றியைப் பொறுத்தே இந்நாட்டில் மக்களாட்சியின் வெற்றி அடங்கியிருக்கிறது.

பஞ்சாயத்துகளின் பொறுப்பு

சமுதாயநல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பும் இனிப் பஞ்சாயத்துகளைச் சார்ந்தது ஆகும். சுருங்கக் கூறுவதானல், யாரையும் நம்பி எதனையும் சார்ந்திராமல், கிராம மக்களைத் தங்கள் சுயபலத்துடனும், சுய சிந்தனையுடனும், சுதந்திரத்துடன் முன்னேற அதிகாரமளித்து வழி நடத்துவதுதான் பஞ்சாயத்து ஆட்சி. ஆகையினல், இதன் வெற்றிக்காகப் பாடுபட வேண்டியது ஒவ்வொருவரின் பொறுப்பான கடமையும் ஆகும்.

முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் இம்மாவட்டத்தில் 863 பஞ்சாயத்துகள் இருந்தன. இரண்டாவது திட்ட இறுதியில் 1,541 பஞ்சாயத்துகள் இருந்தன. இந்தப் பஞ்சாயத்துகள் இம்மாவட்டத்திலுள்ள 2,116 கிராமங்களை நிர்வகிக்கின்றன.

பஞ்சாயத்துச் சட்டம் 1958 ல் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, பஞ்சாயத்துகளின் அதிகாரங்கள், செயல் முறைகள், கடமைகள் ஆகியவை விரிவாக்கப் பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள மாவட்டக் கழகங்களுக்குப் பதில் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் அமைகின்றன. வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, கிராமத் தொழில்கள் முதலானவற்றின் வளர்ச்சிக்காக அமுலாக்கப்படும சமுதாயநல வளர்ச்சித் திட்டங்கள், இந்தக் கௌன்சில்கள், கிராமப் பஞ்சாயத்துகளின் பொறுப்பில் விடப்பட்டு வருகின்றன. இந்தப் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் தங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள சட்டபூர்வமான மற்றக் கடமைகளை நிறைவேற்றுவதுடன், உணவு உற்பத்தியைப் பெருக்குதல், மக்கள் தொகைப் பெருக்கத்தைத் திட்டமிட்ட முறையில் கட்டுப்படுத்துதல், கல்விச் செல்வத்தை எந்தவித வேறுபாடும் இன்றி அனைவரும் அடையுமாறு செய்தல் ஆகிய காரியங்களிலும் முக்கியப் பணி ஆற்றும்.

பஞ்சாயத்து யூனியன்கள்

1958 ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டப் பிரிவு 7 ன்படி, தேசிய நலப் பரப்புத் திட்டங்களுக்காக அபிவிருத்தி வட்டாரமாகப் பிரிக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு உள்ளூர்ப் பிரதேசத்தையும் பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரமாக அறிவிக்கவும், அப்படிப்பட்ட ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திற்கும் ஒரு பஞ்சாயத்து யூனியனை அமைக்கவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றுக்கும் ஒரு பஞ்சாயத்து கௌன்சில் அமைக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன்கள் அமைப்புக்கு வட ஆர்க்காடு மாவட்டம் 36 வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. 1960 அக்டோபர், 1961 ஏப்ரல் ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் 16 வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் அமைக்கப்பட்டன. எஞ்சிய 20 வட்டாரங்களிலும் 2—10—1961 ல் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது பஞ்சாயத்துகளும், மாவட்டக் கழகங்களும் தல நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்களாக விளங்குகின்றன. 1958 ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின்படி மாவட்டக் கழகங்கள் எடுக்கப்பட்டு அவைகளுக்குப் பதிலாகப் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாவட்டக் கழகங்களின் கடமைகளை நிறைவேற்றுவதுடன், சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களைச் சீரான முறையில் அமுலாக்க வேண்டிய பொறுப்பும் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களைச் சேர்ந்தது ஆகும். புதிய அமைப்பை ஒட்டிப் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள், மேலே சொன்ன கடமைகளை நிறைவேற்றுவதுடன்,

உணவு உற்பத்தியை அதிகரித்தல், முன்னேற்றச் சாகுபடி முறைகளைப் பின் பற்றுதல், விலங்குச் செல்வங்களைப் பேணி வளர்த்தல், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ளுதல், கிராமத் தொழில்களை வளர்த்தல் முதலான பல்வேறு பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும். 1950ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டப்படி அமைக்கப்பட்ட முதல் வகுப்புப் பஞ்சாயத்தும், இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்தும் முறையே நகரப் பஞ்சாயத்து என்றும், கிராமப் பஞ்சாயத்து என்றும் அழைக்கப்படும். பஞ்சாயத்து அங்கத்தினர்களின் எண்ணிக்கை 5 முதல் 15 வரை இருக்கும்.



திட்டமிடுவதற்கும், அதை அமுலாக்குவதற்கும் பஞ்சாயத்தை அடிப்படை அலகாகக்கொண்டு அபிவிருத்தி ஏற்படச் செய்வதே அரசாங்கத்தின் கொள்கை. உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக, வேளாண்மை அபிவிருத்தியையும், பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எண்ணம். நல்ல பலன் விளைய வேண்டும் என்பதற்காக, போதுமான அதிகாரங்கள், பாதுகாப்புகள், சந்தர்ப்பங்கள் ஆகியவை புதிய சட்டத்தின்மூலம் அளிக்கப்பட்டுள்ளன. நமது மாநிலத் தல நிர்வாகத்தில் புரட்சிகரமான ஓர் உன்னத நிலையை 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் தோற்றுவித்துள்ளது.

கூட்டுறவின் சாதனைகள்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே" என்பது எக்காலத்திற்கும், எந்நாட்டிற்கும் பொருந்தும் பழமொழியாகும். ஊர் ஒன்றி வாழ்வதால் ஒருவருக்கும் கேடு நேரிடாது. மாருக, அனைவருக்கும் அளவற்ற நன்மைகள் உண்டாகும். ஒருவரை மற்றவர் புரிந்து கொள்வதற்கும், ஒற்றுமையோடு உழைத்து அனைவரும் வாழ்க்கையில் உயர்வதற்கும் கூட்டுறவு இயக்கம் வழிகாட்டுகிறது.

நம் நாட்டில் வேளாண்மை சிறப்பாக முன்னேருததற்கு ஒரு முக்கியக் காரணம், நிலங்கள் இங்குச் சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் நிதிவசதியற்ற குடியானவர்கள் சாகுபடி செய்ய வேண்டியிருப்பது ஆகும். முன்பெல்லாம் பண்ணைச் செலவுகளுக்கு உழவர்கள் லேவாதேவிக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கவேண்டி யிருந்தது. இதனல் குடியானவர்களின் வாழ்க்கையில் வளம் சிறக்கவில்லை; உற்பத்தியும் உயரவில்லை. இந்நிலைமையைத் தவிர்க்கக் கூட்டுறவு இயக்கம் அந்நியர் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆயின் அது போதுமான அளவு பரவாமல் நின்றுவிட்டது. நாட்டு விடுதலைக்குப் பின்னர்,

வேளாண்மை வளர்ச்சியில் அக்கறை கொண்ட மாநில அரசாங்கம், இத்துறையில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கியது. ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவு முக்கிய இடத்தைப் பெற்றது. இன்று நம் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் கூட்டுறவு இயக்க வசதியைப் பெற்றிருக்கிறது.

வேளாண்மை, தொழிலியல் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு எனத் திட்டக் கமிஷன் நிர்ணயித்திருக்கிறது. ஆகையினுல், இரண்டாவது திட்டக் காலத்தில் மாவட்டத்தில் விரிவான அளவில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி பெற்றது.

கிராமக் கடன் திட்டம்

ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டம், மூன்று முக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அவை பல்வேறு மட்டங்களில் அரசாங்கம் பங்கெடுத்துக் கொள்ளல், கடனுக்கும் மற்றப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இடையில், முக்கியமாக விற்பனைக்கும், உற்பத்திக்கும் இடையில் முழு அளவில் ஒருங்கிணைப்பு, போதுமான அளவு பயிற்சியும், திறமையும் பெற்ற அலுவலாளர்களால் நிர்வகிக்கப்படுதல் என்பன ஆகும். திட்டத்தின் குறிக்கோள்கள் மூன்று: (1) ஏற்கெனவே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கும் பிரதேசத்தை விஸ்தரிப்பதன் மூலமோ, அல்லது புதிய கூட்டுறவுச் சங்கங்களைத் திறப்பதன் மூலமோ அதிக கிராமங்களைக் கூட்டுறவின்கீழ்க் கொண்டுவருதல்; (2) அதிக வேளாண்மைக் குடும்பங்களைக் கூட்டுறவின்கீழ்க் கொண்டுவருதல்; (3) வேளாண்மைக் காரியங்களுக்காகவும், குடியானவர்கள் தங்கள் சமூக, பொருளாதார நிலைகளில் அபிவிருத்தி காண்பதற்காகவும் குறைந்த வட்டி விதத்தில் குறைந்த தவணை, நடுத்தரத் தவணை, நீண்ட தவணைக் கடன்களுக்கு ஏற்பாடு செய்தல்.

கிராமக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை, அங்கத்தினர்களின் எண்ணிக்கை, சங்கங்கள் பணியாற்றும் பரப்பு ஆகியவை அதிகரித்து வந்திருக்கின்றன.

		1951	1961
1.	கிராமக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை	777	1,074
2.	வேளாண்மைப் பாங்குகளின் எண்ணிக்கை	—	31
3.	கடன் வழக்கு சங்கங்களின் எண்ணிக்கை	—	20
4.	உப சங்கங்கள்	—	74
5.	பயன் அடையும் கிராமங்களின் எண்ணிக்கை	1,101	1,839
6	அங்கத்தினர்களின் எண்ணிக்கை	49,793	2,26,086

இரண்டாவது திட்டம் தொடங்கும்வரை, சிறு கிராமக் கடன் சங்கங்கள் மட்டுமே குறைந்த தவணைக் கடன், நடுத்தரத் தவணைக் கடன் ஆகியவற்றைக் குடியானவர்களுக்கு அளித்தன. இரண்டாவது திட்டக் காலத்தில் பெரிய அளவு சங்கங்களும் (வேளாண்மைப் பாங்குகள்), கடன் வழங்கு சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. இந்தச் சங்கங்களை நன்கு நிர்வகித்து நடத்தப் பயிற்சிபெற்ற அலுவலாளர்களை நியமிப்பதன் வாயிலாக, சிக்கனமான முறையிலும் திறன்மிக்க வழியிலும் கடன் வசதிகளை அதிகரிக்கச் செய்வதற்காகவே இச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் ஆவன: இரண்டாம் திட்ட இறுதிக்குள் (1) நூற்றுக்கு நூறு கிராமங்களைக் கூட்டுறவின் கீழ்க் கொண்டுவருதல், (2) கிராம மக்களில் 60 சதவீதத்தினரைக் கூட்டுறவின் கீழ்க் கொண்டுவருதல், (3) உழவர்களின் கடன் தேவைகளில் 21 சதவீதம் அளித்தல். இம் மூன்று லட்சியங்களும் நிறைவேறியுள்ளன. இரண்டு திட்டங்களிலும் குடியானவர்களுக்கு ரூ. 6·96 கோடி கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

	குடியானவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் (ரூபாய் லட்சத்தில்)
முதல் திட்டக் காலத்தில்	40·85
இரண்டாவது திட்டக் காலத்தில்	655·15
மொத்தம்	696·00

கிடங்கு வசதி

இக்கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் அளிக்கப்படும் குறுகிய தவணைக் கடன், நடுத்தரத் தவணைக் கடன் ஆகியவையோடுங்கூட இம்மாவட்டத்தில் இயங்கும் நில அடமான பாங்குகளின் மூலம் நீண்ட தவணைக் கடன் அளிக்கப்படுகிறது. இந்நில அடமான பாங்குகள் திருப்பத்தூர், ஆம்பூர், வேலூர், ஆர்க்காடு, அரக்கோணம், செய்யாறு, வந்தவாசி, போளூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் இருக்கின்றன. இவற்றின் அங்கத்தினர் தொகை 1960-ல் 7,291 பேர். இவர்கள் செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 3·8 லட்சம். இரண்டாவது திட்ட முதல் நான்கு ஆண்டுகளில் ரூ. 27·61 லட்சம் அளவுக்குக் கடன் வழங்கப்பட்டது.

குடியானவர்கள் தங்கள் பொருளைத் தகுந்த சந்தர்ப்பத்தில் நல்ல விலைக்கு விற்க வசதி இல்லாமல் நஷ்டமடைகின்றனர். இந்த நிலைமை மாறி அவர்கள் உற்பத்திப் பொருள்கள் மூலம் நல்ல பலன் அடையச் செய்வதற்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஆகையினால், ஒருங்கிணைந்த

கிராமக் கடன், விற்பனைத் திட்டத்திற்கு அரசாங்கம் மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. கிடங்குகள் கட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பண உதவி செய்யப்படுகிறது. குடியானவர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை ஏற்படும் வரை பொறுத்திருந்து பார்க்க இந்தக் கிடங்குகள் உதவும்; அங்கத்தினர்கள் அவற்றில் தங்களது உற்பத்திப் பொருளைச் சேர்த்து வைக்கலாம். விற்பனைச் சங்கங்களின் பங்கு மூலதனத்தைப் பலப்படுத்துவதற்காக அரசாங்கமும் பங்கெடுத்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் அவ்விதக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் வாங்கும் சக்தி அதிகரிக்கப்படுவதுடன், அங்கத்தினர்களுக்கு இன்னும் அதிகமான அளவு கடன் கிடைக்கவும் வழியேற்படுகிறது. இம் மாவட்டத்தில் 31-3-61-ல் 19 விற்பனைச் சங்கங்கள் செயலாற்றி வந்தன. அவை தமது அங்கத்தினர்களின் உற்பத்திப் பொருள்களை விற்றதுடன், பிணையின் பேரில் அவர்களுக்குக் கடன் அளித்தும் உதவின.

விற்பனைத் திட்ட வெற்றிக்குக் கிடங்குகள் இல்லாவிட்டால், ஒரு பெரிய தடையாக இருக்கும். ஆகையினால் அரசாங்கம், கிடங்குகள் கட்ட ரூ. 10,000 முதல் ரூ. 50,000 வரை கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பண உதவி அளிக்கிறது. இதுவரை 21 கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன; அல்லது கட்டப்பட்டு வருகின்றன. அவற்றுள் 10 கிடங்குகள் வேளாண்மைப் பாங்குகளையும், 6 கிடங்குகள் விற்பனைச் சங்கங்களையும், 5 கிடங்குகள் கிராமக் கடன் சங்கங்களையும் சேர்ந்தவை.

கூட்டுறவுப் பண்ணை


கூட்டுறவு இயக்கத்தில் கூட்டுறவுப் பண்ணைக்கு ஒரு சிறப்பிடம் அமைந்திருக்கிறது. நிலங்கள் லாபமற்ற முறையில் துண்டு துண்டுகளாகச் சிதறியிருக்கும் நிலைமைக்குப் பரிகாரம் காணக் கூட்டுறவுப் பண்ணை ஒரு சிறந்த வழி ஆகும். புதிய முன்னேற்ற முறைகளில் கூட்டுறவின் அடிப்படையில் சாகுபடி செய்வதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

இரண்டாவது திட்டக் காலத்தில் மேச்சேரியில் ஒரு கூட்டுறவு இணைப்புப் பண்ணை (Cooperative joint Farming) தொடங்கப்பட்டது. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 23 அங்கத்தினர்கள் 100·10 ஏக்கர் நிலங்களை அளித்துள்ளார்கள். இவற்றில் வேளாண்மை அபிவிருத்தியின் பொருட்டு அரசாங்கம் ரூ. 4,000 மானியத்துடன், ரூ. 42,450 வட்டியில்லாக் கடனைகவும் அனுமதித்துள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் ராக்கம், மோரணம், கெங்கவரம் ஆகிய மூன்று இடங்களிலும் நிலக் குடியேற்றச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தின்

கில், நிலமில்லாத உழவர்களுக்குச் சாகுபடி செய்ய நிலம் அளிக்கப்படுவதுடன், மானியமும், கடனும் அரசாங்கத்தால் கொடுத்து உதவப்படுகின்றன. இம் மாவட்டத்தில் மூன்றாவது திட்டக் காலத்தில் மேலும் பல கூட்டுறவுப் பண்ணைகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

பால் விநியோக சங்கம்

பால் பண்ணை, உழவர்களின் துணைத் தொழில்களில் ஒன்றாகும். நமது நாட்டில் கால்நடைகளுக்குக் குறைவு இல்லாவிட்டாலும், பால் மிகக் குறைவான அளவிலேயே கிடைக்கிறது. ஆகவே, விலங்குச் செல்வங்களை வளம் பெற்றவையாக்கவும், மக்கள் அதிக அளவில் பாலை உட்கொள்ளச் செய்யவும் கூட்டுறவுப்



வேலூர் கூட்டுறவுப் பால் விநியோக சங்கம்

பால் விநியோக சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. முதல் திட்டத் தொடக்கத்தில் 32 கூட்டுறவுப் பால் விநியோக சங்கங்கள் செயலாற்றி வந்தன. இப்பொழுது மாவட்டத்தில் மொத்தம் 53 சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்களில் தினசரி பால் உற்பத்தி அளவு, கடந்த பத்தாண்டுகளில் 2,710 பட்டினம் படியிலிருந்து 5,348 பட்டினம் படியாக அதிகரித்திருக்கிறது. பசுக்களை வாங்க அங்கத்தினர்களுக்கு ரூ. 250 வீதம் அரசாங்கம் கடன் அளிக்கிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் இந்தக் காரியத்திற்காக அரசாங்கம் ரூ. 2·727 லட்சம் கடனாக வழங்கியுள்ளது.

நாட்டுக் கால்நடைகளின் தரத்தை அபிவிருத்தி செய்யும் வகையில், இரண்டாவது திட்டக் காலத்தில் பீமகுளத்தில் ஒரு கால்நடை வளர்ப்புச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சங்கத்திற்குக் காளைகள் வாங்க ரூ. 3,000 அரசாங்க உதவி அளிக்கப்பட்டது. முதல் உதவி மருந்துகளை வாங்குவதற்காக ரூ. 300 நடைமுதல் மானியமும் அனுமதிக்கப்பட்டது.

	1951	1961
பால் விநியோகக் கூட்டுறவுகளின் எண்ணிக்கை	32	53
தினசரி சராசரி பால் கறவை (பட்டினம் படிகளில்)	2,710	5,348

வீடு கட்டும் சங்கங்கள்

கூட்டுறவுக் குடியிருப்புத் திட்டங்கள் பொதுவாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன : (1) தொழிலாளர் குடியிருப்புத் திட்டம் ; (2) நகரக் குடியிருப்புத் திட்டம் ; (3) கிராமக் குடியிருப்புத் திட்டம் என்பவை அவை. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்திடமிருந்து, 20 ஆண்டுக் காலத்தில் அடைக்கக் கூடிய விதத்தில் நீண்ட தவணைக் கடன் பெறுகின்றன. அதனைக் கொண்டு வீடுகட்ட இவை அங்கத்தினர்களுக்குக் கடன் வழங்குகின்றன ; அல்லது தாமே அங்கத்தினர்கள் சார்பில் வீடுகளைக் கட்டுகின்றன. தொழிலாளர் குடியிருப்புத்

கூட்டுறவு நகரமைப்பு—காட்பாடி



திட்டத்தின்கீழ், வீடுகட்ட ஆகும் செலவில் 65 சதவீதம் வரை கடனாகவும், 25 சதவீதம் வரை மானியமாகவும், பாக்டரிச் சட்டத்தின் கீழ்வரும் தொழிலாளர்களுக்கு என்று பிரத்யேகமாகக் கட்டப்படும் வீடுகளுக்கு வழங்க மத்திய அரசாங்கம் முன்வந்துள்ளது. இம் மாவட்டத்தில் இரண்டாவது திட்டக் காலத்தில் தொழிலாளர் குடியிருப்புக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டது. ரூ. 1·925 லட்சம் செலவில் 50 வீடுகளைக் கட்டிக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது.


வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு நகரமைப்பையும் சேர்த்து நகர்ப்புற வீடு வசதிக்கான மொத்தம் 16 கூட்டுறவுக் குடியிருப்புச் சங்கங்கள் இருக்கின்றன. இரண்டு திட்டக் காலங்களிலுமாக 23 கிராமக் கூட்டுறவுக் குடியிருப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இந்தத் திட்டங்களின் மூலம் முதல் திட்டக் காலத்தில் 210 வீடுகளும், இரண்டாவது திட்டக் காலத்தில் 430 வீடுகளும் கட்டப்பட்டன. இச்சங்கங்களுக்கு இத்திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ. 173·2 லட்சம் கடனாக வழங்கப்பட்டது.

	1951க்கு முன்னர்	1956-61
வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை	8	24
கட்டப்பட்ட வீடுகள்	—	430
வழங்கப்பட்ட கடன்	—	ரூ. 12·62 லட்சம்

சர்க்கரை ஆலை

இரண்டாவது திட்டக் காலத்தில் ஆம்பூரில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் இம்மாவட்டத்தின் தொழில் வளம் பெருகியது. இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைச் சங்கத்தின் அங்கத்தினர்கள் 3,153 பேர். ஆலைக்குச் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனம் ரூ. 33,75,305. அரசாங்கம் 51 சதவீதப் பங்குகளை எடுத்துக் கொண்டுள்ளது. ஆலை 1960 நவம்பர் மத்தியில் உற்பத்தியைத் தொடங்கியது. இது நாள் ஒன்றுக்கு 800 முதல் 1,000 டன் வரை கரும்பைச் சாறு பிழியும் திறன் பெற்றது. இயந்திரங்களை வாங்கி நிறுவுவதற்காகத் தொழிலியல் பொருளாதாரக் கார்ப்பரேஷன் (Industrial Finance Corporation) ரூ. 55 லட்சம் கடனாக அனுமதித்துள்ளது. தொழில் முதல் காரியங்களுக்காக இந்திய அரசாங்க ஸ்டேட் பாங்கு ரூ. 30 லட்சம் ரொக்கக் கடனாக அனுமதித்துள்ளது. இந்தச் சர்க்கரை ஆலை, கூட்டுறவு முயற்சியில் மகத்தான சாதனை ஆகும்.

வளரும் தொழில்கள்



“உண்பது நாழி உடுப்பவை இரண்டே” என்றிருந்த காலம் மாறிவிட்டது. இன்று மனிதனின் தேவைகள் அளவிறந்து பெருகி விட்டன. உணவில் பற்பல வகை; உடுப்பில் பற்பல வகை என்று வாழ்க்கையின் தேவைகள் பெருகி வருகின்றன.

இந்நிலையில், வேளாண்மைப் பொருளாதாரத்தை மட்டும் நம்பி ஒரு நாடு முன்னேறிவிட முடியாது. இன்று உலக அரங்கில் முதலிடம் பெற்று, மண்ணையும் விண்ணையும் அளந்து விஞ்ஞானத் துறையில் மிகப் புகழ் பெற்று விளங்கும் நாடுகள் அனைத்தும், புதிய புதிய தொழில்களை வளர்த்து அவற்றின் மூலம் முன்னேறியவையே ஆகும். உற்பத்திப் பெருக்கத்திற்கும், வாழ்க்கைத்தர உயர்வுக்கும் அடிப்படைக் காரணமாகத் தொழில் வளர்ச்சி அமைந்துள்ளது.

ஆகையினால், தொழில்களைப் புறக்கணித்து வெறும் வேளாண்மையை மட்டும் நம்பி நாம் உயர்ந்துவிட முடியாது. உலகத்தோடு ஒட்டி ஒழுகினால்தான், நாமும் முன்னேற்றம் பெற்றுள்ள


நாடுகளைப்போல் உயர்வடைய முடியும். இந்தக் கருத்து தமது இதய ஒலியாக இருந்த காரணத்தினுல்தான் பாரதியார்,

" ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்;
ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்;
உண்மைகள் சொல்வோம், பல வண்மைகள் செய்வோம்."

என்று பாடியிருக்கிருர். இந்த அடிப்படையிலேயே, தொழில் வளர்ச்சிக்காக அரசாங்கமும் அரும்பாடுபட்டு வருகிறது. அரசாங்கத் துறையில் தொழில்களை அமைப்பதோடு, தனியாரின் முயற்சிகளுக்கும் ஊக்கமும் உதவியும் அளித்து வருகிறது, சிறு அளவுத் தொழில்களில் எண்ணற்ருேர் ஈடுபட்டுத் தாமும் உயர்ந்து நாட்டையும் உயர்த்த அவர்களுக்குக் குறைந்த கட்டண விகிதங்களில் இடவசதியும், கருவிச் சாதன வசதியும் செய்து தருகிறது. பண்பாட்டையும் கலை வளர்ச்சியையும் காட்டும் கைபுனைந்து இயற்றும் கவின் பொருள்களின் வளர்ச்சிக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், பயிற்சிக் கூடங்களும் அமைத்துத் தருகிறது. இவ்வாறே கிராமத் தொழில்களின் வளர்ச்சியிலும் பெருங் கவனம் செலுத்தி வந்துள்ளது,


தனியார் துறையில் அமைந்த பெரிய அளவுத் தொழில்களில் ஒன்ருக, இம்மாவட்டத்தில் கடந்த இரண்டு திட்டக் காலங்களில்

ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை



ஏற்படுத்தப்பட்ட வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை விளங்குகிறது. இது ஆம்பூரில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையில் 51 சதவிதப் பங்குகளைத் தமிழ்நாடு அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இந்த ஆலை 10,000 மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்துள்ளது.

பத்தாண்டுக்கால இடைவெளிக்குப் பின்னர், மேல் பட்டு தனியார் சர்க்கரை ஆலையும் அண்மைக் காலத்தில் மறுபடியும் இயங்க ஆரம்பித்துள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள பெரிய அளவுத் தொழில்களில் இன்னொன்று, பி. எஸ். எஸ். தரத்திற்கு சிமெண்ட் காங்கிரீட் குழாய்களைத் தயாரிக்கும் இந்தியன் ஹியூம் குழாய்க் கம்பெனி ஆகும். இந்தக் கம்பெனியின் கிளை அரக்கோணத்தில் அமைந்திருக்கிறது.



ராணிப்பேட்டையில் உள்ள பாரி கம்பெனி


ராணிப்பேட்டை பாரி கம்பெனியாரின் தொழிற்சாலை 1897-ல் நிறுவப்பட்டது ஆகும். இதில் மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அவற்றில் உரங்கள், ரசாயனப் பொருள்கள், மண் பாண்டங்கள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

உரம் தயாரிக்கும் இயந்திரம் ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் சூபர் பாஸ்பேட் தயாரிக்கும் திறனுள்ளது. இதைத் தவிர, நைட்ரஜன், பாஸ்பரம், பொட்டாசியம் கலவை உரங்களும் தயாரிக்கப் படுகின்றன. பூச்சிகளை அழிக்கும் டி. டி. டி. போன்ற மருந்து வகைகளைத் தயாரிக்கும் இயந்திரம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

ரசாயனப் பொருள் உற்பத்திப் பிரிவில் கந்தக அமிலம், நைட்ரிக் அமிலம், ஹைட்ரோ குளோரிக் அமிலம் ஆகியவையும், எப்சம் உப்பு போன்ற ரசாயனப் பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

மண்பாண்ட உற்பத்திப் பிரிவில் அமில ஜாடிகள், ஊறுகாய் ஜாடிகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. சுகாதார உபகரணங்கள் தயாரிக்கும் வேலை அண்மைக் காலத்திலேயே தொடங்கப்பட்டது. இருந்தபோதிலும், அவற்றுக்கு நல்ல பெயர் ஏற்பட்டு இன்று இங்கு உற்பத்தி செய்யப்படும் மண்பாண்டங்களில் முக்கியமானவையாக விளங்குகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் பலவகைக் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்பட்டதுடன், பழைய கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டும்



கந்தக அமிலச்சாலை, ராணிப்பேட்டை

உள்ளன. இப்பொழுது இங்கு உரத் தயாரிப்பில் 410 பேர்களும், ரசாயனப் பொருள் தயாரிப்பில் 301 பேர்களும், மண்பாண்டத் தயாரிப்பில் 526 பேர்களும் ஆக மொத்தம் 1,237 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். மேலும் அலுவலக, மேற்பார்வைப் பணியில் சுமார் 220 பேர் உள்ளனர்.

இம்மாவட்டத்தில் தோல் பதனிடும் தனியார் கம்பெனிகளும் இருக்கின்றன. இவை முதல் திட்டத் தொடக்கத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே பணியாற்றி வருகின்றன. அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ற அளவில் இவற்றின் உற்பத்தியும் உயர்ந்து வந்துள்ளது. ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் முக்கியமான

பொருள்கள், கிழக்கு இந்தியா தோல் வகைகள் ஆகும். இவை அதிகமாகப் பிரிட்டனுக்கு ஏற்றுமதியாகின்றன.

இங்குத் தயாரிக்கப்படும் உரங்களும் அமிலங்களும் பிரதேச தேவையைத் தணித்த பின்னர், மற்ற மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கயிறு தொழில்

வட ஆர்க்காடு மாவட்ட நிலங்களில் பெரும் பகுதி கிணற்றுப் பாசனத்தை நம்பியிருக்கிறது. ஆகையினால், பெரிய அளவு கயிறு களுக்கும், வடக் கயிறுகளுக்கும் அதிகத் தேவை இருக்கிறது. கேரளத்திலிருந்து இம்மாவட்டத்திற்கு இறக்குமதி செய்யப்படும் நார்ப் பொருள்கள், இங்குக் குடிசைத் தொழில் அடிப்படையில் அழகுமிக்க கயிறுகளாகத் தயாரிக்கப்படுகின்றன. 'ஹரிஜன நலத் திட்ட'த்தின் கீழ், குடியாத்தம் வட்டத்தில் பில்லாந்தி பட்டில் ஒன்றும், திருப்பத்தூர் வட்டத்தில் கேதாண்ட பட்டியில் ஒன்று மாக இரண்டு கயிறு தொழில் நிலையங்களை அரசாங்கம் தொடங்கி யுள்ளது.

சமுதாயநல வளர்ச்சித் திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை வட்டம் மல்லவாடி கிராமத்தில் கயிறு தயாரிக்கும் தொழிலில் ஓராண்டுக் காலப்பயிற்சி நிலையம் நடத்தப்பட்டது; 15 பேர் பயிற்சி பெற்றவர்களின் நலனுக்காக ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கமும் ஏற்படுத்தப்பட்டது. இம்மூன்று சங்கங்களும், இம்மாவட்டத்தில் தேவைப்படும் கயிறுகளை விநியோகம் செய்கின்றன.

பட்டுப் பூச்சி வளர்ப்பு

முக்கியப் பட்டுத் தொழில் பிரதேசமாக விளங்கிய கொள்ளே காலம் மைசூர் மாநிலத்தோடு சேர்க்கப்பட்ட பிறகு, தமிழ் நாட்டில் இத்தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் நன்கு உணரப்பட்டது. இதனை ஒட்டி ஆராய்ச்சியும், பரிசோதனைகளும் செய்யப்பட்டன. அவற்றின் மூலம், வட ஆர்க்காடு மாவட்டத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு நல்ல சூழ்நிலைகள் இருப்பது தெரிய வந்தது.

பட்டுத் தொழில் குடியாத்தம் வட்டத்திலும், வேலூர் வட்டம் ஒடுக்கத்தூர் பகுதியிலும், திருப்பத்தூர் வட்டம் வாணியம்பாடி பகுதியிலும் நடைபெறுகிறது. பட்டுப் பூச்சி வளர்ப் பவர்களுக்கு இலவச ஆலோசனைகள் நல்குவதற்காகக் கொசவன் புதூர், ஒடுக்கத்தூர், வாணியம்பாடி ஆகிய இடங்களில் பட்டுப்பூச்சி வளர்ப்புச் செயல் முறைக்காட்சி அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. தொழில்களுக்கு அரசாங்க உதவிச் சட்டத்தின்கீழ்,


பட்டுப்பூச்சி வளர்ப்பவர்களுக்குக் கடன் உதவியும் அளிக்கப்படுகிறது.

பட்டுநூல் சுற்றும் நிலையம் ஒன்று குடியாத்தம் வட்டம் கீழ் வைத்திணங் குப்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மூன்ருவது திட்டக் காலத்தில் குடியாத்தம் வட்டத்தில் மாதிரி பட்டுப் பூச்சி வளர்ப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

தொழிற் பேட்டை

சிறு தொழிலதிபர்கள், நடுத்தரத் தொழிலதிபர்கள் ஆகியோருக்குத் தொழில் நடத்தத் தேவையான இடவசதி, கருவிகள் வசதி முதலியவற்றைச் செய்து கொடுப்பதற்காகக் காட்பாடியில் ஒரு தொழிற் பேட்டை கட்டப்பட்டுள்ளது. இங்குத் தனிப்பட்ட தொழிலதிபர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக 14 பிரிவுகள் இருக்கின்றன. மின்சாரம், தண்ணீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஓய்வு இடவசதி, நிர்வாக அலுவலகங்கள் முதலான வசதிகளும் இருக்கின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் இப்பேட்டை இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்ருவது திட்டக் காலத்தில், காட்பாடியில் உள்ள இந்தப் பேட்டையைவிடக் கொஞ்சம் பெரிய அளவில் அரக்கோணத்தில் ரூ. 9·60 லட்சம் செலவில் ஒரு தொழிற் பண்ணையை ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

காட்பாடியில் உள்ள தொழிற் பேட்டை




காட்பாடி பேட்டையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலன் கருதி, அவர்களுக்காகக் குடியிருப்புகள் காட்பாடியில் 3·28 ஏக்கரா பரப்பில் கட்டப்படுகின்றன.

சிறு அளவுத் தொழில்கள்

சிறு அளவுத் தொழில்களின் கீழ் அரசாங்கம் 4 தொழில் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. அவையாவன: (1) பொதுப் பயன் எஞ்சினீயரிங் பணிமனை; (2) வேலூரில் சைக்கிள் பூட்டும் தொழிற்சாலை; (3) விண்ணமங்கலத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை; (4) வேலூர் பிற்காப்பு இல்லத்தில் ஹோல்டால்களும், அங்கிகளும் தயாரிக்கும் தொழில் நிலையம்.

வேலூரில் உள்ள பொதுப் பயன் எஞ்சினீயரிங் பணிமனை 1958-ல் மொத்தம் ரூ. 9 லட்சம் செலவில் அமைக்கப்பட்டது. இங்கு வேளாண்மைக் கருவிகள், மருத்துவமனைச் சாதனங்கள்,



வேலூர் சைக்கிள் பூட்டும் தொழிற்சாலை

மோட்டார்ப் பாகங்கள் முதலியன செய்யப்படுகின்றன. இத்துடன் புதிய இயந்திர சாதன வசதிகளும் உள்ளன. தனிப்பட்ட சிறு தொழில் அதிபர்கள் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள வசதி உண்டு.

இயன்ற மட்டும் பிரதேசத்திலேயே செய்யப்பட்ட பாகங்களைக் கொண்டு, சைக்கிள்களைப் பூட்டுவதற்காக வேலூரில் சைக்கிள் பாகங்களைப் பூட்டும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. இந்தத்


தொழிற்சாலை அமைக்கப்பட்டதன் நோக்கம், இறக்குமதியாகும் பாகங்களின் அளவைப் படிப்படியே குறைக்க வேண்டும் என்பதே. ஆண்டு ஒன்றுக்கு 5,000 சைக்கிள்களைப் பூட்டும் திறன் பெற்றது இந்தத் தொழில் நிலையம். இங்கு இப்பொழுது சைக்கிள் பிரேம்கள் செய்யப்படுகின்றன.

சைக்கிள் பாகங்களைப் பூட்டும் தொழிற்சாலை இப்பொழுது, பொதுப்பயன் எஞ்சினீயரிங் பணிமனையின் பகுதியாக இயங்கி வருகிறது.

தோல் பதனிடு தொழில்

விண்ணமங்கலத்தில் அமைக்கப்பட்டுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையில் புதிய முன்னேற்ற இயந்திரங்கள் இருக்கின்றன; இவற்றை இயக்குகின்றவர்களும் தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றவர்கள் ஆவர். இம்மாவட்டத்தில் வேறு எங்கும் கிடைக்காத அளவு வசதிகளை, இத்தொழிற்சாலை தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அளிக்கிறது. குறைந்த கட்டண வீதங்களில் குளிர்ப்பதன சேமிப்பு வசதிகளையும் அளிக்கிறது. இந்தத் தொழிற்சாலை 1—5—59ல் இயங்கத் தொடங்கியது. காலணிகள், நகரிகத் தோல் சாமன்கள், தொழிற்சாலைத் தோல் பட்டைகள் முதலியவற்றிற்கான பதன்பட்ட தோல் வகைகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. தோல் பதனிடு தொழிலில்

தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்



புதிய முறைகளில் இங்கு 20 பேர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையின் மூலதனச் செலவு மதிப்பீடு ரூ. 9 லட்சம் ஆகும்.

வேலூர் பிற்காப்பு இல்லத்தில் உள்ளவர்களுக்கு வேலை அளிப்பதற்காக ஹோல்டால்கள், அங்கிகள் தயாரிக்கும் தொழில் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இது 1960 ஏப்ரலில் இயங்கத் தொடங்கியது. நிலையத்தின் மொத்தச் செலவு ரூ. 2·60 லட்சம். இப்பொழுது இங்கு 50 பேர் பயிற்சி பெறுகின்றனர். இங்குத் தயாரிக்கப்படும் அங்கிகள், தொழில் துறையின் விற்பனை நிலையத்தின் மூலமாக விற்கப்படுகின்றன.



வேலூர் பிற்காப்பு இல்லத்தில் ஹோல்டால், அங்கிகள் தயாரித்தல்

தனியார் தொழில் அதிபர்கள் அரசாங்க உதவிகளை நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளனர். அரசாங்கம் அளிக்கும் கடன், இறக்குமதி லைசென்சு, கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களுக்குக் 'கோட்டா' ஆகிய பல வசதிகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. தனியார் துறையில் வளர்ந்தோங்கும் சிறு அளவு தொழில்களில் முக்கியமானவை வருமாறு : பொது இயந்திரங்கள், ஒலிபெருக்கிகள், ரேடியோ பாகங்கள், மின்சார உபகரணங்கள் முதலியன.

கைபுனைந்து இயற்றும் கவின்மிக்க பாரம்பரியத் தொழில்களைப் பாதுகாத்துப் புதுவாழ்வளிக்கவும் நன்முயற்சிகள்

மேற்கொள்ளப்பட்டன. (1) கரி கேரியில் மண்பாண்டத் தொழிற்சாலை, (2) வாலாஜாவில் பிரம்புப் பொருள்கள் செய்யும் தொழிற்சாலை, (3) திருப்பனங்காட்டில் கொம்புகள், எலும்புகளைக் கொண்டு பித்தான்கள் செய்யும் தொழிற்சாலை ஆகியவற்றில், புதிய கருவிகளைக் கொண்டு புதிய தொழில் முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது : பயிற்சி பெற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தொழிற் கூட்டுறவுகள் தொடங்கப்பட்டன. மொடையூரில் சிற்பங்கள் செதுக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு'கொட்டகை' கட்டித்தரப்பட்டுள்ளது. மாடப்பல்லி, ஆத்துவாம்பாடியில் கம்பளி நெசவில் பயிற்சி அளிக்கப்படுகிறது ; ஆத்துவாம்பாடியில் ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கமும், கம்பளி நெசவில் பயிற்சி பெறுவோரின் நலனுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

சமுக்காளங்கள், ரெட்டுகள் நெய்தல் இம்மாவட்டத்தின் கைவினைப் பொருள்கள் தயாரிப்பில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இவை வாலாஜா பேட்டையிலும், ஆம்பூரிலும் தயாரிக்கப்படுகின்றன. இவற்றால் ஓரளவு அந்நியச் செலாவணியும் ஈட்டப்படுகிறது.

சிறு அளவுத் தொழில்களிலும், கைவினைப் பொருள் தொழில்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்ய வேலூரில் 1960 மார்ச் மாதத்தில் ஒரு விற்பனை நிலையம் திறக்கப்பட்டது. இதன் மூலம் பொருள்களுக்கு விளம்பரம் உண்டாகி, விற்பனைக்கு வசதி ஏற்படுகிறது. அத்துடன் இந் நிலையம், இப் பொருள்கள் மாநிலம் முழுவதிலும் விற்பனையாகக் கூடிய முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளுகிறது.

கிராமத் தொழில்கள்

கிராமத் தொழில்களின் கீழ் இம்மாவட்டத்தில் பின்வரும் தொழில்கள் இயங்கி வருகின்றன :

(1) கடலாடியில் உண்ணாத எண்ணெயிலிருந்து சோப்பு செய்யும் தொழிற்சாலை. இங்குத் துணி சோப்பு தயாரிக்கப்பட்டு விற்கப்படுகிறது.

(2) வீராளூரில் தோல் உரிக்கும் தொழிற்சாலை. இங்கு எலும்புத்தூள் முதலியன தயாரிக்கப்படுகின்றன.

(3) வேலூர் சூளை மேட்டில் மண்பாண்டத் தொழிற்சாலை.

(4) வெல்லம், கண்டசாரி சர்க்கரைத் திட்டத்தின் கீழ் நல்ல ரக வெல்லம் தயாரிக்கப்படுகிறது.

(5) வெங்களாபுரத்தில் அரசாங்க நாட்டுச் செக்குப் பணிமனை அமைந்துள்ளது. இங்கு நாட்டுச் செக்குகள் (Ghanis) உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. 1960-61 ல் மட்டும்

82 நாட்டுச் செக்குகள் தயாரிக்கப்பட்டு, 63 செக்குகள் விற்கப் பட்டன.

எஸ். வி. நகரத்திலுள்ள சரஞ்சம் காரியாலயத்தில் அம்பர் ராட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. இவை இம் மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் விற்கப்படுகின்றன. வேலூரிலும் திருவண்ணாமலையிலும் இரண்டு கிராமோத்யோகக் விற்பனை நிலையங் கள் பணியாற்றுகின்றன.

தேனீ வளர்ப்பு

தேனீ வளர்ப்புத் திட்டம் சேத்துப்பட்டு, ஆரணி, வாலாஜா, சோளிங்கிபுரம், திருப்பத்தூர், கன்னியம்பாடி ஆகிய வட்டாரங் களில் அமுலாக்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

ஜவ்வாது மலைகளில் பட்டறைக்காடு என்ற இடத்தில் தேனீ வளர்ப்புப் பண்ணை யொன்றும் இயங்கி வருகிறது.

ஆர்க்காடு வட்டாரம், அரப்பாக்கத்திலுள்ள கையால் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.



காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை, அரப்பாக்கம்

இத் தொழில் நிலையத்தில் கெட்டியான அட்டை வகைகள் தயாரிக் கப்படுகின்றன.

கிராமத் தொழில்கள் திட்டத்தின் கீழ்ப் பல கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தப்படுகின்றன. மாவட்டத்தில் 13 எண்ணெய் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கங்களும், 97 கைக்குத்தலரிசி

தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கங்களும், 97 வெல்லம் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

சுந்தரம்பல்லியில் பனை ஓலைத் தொழிலாசிரியர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். இவர், நத்தம், சொக்கனும்பட்டி வெல்லம் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றார். பனை ஓலையிலிருந்து அழகான பயன் மிக்க பொருள்களைத் தயாரிப்பதைப் பற்றியும் அங்கத்தினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பனை ஓலைத் தொழிலில் 116 அங்கத்தினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது; ரூ. 2,396 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தொழிலில் பல இன்னல்கள் இருக்கின்றன. கடன் வசதி அற்ற நிலைமை, மில் துணிகளோடு கைத்தறித் துணிகள் போட்டியிட முடியாத நிலைமை முதலிய பல காரணங்களினால் நெசவாளர்களின் நிலை மிகத் தாழ்ந்து இருந்தது. இந் நிலையிலிருந்தும் அவர்களை உயர்த்தி நல்வாழ்வு அளிக்கவும், கைத்தறித் துணிகளைத் தரப்படுத்தவும், நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின்கிழ்க் கொண்டுவரும் திட்டம் அமுலாக்கப்பட்டது.

நெசவாளருக்கு உதவி

வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கைத்தறிகளில் 50 சதவீதத்தைக் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ்க் கொண்டுவர லட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டது. இரண்டாவது திட்ட இறுதியில் 16,879 கைத்தறிகள் கூட்டுறவுச் சங்கங்களின்கிழ்க் கொண்டுவரப் பட்டன. கூட்டுறவுச் சங்கங்களில் சேர ஒரு தறிக்காரர் பங்கு மூலதனமாக ரூ. 25 கொடுக்க வேண்டும். இதில் அரசாங்கம் கடனாக ரூ. 21-87 அளிக்கிறது; மீதி ரூ. 3-13 தறிக்காரர் கொடுக்க வேண்டும். வேலூர் கூட்டுறவு மத்திய பாங்கின் மூலம், கூட்டுறவுச் சங்கத்தில் சேரும் ஒவ்வொரு தறிக்கும் தொழில் முதலாக 300 ரூபாயைச் சங்கத்திற்கு அளிக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் இம் மாவட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பின்வரும் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன:—

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	தறிகளின் எண்ணிக்கை
1947	29	3,771
1951	34	4,673
1956	82	11,099
1961	96	16,879

கைத்தறித் துணிகளின் தரத்தை அபிவிருத்தி செய்யவும், உற்பத்திச் செலவைக் குறைக்கவும் முன்னேற்றக் கருவிகள் வாங்குவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் மானியம் அளிக்கிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் இம் மாவட்டத்தி லுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 32,000 வரை மானிய உதவி அளிக்கப் பட்டுள்ளது.



ராணிப்பேட்டைப் பயிற்சிப் பள்ளியில் நெசவுத் தொழில்

கைத்தறித் துணிகளின் விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கம் தள்ளுபடித் தொகை அளித்து வருகிறது. இதன் மூலம் கைத்தறித் துணி விற்பனை அதிகரித்துள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 11·35 லட்சம் தள்ளுபடிப் பணமாக அரசாங்கம் அளித்துள்ளது.

குடியிருப்பு வசதி

நெசவாளர்களில் பெரும்பாலோர் மோசமான இடங்களில் வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நல்ல குடியிருப்பு இடங்கள் அமைத்து வசதி செய்து தரவும் திட்டமிடப் பட்டது. நெசவாளர்களுக்கு இரண்டாவது திட்டக் காலத்தில் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்காகக் குடியாத்தத்திலுள்ள கூட்டுறவுச் சங்கமும், வந்தவாசி வட்டம் கீழ்க் கொடுங்காலூரிலுள்ள கூட்டுறவுச் சங்கமும் தேர்ந்தெடுக்கப்பட்டன. கீழ்க்கொடுங்காலூரில் 92 வீடுகளும், குடியாத்தத்தில் 50 வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. இந்தக்

குடியிருப்பு இடங்களை அமைக்க ரூ. 5·787 லட்சம் செலவாகும். இதில் ரூ. 1·704 லட்சம் அரசாங்க மானியமாகக் கிடைக்கும். மீதி ரூ. 4·083 லட்சம் கடனாகத் தரப்படும். இந்தக் கடன் தொகையை 20 ஆண்டுகளுக்குள் அடைத்துவிட வேண்டும்.

இம் மாவட்டத்தில் ஆரணி, ஒண்ணுபுரம், வாலாஜா—ஆகிய மூன்று இடங்களிலும் பட்டுக் கைத்தறியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

கதர் வளர்ச்சி

வேலையில்லாத் திண்டாட்டம், போதிய வேலையின்மை இவற்றைப் போக்கி வேலை வசதி அளிப்பதற்கும், மக்கள் தங்களுக்குத் தேவையான துணிகளைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ள உதவி அளிப்பதற்கும் கதர்த் திட்டம் கிராம அபிவிருத்தியில் முக்கியமான ஒரு திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தக் கிராமத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1956 ல் ஒரு தனித்துறை அமைக்கப்பட்டது. மேலே சொல்லப்பட்ட லட்சிய நிறைவேற்றங்களைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் கதர்த் தொழிலில் நான்கு அம்சத் திட்டம் ஒன்றை அமுலாக்கி வருகிறது. இத் திட்டத்தில் முனைப்பான கதர்த் திட்டம், கதர் விஸ்தரிப்புத் திட்டம், பரவலான கதர்த் திட்டம், அம்பர் ராட்டை திட்டம் ஆகிய திட்டங்கள் அடங்குகின்றன.

நூற்பவர்கள் அதிகமாகவும், நூற்பு நூலைக்கொண்டு துணி நெய்யக் கூடியவர்கள் போதிய அளவிலும் உள்ள இடங்களில் முனைப்பான கதர்த் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ், நூற்பவர்களுக்கு வசதிகளும், நூலை வாங்கி ஆடைகளாக நெய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. நூற்பவர்களிடமிருந்து நூல் வாங்கப்படும் பொழுது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தில் ஒரு பகுதியானது பிடித்து வைக்கப்படுகிறது. இப்படிச் சேரும் தொகையிலிருந்து, அவர்கள் விரும்பும்போது அவ்வப்போது கதர்த் துணிகள் கொடுக்கப்படுகின்றன. நூற்பவர்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள இன்னொரு வசதி என்னவென்றால், அவர்கள் வாங்கும் கதர்த் துணிகளுக்கு ரூபாய்க்கு 3 காசுகள் விதம் அதிகப்படி தள்ளுபடி பணம் கொடுக்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் வேலூர், திருவண்ணாமலை, குடியாத்தம், ஆர்க்காடு, ஆரணி ஆகிய ஐந்து இடங்களிலும் அரசாங்கக் கதர் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. இவை முனைப்பான கதர் விற்பனைத் திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் 2·15 லட்சத்துக்கும் அதிகமான சிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வட்டாரங்கள் அல்லாத பகுதிகளில் கதர் விஸ்தரிப்புத் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ராட்டை களும், கருவிகளும் மானிய விலையில் (அடக்க விலையில் பாதி) கொடுக்கப்படுகின்றன. நூற்பதற்கான பஞ்சு அடக்க விலைக்கு விற்கப்படுகிறது. நூற்பவர்கள் தரும் நூல், சிட்டம் 25 காசு விதம் வாங்கிக் கொள்ளப்படுகிறது. புதிதாகத் தரப்படும் ஒவ்வொரு ராட்டைக்கும் ஒரு ரூபாய் மதிப்புள்ள பஞ்சு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. ஆரம்ப நூற்பாளர்களை ஊக்குவிக்க இவ்வாறு செய்யப்படுகிறது. நூற்புக் கேந்திரங்களாக விளங்கும் இடங்களில் இந்தத் திட்டம் இயங்கி வருகிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் 17 நூற்பு நிலையங்கள் இருக்கின்றன.


1. சத்துவாச்சேரி
2. வெங்களாபுரம்
3. திமிரி
4. திருவத்திபுரம்
5. அனக்காவூர்
6. வாக்கடை
7. ஆக்கூர்
8. வந்தவாசி I
9. வந்தவாசி II
10. தெள்ளாறு
11. முனுகாபட்டு
12. ஒடுக்கத்தூர்
13. பாக்கம்பாளையம்
14. கந்திலி
15. கோசப்பட்டு
16. பந்தேரி
17. பெத்தூர்

இத் திட்டம் வட்டாரம் அல்லாத பகுதிகளில் 1957 ல் அமுலாக்கப் பட்டது. வந்தவாசி, வெங்களாபுரம் ஆகிய இரண்டு இடங்களிலும் நிலையங்கள் திறக்கப்பட்டன. இப்பொழுது 17 நிலையங்கள் இருக்கின்றன; 107 கிராமங்கள் திட்டத்தில் அடங்குகின்றன; சுமார் 2,000 குடும்பங்கள் நன்மை பெறுகின்றன. கடந்த நான்காண்டுகளில் 1,799 ராட்டைகள் தரப்பட்டுள்ளன. நூற்பவர்களிடமிருந்து ரூ 31,000 மதிப்புள்ள 1·26 லட்சம் சிட்டங்கள் வாங்கப்பட்டுள்ளன. இந்த அளவு, நூற்பவர்கள் பெற்ற துணை வருமானத்தின் அளவைத் தெற்றென விளக்குகின்றது. இங்கு நூற்பவர்களில் பெரும்பாலோர் உழவர்கள் ஆவர். இவர்கள்

தங்களது ஒய்வு நேரங்களில், நாள் ஒன்றுக்கு ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் விதம், வாரத்திற்கு ஒருநாள் அல்லது இருநாள் நூற்பில் ஈடுபடுகின்றனர்.

ராட்டை விநியோகம்

பரவலான கதர்த் திட்டத்தின் கீழ்த் தமிழ் நாடு அரசாங்கம், சமுதாயநல வளர்ச்சித் திட்டத்தில் ராட்டைக்கும் நூற்புக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. இத் திட்டம் பல வழிகளில் கதர் விஸ்தரிப்புத் திட்டத்தோடு ஒத்துள்ளது. இத் திட்டம் கலச பாக்கத்தில் 1949-ல் தொடங்கப்பட்டது. அதிலிருந்து இது படிப்படியே விஸ்தரிக்கப் பட்டு வந்துள்ளது. இம் மாவட்டத்தில்



அம்பர் ராட்டையில் நூற்றல்

பதின்மூன்று வட்டாரங்களில் இத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வட்டாரங்கள் பின்வருமாறு :—(1) கலசபாக்கம், (2) துருஞ்சாபுரம், (3) ஆரணி, (4) போளூர், (5) கீழ் வைத்தினங்குப்பம், (6) சேத்துப்பட்டு, (7) ஆர்க்காடு, (8) வெம்பாக்கம், (9) பெரணமல்லூர், (10) திருப்பத்தூர், (11) வாலாஜா, (12) சோளிங்கிபுரம், (13) காவேரிப்பாக்கம். இந்தக் காரியத்திற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு கதர் விஸ்தரிப்பு அதிகாரியும், மூன்று நூற்பு அமைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த 13 வட்டாரங்களிலும் இதுவரை 8,951 ராட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன; நூற்பவர்களுக்கு நூற்புக் கூலியாக ரூபாய் 65,000 அளிக்கப்பட்டது; அவர்களிடமிருந்து 31-3-1961

வரையில் 2·62 லட்சம் சிட்டங்கள் வாங்கப்பட்டுள்ளன. ரூ. 1·20 லட்சம் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

அம்பர் ராட்டைத் திட்டம் இம்மாவட்டத்தில் 3½ ஆண்டு களுக்கு முன்பு அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தில் இரண்டு நிலை கள் இருக்கின்றன: (1) பயிற்சி, (2) திட்டம் பலன் அளிக்கிறதா என்று பார்த்தலும், உற்பத்திப் பணியும். நூற்பவர்களுக்கு 'பரிசிரமாலயம்' எனப்படும் பயிற்சி நிலையங்களில் அம்பர் ராட் டையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் 3-முக்கி யப் பரிசிரமாலயங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றுடனும் நான்கு துணைப் பரிசிரமாலயங்கள் இணைக்கப்பட்டுள்ளன. 20 பேர்களுக்கு 12 வாரங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர் களில் பெரும்பாலோர் பெண்கள். ஒரு பகுதியிலுள்ள நூற்பாளர் களுக்குப் பயிற்சி அளித்து முடித்ததும், பரிசிரமாலயங்களும், துணைப் பரிசிரமாலயங்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின் றன. அவ்விடங்களில் உள்ள நூற்பாளர்களுக்கு அவை அங்குப் பயிற்சி அளிக்கின்றன. இவ்வாறு இந்த நடமாடும் பயிற்சி நிலை யங்களால் 85 கிராமங்கள் பலனடைந்துள்ளன.

நூற்புத் தேர்வு

நூற்பாளர்களுக்கு முதல் ஐந்து வாரங்களுக்குக் குறைந்தபட்ச நாட்கூலியாக 50 காசுகள் அளிக்கப்படுகின்றன. ஆறுவது வாரத் திலிருந்து அவர்களால் நூற்கப்படும் சிட்டங்களின் அளவைப் பொறுத்துக் கூலிகள் கொடுக்கப்படுகின்றன. ஒரு பயிற்சியாளர் தனது பன்னிரண்டு வாரகாலப் பயிற்சியில் 266 சிட்டங்கள் நூற்க வேண்டும்; 4 மணி நேரத் தேர்வில் நான்கு சிட்டங்களை நூற்றுத் தேறவேண்டும். இவ்விதப் பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் ஒரு நூற்பாளருக்கு வாடகைக் கிரய அடிப்படையில் ஒரு ராட்டை அளிக்கப்படுகிறது. கிரயப் பணத்தை அவர் வாரத்திற்கு 3 சிட் டங்கள் அல்லது 57 காசுகள் விதம் இரண்டு ஆண்டுகளில் அடைக்க வேண்டும். வெற்றிகரமாகப் பயிற்சியை முடிக்கும் ஒவ் வொரு நூற்பாளருக்கும் ரூ. 20 உதவித் தொகையாக அளிக்கப்படு கிறது. கூட்டு அம்பர் ராட்டையில் 750 சிட்டங்கள் அல்லது அம் பர் ராட்டை பெல்னி வகையில் 1,500 சிட்டங்கள், நூற்றுச் சிட்ட இலக்கை எட்டும் பயிற்சியாளருக்கு அம்பர் ராட்டை விலையில் 50 சதவித மானியம் அளிக்கப்படுகிறது. இந்த மானியத்தைக் கதர், கிராமத் தொழில்கள் கமிஷன் ஏற்றுக் கொள்கிறது.

ராட்டைகள் நல்ல முறையில் இயங்கி வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முக்கியமாக இந்தக் காரியத்திற்காக உற் பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழில் நுணுக்க உதவி அளித்தல், நூற்பவர்களுக்கு ஒழுங்கான முறையில் பஞ்சு

கிடைக்குமாறு செய்தல், அவர்களிடமிருந்து நூற்ற நூலை விலைக்கு வாங்குதல், ராட்டைகளைப் பழுது பார்த்தல் முதலான பணிகள் இவற்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தவிர, கதர் நெசவுக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பு உற்பத்தி நிலையங்களிலுள்ள அதிகாரிகளுக்கு விடப்பட்டுள்ளது. ஒவ்வொரு உற்பத்தி நிலையத்திலும் நெசவு நிலையங்கள் உள்ளன. தற்போது 159 தறிகளைக் கொண்ட 4 நெசவு நிலையங்கள் உள்ளன. 1959 அக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட இந் நெசவு நிலையங்கள் 1960 ஜூன் வரையில் ரூ. 48,000 மதிப்புள்ள 23,000 கெஜம் கதரை உற்பத்தி செய்துள்ளன.

கதர்ப் பட்டு

மேலே விவரிக்கப்பட்ட 4 திட்டங்களின் கீழ் நிறைவேற்றப் பட்ட வேலை இனங்களைத்தவிர மூன்று ராட்டை பழுது பார்க்கும் நிலையங்களும் உள்ளன. இங்கு நூற்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட ராட்டைகளைப் பழுது பார்ப்பதுடன் அவற்றுக்குத் தேவையான மரப்பாகங்களும் தயாரிக்கின்றனர். ஆரணியில் கதர்ப்பட்டு உற்பத்தி செய்யும் ஒரு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 50 தறிகள் கதர்ப் பட்டு நெசவில் ஈடுபட்டுள்ளன. இந் நிலையத்திலேயே பட்டு நூலுக்குச் சாயமிடப்படுகிறது. கதர்ப்பட்டு நெசவின் மூலம் ஒரு நெசவாளர், இயந்திரத்தில் சுற்றப்பட்ட பட்டு நெசவில் ஈடுபடும் நெசவாளரைக் காட்டிலும் ரூ. 20 முதல் 30 வரை அதிகம் சம்பாதிக்கின்றூர்.

ஆலை நூல் நெசவாளர்களிடம் கதர் நெசவைப் பரப்புவதற்காக வட மாதிமங்கலம், குடியாத்தம், ஆகிய இரண்டு இடங்களிலும் மாதிரி நெசவு நிலையங்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 87 நெசவாளர்களுக்குக் கதர் நெசவில் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது தேவிகாபுரத்தில் மாதிரி கதர் நெசவு நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இங்கு 25 ஆலை நூல் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தொழில், வர்த்தகத் துறையும் கதர் விஸ்தரிப்பில் ஈடுபட்டுள்ளது. அம்பர் ராட்டைகளைத் தயாரிக்க அது எஸ். வி. நகரத்தில் ஒரு சரஞ்சன் காரியாலயத்தைத் திறந்துள்ளது. இங்கு இது வரை 4,000 ராட்டைகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் கதர்த் துறையினரால் ஐந்து கதிர்களைக் கொண்ட (சாதாரணமாக 4 கதிர்களே உள்ளன) ஒரு புது மாதிரி ராட்டை பயன் படுத்தப் படுகிறது. இம்மாதிரி ராட்டைகள் 10 இப்போது இயங்கி வருகின்றன.

வேலூர், திருவண்ணமலை, குடியாத்தம், ஆர்க்காடு, ஆரணி ஆகிய 5 இடங்களிலும் விற்பனை நிலையங்கள் உள்ளன. இவை கதர் விற்பனையில் ஈடுபட்டுள்ளன. வேலூர் விற்பனை நிலையத்தில்

1957 முதல் 2·26 லட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப் பட்டது; திருவண்ணாமலையில் உள்ள விற்பனை நிலையத்தில் 1958 முதல் 77,000 ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டது. மற்ற மூன்று விற்பனை நிலையங்களும் 1960ல் திறக்கப்பட்டன. கதர் விற்பனை நிலையாக அதிகரித்து வந்துள்ளது; கதர் மக்களிடையே வெகுவாகப் பிரபலமடைந்து வருகிறது. இந்த உண்மைகளைப் பின்வரும் விற்பனைப் புள்ளி விவரங்கள் தெளிவாக விளக்குகின்றன.

	வேலூர் விற்பனை நிலையம்		திருவண்ணாமலை விற்பனை நிலையம்	
ஆண்டு	ரூபாய்	காசுகள்	ரூபாய்	காசுகள்
1957-58	2,529	34		
1958-59	58,249	91	4,989	87
1959-60	75,628	11	35,937	23
1960-61	89,999	92	36,590	00

முக்கியமான சாதனைகள் — புள்ளி விவரங்களில் ஒரு கண்ணோட்டம்:

1. வட்டாரம் அல்லாத பகுதிகளில் கதர் விஸ்தரிப்புத் திட்டம்.

திட்டம் 1957ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

தொடங்கப்பட்ட நூற்பு நிலையங்களின் எண்ணிக்கை	17
பயன் பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை	107
பயன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை	1,827
ராட்டைகளின் எண்ணிக்கை	1,799
தயாரிக்கப்பட்ட சிட்டங்களின் எண்ணிக்கை	1,26,515

2. வட்டாரப் பகுதிகளில் கதர் விஸ்தரிப்புத் திட்டம் (பரவலான கதர்த் திட்டம்.)

முதல் திட்டத் தொடக்கத்தில் பயன் பெற்ற வட்டாரங்களின் எண்ணிக்கை	1
முதல் திட்டக் காலத்தில் பயன் பெற்ற வட்டாரங்களின் எண்ணிக்கை	3
இரண்டாவது திட்டக்காலத்தில் பயன் பெற்ற வட்டாரங்களின் எண்ணிக்கை	9
தரப்பட்ட கிஸான் ராட்டைகளின் எண்ணிக்கை	8,951
தாயரிக்கப்பட்ட சிட்டங்களின் எண்ணிக்கை	2,02,231
விற்கப்பட்ட கதரின் மதிப்பு	ரூ. 1,09,876-39

3. அம்பர் ராட்டைத் திட்டம் :

பயன் பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை (மூன்றுண்டுகளில்)	85
நெசவு நிலையங்களின் எண்ணிக்கை	4
தறிகளின் எண்ணிக்கை	159
தயாரிக்கப்பட்ட கதர் (1—10—1959 முதல்)	23,189 கெஜம்
விற்கப்பட்ட கதரின் மதிப்பு	ரூ. 48,316-02

4. ஆரணியில் உள்ள பட்டு உற்பத்தி நிலையம் :


தறிகளின் எண்ணிக்கை	50

5. எஸ். வி. நகரத்திலுள்ள சரஞ்சன் காரியாலயம் :

தயாரிக்கப்பட்ட அம்பர் ராட்டைகளின் எண்ணிக்கை	4,000



சென்னை போன்ற மாநகரங்களில் இரவில் கண்ணுக்கினிய காட்சியினைக் காண்கிறோம். நகரப் பகுதிகளுக்கே உரிய செயற்கையும் விஞ்ஞானப் புதுமையும் கலந்த அழகு ததும்பி வழிகிறது. இரவைப் பகலாக்கும் பால்வண்ண ஒளிவிளக்குகள்; ஊர் செய்தி உலகச் செய்தி அனைத்தும் தந்து கலை நிகழ்ச்சிகளுக்கும் குறை வைக்காத வானொலிப் பெட்டிகள்; நாகரிகக் கலை நிலையங்களாக விளங்கும் திரைப்படக் கொட்டகைகள்; மின்சாரத்தினால் இயங்கும் ஊர்திகள், இயந்திரங்கள், ஆலைகள் முதலானவை நகர வாழ்க்கையின் உயிர்த் துடிப்புக்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்கு எல்லாம் மூலகாரணமாக விளங்கும் மின்சாரத்தின் அருமை நமக்கு உடனே புலனாகிவிடுவது இல்லை. திடீரென்று இரண்டொரு விநாடிகளுக்கு மின்சாரத் தடை ஏற்பட்ட உடனேதான் நமக்கு நகர வாழ்க்கையே அந்தகாரத்தில் மூழ்கிப் போனது போன்ற திகைப்பு உண்டாகிறது. மின்சாரம் இல்லாவிட்டால், எவ்வாறு வாழ்க்கையின் ஓட்டமே திகைத்து நின்றுவிடுகிறது என்பதை உணருகிறோம்.



வேலூர் மின்சார விநியோக அலுவலகம்

இன்று நாகரிகத்தின் அளவு கோலாகவும், அதன் உயிர் மூச்சாகவும் மின்சாரம் விளங்குகிறது. தொழில் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து மின்சாரத்தின் உபயோகம் மிகப் பெரிய அளவிலே வளர்ந்து வந்துள்ளது. நகரங்களுக்கு மட்டும் அல்லாமல், கிராமங்களுக்கும் இன்று மின்சாரம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. தெருவில் மண்டிக் கிடக்கும் இருளை விரட்டவும், சிறு தொழில் இயந்திரங்களை ஓட்டவும், வேளாண்மைப் பம்பு செட்டுகளை இயக்கவும் என்று பலவகைக் காரியங்களுக்காகக் கிராமப் பகுதிகளில் மின்சாரம் தேவைப்படுகிறது.

மின்னொளி பரவுகிறது

அதனால் அரசாங்கம், மின்சாரப் பெருக்கத்திற்குத் திட்டங்களில் முதலிடம் அளித்துள்ளது. கிராமங்களுக்கு மின்சாரம் அளிப்பதில் தமிழ்நாடே முன்னணியில் இருந்து வருகிறது. நகரங்களிலுள்ள வசதிகள் கிராம மக்களுக்கும் கிடைக்குமாறு செய்யப்பட்டு வருகின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு மேட்டூர் நீர் மின்சாரத் திட்டத்திலிருந்தும், சென்னை அனல் மின்சார நிலையத்திலிருந்தும் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. வேலூர், ராணிப்பேட்டை நகரப் பகுதிகளுக்கு வேலூர் மின்சார விநியோகக் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

மின்சாரம் விளக்கு எரிக்கப் பயன்படுவதுடன், பாசன வளத்திற்காகவும் மிகுந்த அளவில் உபயோகிக்கப்படுகிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் வற்றாத ஆறுகளோ அன்றிக் குளங்களோ

இல்லை. அதனால், எண்ணற்ற பம்பு செட்டுகள் மின்சாரத்தினால் இயக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் 21,367 வேளாண்மைப் பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை, முதல் திட்ட இறுதியில் இருந்த பம்பு செட்டுகளின் எண்ணிக்கையைப் போல மும்மடங்கு ஆகும்.

இம்மாவட்டத்திலுள்ள மொத்தம் 2,116 கிராமங்களில் 1,248 கிராமங்களுக்கு இரண்டாம் திட்ட இறுதியில் மின்சார வசதி செய்து தரப்பட்டது. வட ஆர்க்காட்டில் 1960-61-ல் மட்டும் 225 கிராமங்கள் மின்சார வசதியைப் பெற்றன. மூன்றுவது திட்ட இறுதியில், இம்மாவட்டத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்படும். கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கும் திட்டம் முன்னேறும் வேகத்தை நோக்கும்போது, இந்த லட்சியம் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.



கல்வி விளக்கு

உலகை உணர்த்தவும், வாழ்வை உயர்த்தவும் உதவுவது கல்வி. அதனுல்தான் நம் முன்னேர் கல்வியைக் கண்ணெனப் போற்றி வந்தனர். மாந்தர் பெற்றுள்ள செல்வங்கள் யாவற்றிலும் தலையாய சிறப்புப் பெற்றதாகத் திகழ்வது கல்வியே. நீரால் நெருப்பால் அழிக்க ஒண்ணுதது; கள்வரால் கவர முடியாதது; கொடுக்கக் குறையாதது கல்வி. இதன் பெருமையைத் தெளிந்து உணர்ந்த திருவள்ளுவர்,

> ''கேடில் விழுச் செல்வம் கல்வி—ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை''

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

தனி மனிதனின் அறிவாற்றலுக்கு மட்டுமின்றிச் சமுதாயத்தின் உயர்வுக்கும் கல்வி வளர்ச்சி இன்றியமையாதது ஆகும். இன்று மனித இனம் விஞ்ஞானம், மருத்துவம், தொழில்,

இலக்கியம், கலை முதலான சகல துறைகளிலும் எய்தியுள்ள முன்னேற்றத்திற்கு மூல காரணமாக விளங்குவது கல்வியே.

இதனால் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுவது அரசாங்கத்தின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும். இதனைச் சுதந்திர அரசாங்கம் நன்கு உணர்ந்து தக்க முறையில் முன்னேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கல்லூரிகளையும் பள்ளிகளையும் புதிது புதிதாக ஏற்படுத்துதல், ஏழை எளிய மாணவர்களுக்குக் கல்விச் சலுகைகள் அளித்தல், தொழில் நுணுக்க, ஆதாரக் கல்வியினை வளர்த்தல், இலவசப் பகலுணவு அளித்தல் முதலான அரும்பணிகளை ஆற்றி வருகிறது. அவை நல்ல முறையில் இன்று பலன் தந்து வருகின்றன. கல்வி மறுமலர்ச்சியில் மக்களும் பங்கெடுத்துக்கொண்டு பணியாற்றுதல் ஒரு மகத்தான சாதனையாகும். கல்வித் துறையில் நாம் அடைந்துவரும் முன்னேற்றம், "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்பதனை நிலைநாட்டி வருகிறது.

வளரும் கல்வி

தொடக்க நிலைக் கல்வி தகுந்த முறையில் வளராவிட்டால் கல்வித்துறையில் எந்த முன்னேற்றமும் சாத்தியமில்லாமல் போய் விடும். ஆகவே வட ஆர்க்காடு மாவட்டத்தில் கடந்த பத்து ஆண்டுகளில் தொடக்க நிலைக் கல்வி மிக அதிக அளவில் விஸ்தரிக்கப் பட்டது.

	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை
1947-ஆம் ஆண்டிற்கு முன்பு	1,488	1,04,807
முதல் திட்ட இறுதியில்	2,191	1,84,977
இரண்டாவது திட்ட இறுதியில்	2,215	2,61,076

மேலே காட்டிய புள்ளி விவரங்களிலிருந்து 1947-ஆம் ஆண்டிலிருந்த பள்ளிகளைப்போல் இப்பொழுது 50 சதவிதப் பள்ளிகள் அதிகரித்திருப்பது புலனாகிறது; மேலும் 1947-ல் பள்ளிகளுக்குச் சென்ற ஒவ்வொரு நூறு மாணவர்களுக்கும் இப்பொழுது 250 மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லுகிறார்கள். மக்கள் தொகை 300-ம், அதற்கு அதிகமாகவும் உள்ள கிராமங்களுக்கு எல்லாம் தொடக்கப் பள்ளி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நெடுந் தொலைவிலுள்ள பள்ளிகளுக்குச் சென்று பணியாற்ற ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் அமைத்துக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆரம்ப நிலையாக இம்மாவட்டத்தில் ஆசிரியைகளுக்கு நெடுந் தொலைவிலுள்ள கிராமங்களில் 19 குடியிருப்பு இல்லங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன

உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும் கடந்த பத்தாண்டுகளில் அதிக அளவில் உயர்ந்து வந்துள்ளது. இம்மாவட்டத்தில் 1947-ல் 25 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன ; இரண்டாவது திட்ட இறுதியில் இந்த எண்ணிக்கை 82 ஆக அதிகரித்தது. உயர்நிலைப் பள்ளிகளில் 1947-ல் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 17,000 ; இப்பொழுது படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 39,000. இரண்டாவது திட்டத்தில் மட்டும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 50 சதவிதம் அதிகரித்துள்ளது. இந்தக் காலத்தில் மாணவர்களின் எண்ணிக்கையில் காணப்பட்ட உயர்வு 22 சதவீதம் ஆகும்.

	உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை	இப்பள்ளிகளில் பயிலும் மாணவர் எண்ணிக்கை (எண்கள் 100க்கு, முழுமையாக்கப் பட்டவை)
1947-ல்	25	17,000
முதல் திட்ட இறுதியில்	55	32,000
இரண்டாவது திட்ட இறுதியில்	82	39,000


கைத் தொழில்

கல்வி முறைகளிலும் பல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கல்வித் திட்டத்தில் உடல் உழைப்பு, தச்சு வேலை முதலியவை சேர்க்கப்பட்டன. பல பள்ளிகளில் வேளாண்மை பாடமாக்கப்பட்டுள்ளது. 'அலுவலகப்' பயிற்சி, எஞ்சினீயரிங், ஓவியம், மனை இயல் முதலியனவும் பல பள்ளிகளில் கற்றுத் தரப்படுகின்றன. நூல் நிலைய வசதிகள், விஞ்ஞானக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள் முதலானவை பல பள்ளிகளில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டு வருமானம் ரூ. 1,200 க்குக் குறைவாக உள்ளவர்களின் குழந்தைகளுக்கும், என்.ஜி.ஓ. வினர், ஆசிரியர்கள் முதலானோரின் குழந்தைகளுக்கும் பத்தாம் வகுப்புவரை இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது,

உயர்நிலைப் பள்ளித் திட்டத்தில் அமுலாக்கப்பட்ட இன்னொரு முக்கியமான வேலைத்திட்டம், தேசிய மாணவர் படை அமைப்பு ஆகும். இளம் மாணவர் உள்ளத்தில் ஒழுக்கத்தையும், நாட்டுப் பற்றையும் இந்த இயக்கம் உண்டாக்குகிறது. இம்மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் சுமார் 500 மாணவர்களுக்குத் தேசிய மாணவர் படையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

1951-ம் ஆண்டிற்கு முன்னர் வேலூரிலும், வாணியம்பாடியிலும் இரு கலைக் கல்லூரிகள் இருந்தன. முதல் திட்டக் காலத்தில் புனித இருதயக் கல்லூரி திருப்பத்தூரில் தொடங்கப்பட்டது. பின்னர் காட்பாடியில் ஒரு மகளிர் கல்லூரியும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டன. வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி பெரும் புகழும் பெற்று விளங்குகிறது. இம்




பல தொழில் பயிற்சிப் பள்ளி, வேலூர்

மாவட்டத்திற்காக அனுமதிக்கப்பட்ட பல தொழில் பயிற்சிப் பள்ளி வேலூரில் இடம் இல்லாத காரணத்தினால் சென்னையில் நடத்தப்பட்டு வந்தது. இப்பொழுது இது வேலூருக்கு மாற்றப்பட்டுவிட்டது. மிகச் சமீபத்தில், பார்வையிழந்தவர் பள்ளி ஒன்று வேலூரில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பள்ளியில் இப்பொழுது பார்வையிழந்த பத்து மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

வழக்கமாகச் சொல்லித் தரப்பட்டு வரும் கல்விமுறை ஏட்டுக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறது; ஆனால், ஆதாரக் கல்வி முறையோ, அனுபவக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. பிந்திய முறையின் நன்மைகள் இப்பொழுது மெல்ல உணரப்பட்டு வருகின்றன. முதல் திட்டக் காலத்தில் 161 ஆதாரப்பள்ளிகளும், 2 ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளும் இருந்தன. இப்பொழுது 461 ஆதாரப் பள்ளிகளும், 5 ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளும் இருக்கின்றன. ஆதாரப் பள்ளிகளாக இல்லாத பள்ளிகள் மெல்ல

ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டு வருகின்றன; ஆதாரப் பயிற்சி பெருத ஆசிரியர்களுக்கு ஆதாரக் கல்வியில் பயிற்சி 'தரப்படுகிறது.

நமது மாநிலத்தில் உள்ள முதியோர்களுக்குக் கல்வியளித்து அவர்களை முன்னேற்றுவிக்கவும் அரசாங்கம் முயன்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 8 முதியோர் பள்ளிகள் நடத்தப்படுகின்றன; முதியோர் கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கல்விப் பயிற்சி அளிக்கிருர்கள். இந்தப் பள்ளிகளில் சுமார் 2,500 முதியோர்கள் படிக்கிருர்கள். இந்தப் பள்ளிகளில் வகுப்புக்கள் நடத்தப்படுவதோடு கூட, புத்தகங்கள்,



முதியோரும் கல்வி கற்க வசதி

விளக்கப் படங்கள், 'மேழிச் செல்வம்' போன்ற பத்திரிகைகள் முதலானவைகளும் அளிக்கப்படுகின்றன. முதியோர் சமூகக் கல்வி இயங்கும் குழுவினர், முதியோர் அறிவு விளக்கம் பெறுவதற்காக இப்பள்ளிகளில் 16 மி. மீ. திரைப்படங்களையும் காட்டுகின்றனர்.

கல்வி வளர்ச்சியில் மக்களுக்கு ஆர்வத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தி, அவர்களது ஒத்துழைப்பைப் பெற்று அரசாங்கம் வெற்றியுடன் நிறைவேற்றி வரும் வேறு இரு திட்டங்களும் இருக்கின்றன. அவை : (1) பள்ளிச் சீரமைப்புத் திட்டம் ; (2) இலவச நண்பகல் உணவுத் திட்டம். நமது வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் மக்களின் திட்டமே. அவ்வாறு இருக்கும் பொழுது

இவ்விரு திட்டங்களுக்கும் உதவுமாறு பொதுமக்கள் ஊக்கப்படுத்தப்படுவதில் வியப்பு ஒன்றும் இல்லே. பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், கல்வியின் நலன் கருதி, பள்ளிக்கூட இடங்கள், கட்டடங்கள், ஆய்வுக்கூடக் கருவிகள் முதலான உதவிகளைத் தாராள மனத்துடன் தந்து உதவுமாறு பிரதேச மக்கள் ஊக்கப் படுத்தப் படுகிறார்கள். திட்டம் இயங்கிய இரண்டு ஆண்டுக் காலத்தில், இம்மாவட்டத்தில் 5 பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடைபெற்று இருக்கின்றன ; 3·5 லட்சம் ரூபாய்க்கு மேல் வசூல் செய்யப்பட்டுள்ளது : 1,200க்கு மேற்பட்ட பள்ளிகள் பலன் அடைந்துள்ளன.

நண்பகல் உணவு

மக்களிடமிருந்து மனமுவந்த நன்கொடைகளைப் பெற்று ஏழை மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இலவச நண்பகல் உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 1957ல் அமுலாக்கப் பட்டது. அப்பொழுது மாவட்டத்தில் சுமார் 200 பள்ளிகள் மட்டுமே பலன் அடைந்தன. ஆயின் இன்று 2,000 பள்ளிகளில் இலவச நண்பகலுணவு அளிக்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு, மாணவர் ஒருவருக்கு 4 காசுகள் வீதம் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டால், அரசாங்கம் இலவச நண்பகல் உணவு அளிக்க 6 காசுகள் வீதம் கொடுக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பள்ளிகளில் மாணவர் தொகை கணிசமாக உயர்ந்துள்ளது : ஏழை மாணவர்கள் பெரும் பயன் அடைந்துள்ளனர்.

இந்தத் திட்டம் அடைந்து வரும் முக்கியத்துவத்தையும், புகழையும் விளக்க, வேலூர் டிவிஷனில் மட்டும் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரம் போதுமானது ஆகும் :

1957—58	ரூ. 10,000
1958—59	ரூ. 80,000
1959—60	ரூ. 1,30,000
1960—61	ரூ. 3,50,000

கட்டாயக் கல்வித்திட்டம் இம்மாவட்டத்தில் 1946ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது. இப்பொழுது இது 185 கிராமங்களில் நடைமுறையில் இருக்கிறது. இரண்டாவது திட்டக் காலத்தில், கட்டாயக் கல்வித் திட்டத்தின் கீழ் 30,000க்கு மேற்பட்ட

மாணவர்கள் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள் ளார்கள்.

	1947	1961
1. தொடக்கப் பள்ளிகள்	1,488	2,251
2. உயர்நிலைப் பள்ளிகள்	25	82
3. ஆதாரப் பள்ளிகள்	—	461
4. கல்லூரிகள்	3	6
5. பார்வை இழந்தவர் பள்ளி	—	1
1. தொடக்கப் பள்ளி மாணவர்	1,04,807	2,61,076
2. உயர்நிலைப் பள்ளி மாணவர்	17,000	38,987



"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

மக்களாகப் பிறந்தோர் அனைவரும் ஓர் இனத்தவரே ; அவர்களுக்குள் பாகுபாடு இல்லை. ஆனால், அவரவர் செய்யும் தொழிலால் மட்டுமே சிறப்பு வேறுபடும் என்பது திருவள்ளுவர் கருத்து.

அந்நியரை எதிர்த்து நாட்டு விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில், நமது மூடப் பழக்க வழக்கங்கள், சமுதாயக் கொடுமைகள் முதலியவற்றையும் எதிர்த்துக் கடுமையாகப் போராடினார் அண்ணல் காந்தியடிகள். ''தீண்டாமை நமது சமுதாயத்திற்கே ஒரு களங்கமாக இருக்கிறது. அது நீங்கினால்தான் நாம் உலகில் தலை நிமிர்ந்து முன்னேற முடியும்'' என்று சமுதாய மறுமலர்ச்சிச் சிற்பிகளும் நமக்கு வழிகாட்டினார்கள்.

பழமையான பிற்போக்கு எண்ணங்கள், தாழ்வு மனப்பான்மை, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் முதலியவை, ''எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்'' என்ற உணர்வை

வளர்க்காது போயின. ஆகையினுல், தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் வடைய அவர்களுக்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுமாறு செய் வதில் அரசாங்கம் பெருங் கவனம் செலுத்தியது. அம்மக்களுக் குக் கல்விச் சலுகை யளித்தல், வேளாண்மைக் காரியங்களுக்கு உழவு மாடுகள், கருவிகள் வழங்கல், வீடுகட்டிக் கொடுத்தல் போன்ற பல வசதிகளைச் செய்து தந்தது. இவற்ருல் இன்று இம் மக்கள் சமுதாயத்தில் சம உரிமை பெற்று வாழ்கிருர்கள்.

அரசாங்கத் திட்டங்களால் ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட் யூல்டு மலை ஜாதியினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங் குடியினர், மற்றப் பின் தங்கிய வகுப்பினர் முதலான மக்கள் பெருநன்மை அடைந்தனர்.

ஹரிஜன மக்கள், மற்றப் பின் தங்கிய மக்கள் முதலானேரின் நலனுக்காகத் தனித்துறை ஒன்றும் நமது மாநிலத்தில் நிறுவப்பட்டது. இத்துறையினர் இருவகைத் திட்டங்களை நிறை வேற்றி வருகின்றனர். ஒன்று மானிய உதவித் திட்டம்; இன் னென்று மத்திய அரசாங்கத் திட்டம். முன்னதற்கு மத்திய அர சாங்கம் 50 சதவித மானிய உதவியினை அளிக்கிறது. பின்னது முழுவதும் மத்திய அரசாங்கத்தின் பண உதவியைப் பெறுவது. இவ்விருவகைத் திட்டங்களுக்கும் இரண்டாவது திட்டக் காலத்தில் சுமார் ரூ. 34 லட்சம் செலவிடப்பட்டது.

குடியிருக்க வீடுகள்

மாநில அரசாங்கம் மானிய உதவித் திட்டத்தின்கீழ், தன்னிட முள்ள நிலங்களையோ அல்லது தனியாரிடமிருந்து விலைக்கு வாங்கும் நிலங்களையோ மனைக் கட்டுகளாக ஒதுக்கித் தருகிறது. 1951—52ல் இருபது மனைக்கட்டுகளுக்கான 1·09 ஏக்கர் நிலம் ஒதுக்கித் தரப்பட்டது. 1955-56ல் 162 மனைக் கட்டுகளுக்கான 12·64 ஏக் கர் நிலம் ஒதுக்கப்பட்டது. 1959-60ல் 1,718 மனைக் கட்டுகளுக் கான 144·47 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. இதுவரை 2,456 மனைக்கட்டுகள் ரூ. 5·432 லட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன. இரண்டாவது திட்டக் காலத்தில் இதுவரை 1,207 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இவற்றில் 1,145 வீடுகள் ஷெட்யூல்டு வகுப்பி னருக்கும், 62 வீடுகள் ஷெட்யூல்டு பழங்குடியினருக்கும் ஒதுக்கப் பட்டன. இவை பொருள் உதவித் திட்டத்தின்கீழ் அமைக்கப் பட்டன. இத்திட்டத்தின்படி ரூ. 550 அரசாங்கத்திஞல் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மீதித் தொகை (ரூ. 200) கட ஞகக் கொடுக்கப்படுகிறது. இதனை 20 ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

ஹரிஜன நலத்துறையினர் ஏற்கெனவே உள்ள பள்ளிகளை நடத்தி வருவதுடன், புதிய பள்ளிகளையும் தொடங்குகின்றனர்.

முதல் திட்டக் காலத்தில் மூன்று பள்ளிகள் திறக்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் 157 பள்ளிகள் தொடங்கப் பட்டன. முதல் திட்டக்காலத்தில் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட பழங்குடியினருக்காக மட்டும் 4 பள்ளிகள் தொடங்கப் பட்டன ; இவை இரண்டாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்பட்டன. இப்பள்ளிகளில் இலவச நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மாணவர்களை அதிக அளவில் கொண்டுவந்து சேர்ப்பதுடன், அவர்கள் பயிலும்போது பசியால் வாடாமலும் பாதுகாக்கிறது.

கல்வி கற்கப் பொருளுதவி

பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பதற்கு உபகா ரச் சம்பளங்கள் அளிக்கப்படுகின்றன; அத்துடன் உணவு விடுதி களில் தங்கியிருந்து வசதிகளைப் பெற்றுக் கொள்ளவும் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. 1951-52ல் 1,254 உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்பட்டன; 1959-60ல் 3,752 உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்பட்டன. அரசாங்கத்தினால் 9 உணவு விடுதி களுக்கு உணவு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. இந்த விடுதி களைத் தவிர, ஹரிஜன நலத்துறையினரால் ஹரிஜன மாணவர் களுக்காக நடத்தப்படும் 14 உணவு விடுதிகளும் உள்ளன.

பின் தங்கிய வகுப்பினர் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை வழங்குவதுடன் ஹரிஜன நலத்துறையினரின் சேவை நின்றுவிட வில்லை. அம் மக்கள் வேளாண்மையில் வளஞ்செழித்து முன்னேற வும் இத்துறையினர் உதவி அளிக்கின்றனர். பாசனக் கிணறுகள் தோண்டவும், உழவுக் காளைகள், வித்துக்கள், வேளாண்மைக் கருவிகள் முதலியன வாங்கவும் கடன்கள் அளிக்கப்படுகின்றன. பொருள் உதவி அடிப்படையில் ஷெட்யூல்டு வகுப்பினருக்காக, ஒன்று ரூ. 1,500-க்கு மேற்படாத வகையில் 104 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. பாதி மானியம், பாதி கடன் அடிப்படை யில், குற்றப் பட்டியலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்காக, ஒன்று ரூ. 2,000 செலவில் 7 பாசனக் கிணறுகளைத் தோண்ட அனுமதிக்கப்பட்டது. ரூ. 285 மொத்தமதிப்புள்ள உழவுக் காளை கள், வித்துக்கள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவை 1,097 ஷெட் யூல்டு வகுப்புக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டன. இவ்வித நன்மை 30 ஷெட்யூல்டு பழங்குடியினர் குடும்பங்களுக்கும் 1960-61-ல் அளிக்கப்பட்டது. உழவுக் காளைகள், வித்துக்கள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவை வாங்கப் பாதி மானியம், பாதி கடன் அடிப்படையில் வேறு 190 குடும்பங்களுக்கும் உதவி செய்யப்பட்டது.

ஜவ்வாது மலைகளில் வாழும் மலையாளிகளுக்குப் பணி யாற்றும் பொருட்டு ஒரு இயங்கும் மருத்துவக் குழு அமைக்கப் பட்டுள்ளது. இதில் ஒரு டாக்டரும், ஒரு மருத்துவச்சியும் இருக்கின்றனர். இவர்களுக்கு ஒரு ஜீப்பும், அவசியமான மருத்துவக் கருவிகளும் அளிக்கப்பட்டுள்ளன. வனத்துறையின ரால் இங்கு நடத்தப்படும் தொடக்கப் பள்ளிகளில் இலவச நண் பகல் உணவு அளிக்கும் பணியை ஹரிஜன நலத்துறையினர் தமது செலவில் நிறைவேற்றி வருகின்றனர். வனத்துறைத் தொடக்கப் பள்ளிகள் இரண்டுக்கு நல்ல கட்டடங்கள் கட்ட மானியம் அளிக் கப்பட்டது.

ஜவ்வாது மலைகளில் வாழும் மலையாளிகளின் நலனுக்காக 12 முதியோர் கல்வி நிலையங்களும் நடத்தப்படுகின்றன. இவர்களுக் காக ஹரிஜனநலத் துறையினரால் ஒரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்களுக்குக் கல்விச் சலுகை, வேளாண்மை உதவி ஆகியவை அளிக்கப்பட்டதுடன், சராசரி ரூ. 600 செலவில் ஆறு சுகாதாரக் கக்கூசுகளும் அமைத்துக் கொடுக்கப்பட் டுள்ளன. இம் மக்களிடையே குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக் காக உதவி அளிக்கப்படுகிறது. குறவர்கள் கூடை முடைவதில் திறன் பெற்றவர்கள். ஆகையினால், இக்குடிசைத் தொழிலின் முன்னேற்றத்திற்காக 400 குறவர் குடும்பங்களுக்கு உதவி தரப் பட்டது. மற்றப் பின்தங்கிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக் காக 947 உபகாரச் சம்பளங்களும், 117 உணவு மானியங்களும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கொடுக்கப்பட்டன.


உழவுக் காளைகள்

மத்திய அரசாங்கத்தின் முழு மானிய உதவி பெறும் திட்டம் குடி நீர்க் கிணறுகளை அமைக்கவும், தொழில் பயிற்சி பெற்ற நபர்களுக்கு வேளாண்மை உதவி அளிக்கவும் வகை செய் கிறது. மாவட்டத்தில் 804 குடும்பங்களுக்கு உழவுக் காளை கள் வழங்கப்பட்டன. தொழில் நுணுக்கப் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஷெட்யூல்டு வகுப்பு இளைஞர்கள் தச்சு, கருமான், தையல், வெல் டிங், ஒயரிங் போன்ற பயனுள்ள வேலைகளில் வாழ்வை அமைத்துக் கொள்ள வழிகாட்டப்பட்டது. இதனால் 620 பேர் பயன் பெற்றார்கள். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் ஷெட்யூல்டு வகுப்பினருக்காக 243 வீடுகள் கட்டப்பட்டன. ஷெட்யூல்டு பழங்குடியினருக்காக 74 வீடுகளும், 12 குடிநீர்க் கிணறுகளும் ரூ. 62,300 செலவில் அமைத்துக் கொடுக்கப் பட்டன. வட ஆர்க்காடு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் குற்றப்

பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் நலன் கருதி, ரூ. 98,010 செலவில் 188 வீடுகள் கட்டப்பட்டன.

முன்னேறாத பகுதிகளை, மற்ற முன்னேற்றப் பகுதிகளைப்போல் வளம் பெற்றவையாக ஆக்க வேண்டும் என்ற கருத்தில் இந்திய அரசாங்கம் 1960-61ல் வளர்ச்சித் திட்டங்களை இப்பகுதிகளில் அமுலாக்கிற்று. இத் திட்டத்தின்கீழ் வெலகல் நத்தம் நிலக் குடியேற்றச் சங்கத்தில் மண்வளப் பாதுகாப்பு வேலை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஜவ்வாது மலைகளில் இரண்டு குடிநீர்க் கிணறுகளும் அமைக்கப்பட்டன.

ஹரிஜன நலத் திட்டங்களில் மற்றொரு முக்கியமான திட்டம், தீண்டாமையைத் தீவிரமாக எதிர்த்துப் பிரசாரம் செய்வது ஆகும். ஹரிஜன மக்களை மற்றவர்களிடமிருந்து ஒதுக்கி வைக்கும் சமுதாய அமைப்பை மாற்றி அமைக்க இத்திட்டம் அடிப்படையை உருவாக்குகிறது. தீண்டாமைக் கொடுமையை எதிர்த்துப் பிரசாரம் செய்ய



ஹரிஜனக் குடியிருப்பு, பொய்கை சத்தியமங்கலம்

இம் மாவட்டத்தில் 10 துணைச் சேவகர்கள் தொண்டாற்றுகிறார்கள். ஹரிஜனங்களுக்குத் தேவைப்படும் சமூக, மருத்துவ உதவிகளைச் செய்வதற்காகச் செய்யாறு வட்டம் வாக்கடை கிராமத்தில் ஒரு சமூக நிலையம் தொடங்கப்பட்டது.

பின்னடைந்த வகுப்பு மக்களுக்கு அளிக்கப்பட்ட உதவி விவரங்களை அடுத்துள்ள அட்டவணையில் காணலாம்.

இரண்டாவது திட்டக் காலம்	ஷெட்யூல்டு வகுப்பினர்	ஷெட்யூல்டு பழங்குடியினர்	குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட மக்கள்
செலவான தொகை (மானிய உதவித் திட்டத்தின் கீழும், மத்திய அரசாங்க முழு நிதி உதவித் திட்டத்தின் கீழும்)	ரூ. 27·472 லட்சம்	ரூ. 2·825 லட்சம்	ரூ. 2·820 லட்சம்
கல்வி			
1. பள்ளிகளின் எண்ணிக்கை	151	2	3
2. உதவி பெறும் உணவு விடுதிகள்	8	1	....
3. அரசாங்க உணவு விடுதிகள்	14	....	....
வேளாண்மை			
1. பாசனக் கிணறுகள்	104	....	–
2. உழவுக் காளைகள், வித்துக்கள், வேளாண்மைக் கருவிகள் வழங்கப் பட்ட குடும்பங்கள்	1,097	90	....
வீட்டு வசதி			
வீடுகளின் எண்ணிக்கை	1,145	62	....
குடிசைத் தொழில்			
(பயனடைந்த குடும்பங்கள்)	....	....	400

மாதர் நலம்

" மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் '' என்று முழங்கினர் பாரதியார். சமுதாயத்தில் பெண்கள் முன்னேற்றம் அடையாவிட்டால், நாட்டு முன்னேற்றமும் நல்ல முறையில் ஏற்பட முடியாது. இதனல், பெண்கள் நல வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இம் மாவட்டத்தில் மாதர் நலத்துறையினர் பள்ளிகொண்டா, செங்கம், வந்தவாசி, ஒடுக்கத்தூர், வேலூர் ஆகிய ஐந்து இடங்

களிலும் மாதர்நல நிலையங்களை ஏற்படுத்தியுள்ளனர். இந்தக் கிளை நிலையங்கள் குடும்ப நல விவரங்களை விசாரித்தல், 3 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடிப்படைக்கு முந்திய நிலை கல்வி யளிக்கும் வகுப்புக்களை நடத்துதல், மாதர் சங்கங்களை ஏற்படுத்து தல், குடிசைத் தொழில்களில் பயிற்சி அளித்தல் போன்ற நற்பணி களை நிறைவேற்றுகின்றன.

மாதர்நலக் கிளை நிலைய அமைப்பாளர்கள் ஒழுங்கான முறை யில் வீடுகளுக்கு வருகை புரிகின்றனர். அந்தச் சமயங்களில் அவர்கள், பெண்களை வீட்டில் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு வழிவகை கூறுகின்றனர். குடும்ப வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் முறை, பேறு காலத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதம், குழந்தைகளை நன்கு பராமரிக்கும் முறை போன்ற பல விஷயங்களில் அவர்கள் குடும்பப் பெண்களுக்கு நல்வழி காட்டு கின்றனர். பெண் அங்கத்தினர்களுக்குப் பயனுள்ள கைத்தொழில் களைக் கற்றுத் தரவும், கல்வி போதிக்கவுமே முக்கியமாக மாதர் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

மாதர் சங்கம்

இம் மாவட்டத்தில் 11 மாதர் சங்கங்கள் உள்ளன. இவை எவ்வாறு சிறந்த பணியாற்றுகின்றன என்பதற்கு எடுத் துக்காட்டாக, வேலூரில் உள்ள மாதர் சங்கத்தைக் குறிப்பிடலாம். இங்குப் போலீஸ் கான்ஸ்டேபிள்களின் மனைவிமார்கள் 60 பேர் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். இவர்கள் கைத்தொழில் களில் ஈடுபட்டுள்ளனர். இவர்களால் தயாரிக்கப்படும் பொருள் களை விற்று இவர்களுக்குக் கூலி தரப்படுகிறது. சராசரியாக ஓர் அங்கத்தினர் ஒரு வாரத்தில் சுமார் ரூ. 5 சம்பாதிக்கிறார். வய தானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் இங்குக் கல்வி போதனை வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. மத்திய சமூகநல போர்டு, கட்டடம் ஒன்று அமைப்பதற்காக ரூ. 2,500 அனுமதித்துள்ளது. சென்னை போலீஸ் நிதியிலிருந்து ரூ. 1,250 கடனுதவி அனுமதிக்கப் பட்டது. மற்றச் செலவுகளை ஈடுகட்டச் 'சிரமதானம்' அளிக்க ஆயுத ரிஸர்வ் போலீஸார் முன்வந்தனர்.

ஷெட்யூல்டு பழங்குடிப் பெண்டிர் பயன் அடையும் பொருட்டு மாதர்நலத் துறையினரால் 1958-ல் இரண்டு வேலை நிலையங்கள் திறக்கப்பட்டன. இந்த நிலையங்களில் 30 பேர் பயிற்சி பெற்றுள்ள னர். போளூரில் குறவர்களுக்குக் கூடை முடைதலும், கலசபாக்கத் தில் நரிக்குறவர்களுக்குப் பாய் நெசவும் கற்றுத் தரப்படுகின்றன. இக் கைத்தொழில்களில் அவர்கள் நன்கு பயிற்சி பெற்ற பின்னர், 1961-ல் தொடங்கப்பட்ட உற்பத்தி யூனிட்டுகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

வேலூரில் அமைக்கப்பட்டுள்ள கான்ஸ்டேபிள்களின் மனைவி களுக்கான மாதர் சங்க வளர்ச்சியில் அக்கறை காட்டுவதுடன், போலீஸ் துறையினர் வேலூரில் 1959-ல் ஓர் சிறுவர் சங்கத்தை யும் (Boys' Club) உருவாக்கியுள்ளனர். மாவட்டக் கலெக்டர் இச் சங்கத்தின் தலைவராக இருக்கின்றார். அவரது உசிதம்போல் தீர் மானிக்கப்பட்டு அளிக்கப்படும் மானியத்தாலும், பொதுமக்களின் நன்கொடையாலும் இச் சங்கம் நடத்தப்படுகிறது. இவற்றைத் தவிரத் தமிழ்நாடுஅரசாங்கம் மூலதனச் செலவுக்காக ரூ.1,000-ம், நடைமுதல் செலவுக்காக ரூ. 1,900-ம் அனுமதித்துள்ளது.

இளைஞர்களுக்கு விளையாட்டு, சாரணீயம் முதலியவற் றில் பயிற்சி அளித்து, அவர்களை நாட்டின் நற்குடி மக்களாக வளர்ப்பதே இச் சங்கத்தின் குறிக்கோள். போதுமான வாய்ப்பும் வசதியும் அற்ற இளைஞர்களுக்கு நல்ல குடிமைப் பயிற்சி அளிக்க வும், அவர்களது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவழிக் கச் சிறந்த வேலை வாய்ப்பினை அளிக்கவும் மிகுந்த அக்கறை காட் டப்படுகிறது. இச் சங்கத்தின் நல்லாதரவின்கீழ், பெற்றோர், ஆசிரியர் இவர்களின் சீரிய ஒத்துழைப்புடன் இளங் குற்றவாளி கள் தோன்றாமல் தவிர்க்க வழிவகை தேடப்படுகிறது.



மருத்துவ உடல் நல வசதிகளை அதிகரிப்பதன் மூலம் நாட்டை வலிவும் பொலிவும் மிக்கதாகச் செய்ய இயலும். இதனால்தான் நம்முடைய முன்னோர், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று வாழ்ந்து வந்தனர். உடலை உறுதி செய்தால், மனவளம் பெருகும்; நாட்டின் நலமும் உயரும். வைத்திய வசதிகள் அதிகரித்து விட்டால் மட்டும் போதாது; அவை பரவலான முறையில், உள்நாட்டில் நெடுந்தொலைவில் உள்ள கிராம மக்களுக்கும் கிடைக்குமாறு செய்ய வேண்டும். இந்த இரு கடமைகளையும் சுதந்திர அரசாங்கம் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

நம் நாட்டு மக்களின் உடல் வளம் வேகமான முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இதற்கு மருத்துவத் துறையினர் இரண்டு விதத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றனர். அவை தடுப்புத் திட்டமும், குணப்படுத்தும் திட்டமும் ஆகும். நோய்களைத் தடுக்கும் முந்திய திட்டத்தை மாவட்டச் சுகாதார அதிகாரியும்,

நோய்களைக் குணப்படுத்தும் பிந்திய திட்டத்தை மாவட்ட மருத்துவ அதிகாரியும் கவனித்துக் கொள்ளுகின்றனர்.



நம் நாட்டில் 40,000 அல்லது 50,000 மக்களுக்கு ஒரு டாக்டர்விதம் தான் இருக்கின்றனர். இந் நிலையில், டாக்டர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் அரும்பாடுபட்டு வருவதில் வியப்பு இல்லை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் ஓர் அரசாங்க மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு மருத்துவ வசதியளிக்க ஒவ்வோர் ஆண்டும் இந்த மருத்துவமனைகளில் அதிக அளவில் செலவிடப்பட்டு வருகிறது. கடந்த ஒன்பதாண்டுகளில் செலவான தொகை பற்றிய விவரம் பின்வருமாறு :

1951-52	—	ரூ. 4,98,653
1952-53	—	ரூ. 5,34,694
1953-54	—	ரூ. 6,63,958
1954-55	—	ரூ. 5,54,607
1955-56	—	ரூ. 6,04,882
1956-57	—	ரூ. 7,48,498
1957-58	—	ரூ. 12,21,649
1958-59	—	ரூ. 12,56,150
1959-60	—	ரூ. 11,66,850

வேலூரில் உள்ள பென்ட்லண்டு அரசாங்க மருத்துவமனையில் படுக்கை வசதி பெருகி வந்துள்ளது. 1951ம் ஆண்டில் 153 படுக்கைகளே இருந்தன ; இந்த எண்ணிக்கை 1953ம் ஆண்டில் 161 ஆகவும், 1955ம் ஆண்டில் 202 ஆகவும், 1958ம் ஆண்டில் 250 ஆகவும் அதிகரித்தது. தற்பொழுது அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 250 ஆக இருந்த போதிலும், இங்குத் தினமும் 400க்கும் அதிகமான உள் நோயாளிகள் கவனிக்கப்படுகின்றனர்.

இந்த மருத்துவமனையில் 1955ம் ஆண்டில் ரூ. 40,000 செலவில் ஒரு 'எக்ஸ்-ரே' கருவி அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 6,000 செலவில் எலக்ட்ரோகார்டியோகிராம் ஒன்றும் 1957ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.



பென்ட்லண்டு மருத்துவ மனையில் புது விஸ்தரிப்பு

வாலாஜா, குடியாத்தம் ஆகிய இடங்களில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை முறையே 4-லிருந்து 32 ஆகவும், 40 லிருந்து 80 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு மருத்துவ மனைகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அகில உலகக் குழந்தைகள் அவசர நிதியிலிருந்து இலவசமாக 'எக்ஸ்-ரே' சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. குடியாத்தத்திலும், திருவண்ணாமலையிலும் உள்ள அரசாங்க மருத்துவ மனைகள் 1958ல் தரம் உயர்த்தப்பட்டன; இவை செலக்ஷன் கிரேடு உதவி சர்ஜன்கள் கண்காணிப்பில் இருந்து வருகின்றன.

மேல்பட்டியிலும், தானிப்பாடியிலும் மூடப்பட்டிருந்த கிராம மருத்துவ மனைகள், 1959ல் அரசாங்க மருத்துவ மனைகளாகத் திறந்து வைக்கப்பட்டன. மூன்று தல நிதி மருத்துவ மனைகளும் கடந்த பத்தாண்டுகளில் அரசாங்க நிர்வாகத்தில் கொண்டுவரப் பட்டுள்ளன. நான்காவது மருத்துவ மனை 1961ல் அரசாங்க நிர்வாகத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

தல நிதி மருத்துவ மனையின் இடம்	அரசாங்க நிர்வாகத்தில் வந்த ஆண்டு
செங்கம்	1951
போளூர்	1957
செய்யாறு	1958
சோளிங்புரம்	1961

இந்த இடங்களில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளுக்குக் குடியிருப்பு இடங்களைக் கட்டித்தரும் திட்டத்தை அரசாங்கம் அங்கிகரித்துள்ளது. வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

போர்ப் பிற்காலப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் (1) மங்கலம், (2) நார்தாம் பூண்டி, (3) கீழ்ப் பென்னாத்தூர், (4) வேட்ட வலம் ஆகிய இடங்களில் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப் பட்டன. இவை இப்பொழுது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தேசியநலப் பரப்புத் திட்டத்தின்கீழ் (1) கடலாடி, (2) களம்பூர், (3) லாலா பேட்டை, (4) வடுகந் தாங்கல், (5) சத்திய விஜய நகரம், (6) மண்டகொளத்தூர் ஆகிய இடங்களில் ஆறு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சுகாதார நிலையங்களுக்கும், அலுவலாளர்கள் குடியிருப்புக்களுக்கும் ஆன கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மேக நோய் மருத்துவ நிலையம், பல்நோய் மருத்துவ நிலையம், குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ நிலையம், க்ஷயரோக மருத்துவ நிலையம் ஆகியவை இரண்டாவது திட்டக் காலத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவையல்லாமல் இத்திட்டக் காலத்தில் வேலூரில், பிரதேசப் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடம் ஒன்றும் அமைக்கப் பட்டிருக்கிறது.

இம் மாவட்டத்தில் வேலூரில் அமைந்துள்ள கிறிஸ்தவ மருத்துவமனையும், ஆம்பூரில் அமைந்துள்ள பெதஸ்தா மருத்துவமனையும் பொதுமக்களுக்குச் சிறந்தபணி ஆற்றிவருகின்றன. எல்லா வசதிகளும் நிறைந்த ஏற்றமிகு மருத்துவமனையாக வேலூர் மருத்துவ மனை விளங்குகிறது. இங்கு 755 படுக்கை வசதிகள் உள்ளன.

கட்டடங்கள்

இம்மருத்துவமனை தொறப்பாடியில் கிராம மருத்துவமனை ஒன்றையும், குடியாத்தம் வட்டம் காவனூரில் இயங்கும் குழு ஒன்றையும் நடத்தி வருகிறது. காவனூர் இயங்கும் மருத்துவக் குழு தொழு நோயையும், யானைக்கால் வியாதியையும் தீர்ப்பதில் சிறப்பான முறையில் தொண்டாற்றுகிறது. இவ்வாறே பெதஸ்தா மருத்துவ மனையும் நல்ல சாதன வசதிகளைப் பெற்று விளங்குகிறது. இது க்ஷயரோகத்தை ஒழிப்பதில் அரும்பணியாற்றி வருகிறது.

இரண்டாவது திட்டக் காலத்தில் வேலூர் பென்ட்லண்டு மருத்துவ மனையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களைப் பற்றிய விவரம் பின்வருமாறு :

		செலவுத் தொகை
1.	தொத்து நோய்ச் சிகிச்சை வார்டு அபிவிருத்தி	ரூ. 5,000
2.	மேக நோய் மருத்துவ நிலையம்	ரூ. 29,000

3.	நான்கு படுக்கைகளுடன் ஒரு தனி வார்டு	ரூ.	20,000
4.	புதிய வெளி நோயாளிகள் பிரிவு	ரூ.	49,000
5.	'எக்ஸ்-ரே' துறைக்குக் கூடுதலாக ஓர் அறை	ரூ.	6,000
6.	சவப் பரிசோதனைக் கிடங்கு (திருத்தி அமைக்கப்பட்டது)	ரூ.	6,000

பின்வரும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை மூன்றாவது திட்டக் காலத்தில் முடிவு பெறும்.

			செலவுத் தொகை
1.	பல்நோய் மருத்துவ நிலையம்	ரூ.	20,000
2.	சேமிப்பு அறை	ரூ.	30,000
3.	நர்சுகள் குடியிருப்புக்கள்	ரூ.	1,65,000
4.	இருபத்து நான்கு படுக்கைகளைக் கொண்ட மகப்பேறு வார்டு	ரூ.	84,000
5.	மூன்று அடுக்குக் கட்டடம்	ரூ.	5,06,000

வாலாஜாவில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் 20 படுக்கைகளைக் கொண்ட ஒரு வார்டு ரூ. 27,800 செலவில் அமைக்கப்பட்டது; ரூ. 8,000 செலவில் ஒரு நீர்த் தொட்டியும் கட்டப்பட்டது. ரூ. 7,500 செலவு மதிப்பீட்டில் 'எக்ஸ்-ரே' பிரிவு ஒன்றை அமைக்கும் வேலை மூன்றாவது திட்டக் காலத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

க்ஷயரோகம்

திருவண்ணாமலையில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில், ரூ. 8,600 செலவில் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு 1955-ம் ஆண்டில் முறையே 24 படுக்கைகளையும், 20 படுக்கைகளையும் கொண்ட இரண்டு வார்டுகள் கட்டப்பட்டன. மருத்துவ மனைக்கு நீர்த் தொட்டியும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

மூன்றாவது திட்டக் காலத்தில், வேலூரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள பென்னாத்தூரில் ஒரு க்ஷயரோக சானிடோரியமும், க்ஷயரோக மருத்துவ நிலையம் ஒன்றும் அமைக்கப்படும். வேலூர் க்ஷயரோக சங்கம் ரூ. 1,84,000 செலவு மதிப்பீட்டில் 40 படுக்கைகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. அரசாங்கம் ரூ. 93,000 செலவில் 60 படுக்கைகளை அமைத்துக் கொடுக்கும்.

இம் மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும், திருவத்திபுரத்திலும் இரண்டு தொழுநோய் நிவாரண நிலையங்கள் இருக்கின்றன. இவைகளுக்கு அரசாங்க மானியம் வழங்கப்படுகிறது. இந்த நிலையங்களில் 1960 ஜூன்வரை சிகிச்சை அளிக்கப்பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை 3,481.

புதிய முன்னேற்ற மருந்து வகைகளைக் கொண்டு அதிக அளவில் சிகிச்சை அளிப்பதன் மூலம் குறிப்பிட்ட அப்பகுதியில் தொழு நோய் பரவாமல் கட்டுப்படுத்துவதே இந்த நிலையங்களின் லட்சியம் ஆகும். இந்த மருந்துகளால் உடனே குணப்படுத்திவிட இயலாது. ஆயின், இவை ஓராண்டுக் காலம் உபயோகிக்கப்பட்டதும், நோய் பரவும் தன்மையைக் குறிப்பிட்ட அளவு குறைக்கின்றன. இவை அதிக அளவில் கொடுக்கப்பட்ட காரணத்தினுல், தொழு நோய் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எலத்தூர் நிலையத்தில் ஒரு மருத்துவ அதிகாரி இல்லாததனுல், அது முனைப்பான முறையில் பணியாற்ற முடியவில்லை. திருவண்ணுமலை நிலையத்திலுள்ள மருத்துவ அதிகாரியே, இந்நிலையத்தின் காரியங்களையும் கவனித்து வருகிருர். ராணிப்பேட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு, வாலாஜா வட்டத்தில் தொழுநோய் ஒழிப்புப் பணிக்கான திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. ரூ. 40,000 செலவில், ஒவ்வொன்றும் 12 படுக்கைகளைக் கொண்ட இரண்டு வார்டுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தனியார் நிலையங்கள்

மேலே விவரிக்கப்பட்ட அரசாங்க நிலையங்கள் அல்லாமல், இரண்டு தனியார் நிலையங்களும் தொழுநோய் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளன. அவை கரிகேரியில் அமைந்துள்ள ஷெப்பலின் தொழுநோய் சானிடோரியமும், காட்பாடியில் நிறுவப்பட்டுள்ள செஷ்ஷயர் ஹோமும் ஆகும். இவற்றுக்கு அரசாங்க உதவி அளிக்கப்படுகிறது.

ஷெப்பலின் சானிடோரியம் 1946-ல் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் இது அமெரிக்கத் தொழுநோய் மிஷனுல் நடத்தப்பட்டது. 1959-ம் ஆண்டில், ஆண்டு நடை முதல் செலவுக்காக ரூ. 18,000 கொடுக்க அரசாங்கம் தீர்மானித்தது. தொழுநோய் பற்றி ஆராய்ச்சி நடத்துவதையும், பிரசாரம் செய்வதையும் இந்நிலையம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இங்கு மொத்தம் 150 படுக்கை வசதிகள் உள்ளன.

செஷ்ஷயர் ஹோம் 1956-ம் ஆண்டில் குரூப் கேப்டன் செஷ்ஷயர் என்பவரால் தொடங்கப்பட்டது. இந்த ஆலோசனையை அவருக்கு அளித்தவர் டாக்டர் இடா ஸ்கட்டர் ஆவார். இந்நிலையம் இப்பொழுது உள்ளூர்க் குழு ஒன்றின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிறது. வீடு இல்லாத, நோயின் வெம்மையால் உடல் வெடிப்புண்ட தொழு நோயாளிகளுக்கென்று இந்நிலையம் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு நோயாளிகளுக்குத் தச்சு வேலை, கோழி வளர்ப்பு, நூற்பு முதலியவற்றில் எளிய பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு 15 நோயாளிகளுக்கு இட வசதி இருக்கிறது.



செஷ்யர் ஹோம் தொழுநோய் சானிடோரியம்

1957-ம் ஆண்டிலிருந்து அரசாங்கம், நடை முதல் செலவுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,500 இந்த நிலையத்திற்கு அளித்து வருகிறது.

குடும்பக் கட்டுப்பாடு

மருத்துவத் துறையினர் நிறைவேற்றும் மற்றொரு முக்கியமான திட்டம், குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஆகும். நம்முடைய நாட்டில் அதிகரிக்கும் உற்பத்தி உயர்வைக் காட்டிலும், மிக வேகமான முறையில் மக்கள் தொகை பெருகி வருகிறது. இந் நிலையில், நாட்டின் வளமும் பலமும் நிலை நிறுத்தப்பட வேண்டுமானால், அதற்குக் குடும்பக் கட்டுப்பாடு மிக அவசியம் ஆகும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பரப்புவதில் மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் தீர்க்க சிந்தனையுடன் செயலாற்றி வருகின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும் குடும்பக் கட்டுப்பாடு யூனிட் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. வேலூரில் உள்ள அரசாங்க பென்ட்லண்டு மருத்துவமனையில் குடும்பக் கட்டுப்பாடு அலுவலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த இடங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சந்தான பூர்த்தி சிகிச்சை செய்யப்படுகிறது.

அறுவைச் சிகிச்சையைப் பிரபலப்படுத்த அரசாங்கம் ஒரு முனைப்பான திட்டத்தையும் அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் வேலூர், திருவண்ணாமலை, குடியாத்தம், ஆரணி, அரக்கோணம் வாலாஜா ஆகிய இடங்களில் உள்ள மருத்துவ

நிலையங்கள் சந்தான பூர்த்தி சிகிச்சை செய்யும் நிலையங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பின்னர் இத் திட்டம் செய்யாறு தவிர்த்த மற்ற வட்டத்தலைமை மருத்துவ மனைகளுக்கும் வாணியம் பாடி, பேரணும்பட்டு மருத்துவ மனைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

" சுத்தம் சோறு போடும் " என்பது பழமொழி. நோய்கள் வராமல் தடுப்பதற்குத் தூய்மையாக இருப்பதே சிறந்த வழியாகும். '' சுத்தமுள்ள இடமெங்கும் சுகமும் உண்டு " என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

சமுதாயம் என்பது, மக்கள் அனைவரும் அங்கம் வகிக்கும் ஒரு பெரிய குடும்பமே ஆகும். ஆகையினால், ஒவ்வொருவரும் தூய்மையுடன் இருக்கத் தொடங்கினல் சமுதாயம் முழுவதும் தூய்மை பெற்றுவிடும். அதனல் நோயும் பெரும்பான்மை அழிக்கப்பட்டுவிடும்.

சுத்தமும் சுகமும்

அழுக்கான இடம், சேறும் சகதியுமான இடம், இருட்டான இடம் ஆகியவற்றில் கொடிய நோய்களுக்குக் காரணமான கிருமிகள் ஒன்று பத்தாகப் பெருகி வளர்கின்றன. இதனல் பெரிய அளவில் நோய்கள் மக்களைப் பீடித்து அவதிக்குள்ளாக்குகின்றன. ஆகையினுல், நோய் கண்ட அனைவருக்கும் சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் காரியம் முடிவடைந்துவிடுவது இல்லை. நோய் பரவக் கூடிய சூழ்நிலையில் உள்ளவர்களுக்கும் மருந்து தரவேண்டும். மேலும், நோய்க் கிருமிகளின் பெருக்கத்திற்கான சூழ்நிலைகளையும், சுற்றுப்புறங்களையும் சீர்திருத்திச் செம்மைப்படுத்த வேண்டும். இந்தப் பணியினைப் பொதுச் சுகாதாரத் துறையினர் திறம்பட நடத்தி வருகின்றனர். அவர்தம் முயற்சியால் இன்று பல தொத்து நோய்கள் கட்டுப்படுத்தப் பட்டு, ஒழிக்கப்பட்டும் வருகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் சில வட்டாரங்களில் குஷ்டம், மலேரியா, நரம்புச் சிலந்தி, யானைக்கால் ஆகிய நோய்கள் இருக்கின்றன. இவையே இம்மாவட்டத்தில் பொதுச் சுகாதாரத் துறையில் பிரச்சினைகளாக விளங்குகின்றன. வழக்கமான பொதுச் சுகாதாரத் திட்டத்துடன்கூட இம்மாவட்டத்தில் கடந்த இரண்டு திட்டக் காலங்களிலும் தேசிய யானைக்கால் நோய்க் கட்டுப்பாடு திட்டம், தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம், நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம் ஆகிய சிறப்புத் திட்டங்களும் அமுலாக்கப்பட்டன.

யானைக்கால் நோய்க் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் ஒரு கட்டுப் பாடு குழு இம்மாவட்டம் முழுவதும் 1957 நவம்பரிலிருந்து இயங்கத் தொடங்கியது. கடந்த இருபதாண்டுக் காலமாக இருந்து

வரும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதே திட்டத்தின் நோக்கம் ஆகும். நோய் பரவியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு மாத்திரைகள் அளித்தல், கொசுக்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய இரு காரியங்களும் மேற்கொள்ளப்பட்டன.

வாலாஜா, ஆர்க்காடு, ராணிப்பேட்டை, ஆரணி, வாணியம் பாடி, ஆம்பூர், குடியாத்தம், அரக்கோணம் ஆகிய எட்டு நகரங்களி லும், பத்து பெரிய பஞ்சாயத்துக்களிலும், பல கிராமங்களிலும் யானைக்கால் நோய் பரவியிருப்பது தெரிய வந்தது. 1960 ஜனவரி வரை 4·10 லட்சம் மக்களுக்கு யானைக்கால் நோய்த் தடுப்பு மாத் திரைகள் கொடுக்கப்பட்டன. மருந்து தெளித்தல், நீர் தேங்கி நிற்கும் குழிகளை மூடுதல், சாக்கடைக் குழிகளை வெட்டுதல் போன்ற முறைகளின்மூலம் கொசுக் கட்டுப்பாடு செய்யப்பட்டது.


மக்களுக்கு இப்படி அதிக அளவில் சிகிச்சை அளிக்கப்படுவ தனால் பலன் ஏற்படுகிறதா எனக் கண்டறிய ஆர்க்காட்டிலும் ஆரணியிலும் கிருமிக் கட்டுப்பாடு அளவிடு ஒன்று மேற்கொள்ளப் பட்டது. அதன் பலன் ஊக்கம் அளிப்பதாய் இருந்தது. பிரதேச மக்களைக் கூட்டங் கூட்டமாகக் கண்டு தொடர்புகொண்டு, அவர் களுக்கு யானைக்கால் வியாதி சம்பந்தப்பட்ட திரைப் படங்களைக் காட்டுதல் போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மலேரியா ஒழிப்பு

தேசிய மலேரியா கட்டுப்பாடு திட்டம் இம்மாவட்டத்தில் முதலில் செங்கம் வட்டத்தில் 1946-ல் தொடங்கப்பட்டது. பின்னர் இது திருப்பத்தூர், போளூர், வேலூர் வட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. தலைமை இடம் 1950-ல் திருப்பத்தூருக்கு மாற்றப்பட்டது. இந்தத் திட்டத்தினால் 1958-ல் திருப்பத்தூர், செங்கம், திருவண்ணாமலை, போளூர், வேலூர் ஆகிய ஐந்து வட்டங்களிலும் 533 கிராமங்கள் பயன் அடைந்தன. 1958-ம் ஆண்டிலிருந்து தேசிய மலேரியா கட்டுப்பாடு திட்டமானது, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டமாக மாற்றப்பட்டது. கிராமங்களில் பரவலான அளவில் டி. டி.டி தெளிக்கப்பட்டது.

மலேரியாவை ஒழிக்கத் தீவிரத் திட்டம் 1960 ஏப்ரலி லிருந்து அமுலாக்கப்பட்டது. இதன்படி 81 மேற்பார்வையாளர் களும், 324 ஊழியர்களும் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வீடு விடாகச் சென்று மலேரியா பீடிக்கும் வாய்ப்புள்ள நோயாளி களைக் கண்டுபிடித்துத் தக்க மருந்து அளிக்கிறார்கள். இதனால் சிறந்த பலன் விளைந்துள்ளது. அதற்கு ஜவ்வாது மலைகள் சிறந்த உதாரணம். ஒரு காலத்தில் மலேரியா நிறைந்திருந்த இப்பகுதி யில் இப்போது இந்நோய் இல்லை.

மகப்பேறு, குழந்தை நலத் திட்டத்தின் கீழ் முதல் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களுள் ஒன்று, "பேறுகால வைத்திய உதவி விஸ்தரிப்புத் திட்டம்" ஆகும். கண்ணமங் கலத்திலும், கீழ் வைத்திநங்குப்பத்திலும் இரண்டு மகப் பேறு, குழந்தைநல நிலையங்கள் தொடங்கப்பட்டன. இவை ஒவ் வொன்றுடனும் நான்கு துணை நிலையங்கள் இணைக்கப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆண்டுக்கு 8 வீதம்



மகப்பேறு குழந்தைநல நிலையம், குரிச்சிலாபட்டு

கிராமப்புறங்களில் 40 மகப்பேறு, குழந்தைநல நிலையங்கள் ரூ. 1·729 லட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டன. திறக்கப்பட்ட மகப்பேறு, குழந்தைநல நிலையங்களின் பட்டியல், இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

கிராம மக்களுக்கு இந்நிலையங்கள் எவ்வாறு சிறந்த பணி யாற்றுகின்றன என்பதைப் பின்வரும் அட்டவணை தெளிவாக விளக்கும் :

	மாவட்டத்தில் நிலையங்களின் எண்ணிக்கை	கவனிக்கப்பட்ட கேஸ்கள்	மொத்தப் பிறப்புச் சதவீதம்
1956-57	48	6,332	8·3
1957-58	77	9,499	13·3
1958-59	97	10,326	13·0
1959-60	106	14,881	18·9
1960-61	127	12,748	18·7

கிராமப்புறங்களில் மருத்துவச்சிகளாகப் பணியாற்றும் மருத்துவக் குலப் பெண்மணிகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி தாயிகளுக்கு ஆறு மாத காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் பெண்மணி ஒவ்வொருவருக்கும் அவசியமான மருந்துகள் அடங்கிய ஒரு மருந்து பெட்டியும் அளிக்கப்படுகிறது.

வெற்றிகரமாகப் பயிற்சி முடிக்கும் தாயிகள், அவரச காலங்களில் பேறுகால மருத்துவ உதவி கிடைக்க முடியாத கிராமப்புறங்களில் சிறந்த முறையில் சேவை செய்ய இயலும். 1956-ம் ஆண்டிலிருந்து இதுவரை ரூ. 66,000 செலவில் 463 தாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. செலவுத் தொகையிலும், பயிற்சி பெறும் தாயிகளின் எண்ணிக்கையிலும் அநேகமாக லட்சிய அளவு அடையப்பட்டது.

நரம்புச் சிலந்தி

1959-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட மற்றொரு முக்கியமான திட்டம், நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம் ஆகும். போளூர், செங்கம், செய்யாறு, ஆரணி, வந்தவாசி, திருவண்ணுமலை ஆகிய ஆறு வட்டங்களிலும் பணியாற்ற மருத்துவக் குழு நியமிக்கப்பட்டது. போளூர், திருவண்ணுமலை, வந்தவாசி ஆகிய மூன்று இடங்களிலும் துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டன. 1960 ஜனவரியில் முறையாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அந்த ஆண்டில் 1,255 கிராமங்களில் நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இக் கிராமங்களில் 196 கிராமங்கள் இந்நோய் பீடிக்கப்பட்ட கிராமங்களாகப் பதிவு செய்யப்பட்டன. 1960 மே, ஜூன், ஜூலை மாதங்களில் ஜவ்வாது மலைக் கிராமங்கள் அனைத்திலும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்நோய் அதிகமில்லாத காலங்களில் (செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில்) அளவிடு செய்யும் வேலை தொடர்ந்து நடத்தப்பட்டது. இத்திட்டத்திஞல் இம்மாவட்டத்தில் சுமார் 2 லட்சம் மக்கள் பயன் பெற்றார்கள்.

1899-ம் ஆண்டு சென்னை ஜனன மரணப் பதிவுச் சட்டத்தில் கூறியுள்ள விதிகளை அமுலாக்குதல், தொத்து நோய்களைக் கட்டுப்படுத்தல், சுற்றுப்புறச் சுகாதாரத் தூய்மைக்கு நடவடிக்கைகளை எடுத்தல், குடிநீர் வழங்குதல், விட்டு வசதி அளித்தல்போன்ற மற்ற வழக்கமான கடமைகளையும் பொதுச் சுகாதாரத் துறையினர் நிறைவேற்றி வருகின்றனர். காலக்கிரமத்தில் ஒழுங்காக அம்மை குத்துதல், அம்மை குத்திக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துதல் ஆகிய பணிகள் செவ்வனம் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனை அடுத்துவரும் புள்ளி விவரங்கள் நிலைநாட்டுகின்றன.


	ஆண்டு	முதல் முறை அம்மை குத்தப்பட்டவர்கள்	மறுபடியும் அம்மை குத்தப் பட்டவர்கள்
முதல் திட்டம்	1951-52	1,08,629	3,88,264
	1952-53	81,392	1,80,054
	1953-54	95,608	1,94,230
	1954-55	91,972	1,21,131
	1955-56	92,874	1,90,460
இரண்டாவது திட்டம்	1956-57	93,761	2,36,756
	1957-58	95,589	3,44,876
	1958-59	1,03,660	4,50,009
	1959-60	98,454	3,62,279
	1960-61	97,792	3,58,777

தொத்து நோயைக் கட்டுப்படுத்துவதில் பொதுச் சுகாதாரத் துறையினர் சிறந்த பணியாற்றி இருக்கின்றனர். பெரிய அம்மை, காலரா நோய் பரவலும், அவற்றால் உண்டாகும் இறப்பும் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளன. கடந்த பத்தாண்டுக் காலமாக இம் மாவட்டத்தில் ' பிளேக் ' நோய் இல்லை.

	ஆண்டு	பெரிய அம்மை		காலரா	
		நோய் கண்டவர்	இறந்தவர்	நோய் கண்டவர்	இறந்தவர்
முதல் திட்டம்	1951-52	2,735	649	2,415	1,321
	1952-53	428	342	4,123	938
	1953-54	219	105	746	186
	1954-55	99	27	111	47
	1955-56	56	15	15	10
இரண்டாவது திட்டம்	1956-57	213	72	....	....
	1957-58	531	159	401	213
	1958-59	864	326	22	10
	1959-60	232	65	17	13
	1960-61	222	61	....	....

உடல் நலத்திற்குத் தூய்மையான குடிநீர் வசதி செய்துதர வேண்டியது மிகவும் முக்கியமாகும். முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே நகர்ப்புறங்களில் நீர்வழங்கும் திட்டம்

பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்டது. நகராட்சி மன்றங்களுக்கு இதற்காக அரசாங்கம் கடனும் உதவித் தொகையும் வழங்கி வருகிறது.



ஆரணி நகராட்சி மன்றம் கட்டியுள்ள நீர் வழங்கு தொட்டி

வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவத்திபுரம், ஆர்க்காடு, ராணிப்பேட்டை, ஆரணி போன்ற நீர்வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுப் பயனளித்து வருகின்றன. வேலூர் நீர்வழங்கு திட்டம் சீர்செய்யப்பட்டு வருகிறது. தண்ணீரின் மூலமாகப் பரவும் காலரா, டைபாய்டு போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தி அழிப்பதற்காகத் தேசியத் தண்ணீர் வழங்கு, துப்புரவுத் திட்டம் அமுலாக்கப் பட்டது. கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வசதியைச் செய்து தருவதே இத்திட்டத்தின் நோக்கம். அதற்காகக் கிராமங்களில் கிணறுகள் அமைத்துத் துப்புரவு வசதிகள் செய்துதரப்பட்டன.

இணைப்பு

வட ஆர்க்காடு மாவட்டத்தில் திறக்கப்பட்ட மகப் பேறு, குழந்தை நல நிலையங்களின் விவரம் :

1956-57	1. அனக்காவூர்	செய்யாறு வட்டம்
	2. சித்தாத்தூர்	செய்யாறு வட்டம்
	3. உக்கல்	செய்யாறு வட்டம்
	4. அம்மூர்	வாலாஜா வட்டம்

	5.	பாச்சூர்	திருப்பத்தூர் வட்டம்
	6.	மிட்டூர்	
	7.	குரிச்சிலாபட்டு	
	8.	சுந்தரம்பல்லி	
1957-58	1.	பாணுவரம்	அரக்கோணம் வட்டம்
	2.	நெமலி	
	3.	திருப்பனங்காடு	செய்யாறு வட்டம்
	4.	அரட்டவாடி	செங்கம் வட்டம்
	5.	குப்புடி சாத்தம்	வாலாஜா வட்டம்
	6.	தாமர பாக்கம்	
	7.	கொரட்டி	திருப்பத்தூர் வட்டம்
	8.	துத்திப்பட்டு	குடியாத்தம் வட்டம்
1958-59	1.	திருமால்பூர்	அரக்கோணம் வட்டம்
	2.	நெசல்	ஆரணி வட்டம்
	3.	பரமனந்தல்	செங்கம் வட்டம்
	4.	மேல்புழுதியூர்	
	5.	வெலகல்நத்தம்	திருப்பத்தூர் வட்டம்
	6.	வெள்ள குட்டை	
	7.	மருதாடு	வந்தவாசி வட்டம்
	8.	கிழ்க்கொடுங்காலூர்	
1959-60	1.	முள்ளன்றம்	ஆரணி வட்டம்
	2.	மேல் பள்ளிப்பட்டு	செங்கம் வட்டம்
	3.	பெரிய குளம்	
	4.	வீரளூர்	போளூர் வட்டம்
	5.	குட்டியம்	வாலாஜா வட்டம்
	6.	பேராம்பட்டு	திருப்பத்தூர் வட்டம்
	7.	குண்ணகம் பூண்டி	வந்தவாசி வட்டம்
	8.	பாலூர்	குடியாத்தம் வட்டம்
1960-61	1.	களத்தூர்	அரக்கோணம் வட்டம்
	2.	பெருமாள்ராஜ பேட்டை	
	3.	மருத்தாம்பாடி	போளூர் வட்டம்
	4.	குண்டலேரி	வாலாஜா வட்டம்
	5.	பொம்மி குப்பம்	திருப்பத்தூர் வட்டம்
	6.	அணைகட்டு	வேலூர் வட்டம்
	7.	மாதனூர்	
	8.	சேனல்	வந்தவாசி வட்டம்

நாட்டின் நரம்புகள்

நாட்டின் முன்னேற்றத்தில் போக்குவரத்துக்கும் முக்கியப் பங்கு உண்டு. உழவும், தொழிலும் செழித்து வளரப் போக்குவரத்துப் பாதைகள் மிக இன்றியமையாதன. உற்பத்திப் பொருள்களை நகரங்களுக்குக் கொண்டு செல்லவும், விஞ்ஞான வசதிகள், வைத்திய வசதிகள் முதலான பல நன்மைகள் கிராம மக்களுக்குக் கிடைக்கவும் போக்குவரத்துப் பாதைகள் பெரிதும் உதவுகின்றன. ஆகையினால், அவற்றின் அபிவிருத்தியிலும் ஐந்தாண்டுத் திட்டங்கள் அக்கறை செலுத்தின.


வட ஆர்க்காடு மாவட்டத்தில் 2,119 மைல் தொலைவுக்குப் பாதைகள் உள்ளன. இப்பொழுது பெருவழித் துறையினரின் நிர்வாகத்தில் 1,868 மைல் பாதைகள் இருக்கின்றன. ஆயின் 1951-ல், இத்துறையினரின் நிர்வாகத்தில் 1,341 மைல் பாதைகள் தான் இருந்தன. கடந்த பத்தாண்டுகளில் இம்மாவட்டத்தில் 40 சதவித அளவிற்குப் பாதைகள் வளர்ச்சி யடைந்துள்ளன. இங்குப் பாதைகள் திருப்திகரமான முறையில் இருக்கின்றன.

இரண்டாவது திட்டக் காலத்தில் மட்டும் அரசாங்கப் பாதைகளுக்காக ரூ. 44·38 லட்சம் செலவிடப்பட்டது. மற்றப் பாதைகளுக்காக ரூ. 19·24 லட்சம் செலவிடப்பட்டது. முதல் திட்டக் காலத்தில் ரூ. 6·48 லட்சம் செலவில் 4 பாலங்கள் கட்டப்பட்டன; இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 41·43 லட்சம் செலவில் மேலும் 5 பாலங்கள் கட்டப்பட்டன. ரூ. 56,000 செலவில் மற்றொரு பாலம் திருத்திக் கட்டப்பட்டது. சில பாதைகள், பாலங்கள் சம்பந்தப்பட்ட வேலையும் மேற்கொள்ளப்பட்டது. அது அடுத்து வரும் ஆண்டுகளில் முடிவு பெறும்.

சாலை வசதியில் முதல் திட்டக் காலத்திலும், இரண்டாவது திட்டக் காலத்திலும் இம் மாவட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் விவரமாவது :

	1951	1961
	(நீளம் மைல்களில்)	
சிமெண்ட் காங்கிரீட் பாதை	12	22
தார்ப் பாதை	61	752
'மெக்காடம்' பாதை	1,002	530
மண், சரளைக் கல் பரப்பிய பாதை	267	564
	1,342	1,868

ராணிப்பேட்டை-கிருஷ்ணகிரி சாலையில் பாலாற்றுப் பாலம்



இவை தவிர, பாதைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், ஒடுபாலம், மதகுகள் அமைத்தல் போன்ற திட்டங்களும் அமுலாக்கப்பட்டன. முதல் திட்டக் காலத்தில் நிறைவேற்றப் பட்ட திட்டங்கள் பின்வருமாறு:

(1) குடியாத்தம் நகரில் கௌண்டயம் ஆற்றின் குறுக்கே காட்பாடி - வெங்கட்டகிரி கோட்டைப் பாதையில் பாலம். இதன் செலவு ரூ. 3 லட்சம்.

(2) வாலாஜா வட்டம் திருவத்தூர்-ஆரணி பாதையில் 8-4 மைலில் கலவை மதகின் குறுக்கே பாலம். இதன் செலவு ரூ. 99,000.

(3) அரக்கோணம் வட்டம் அரக்கோணம்—ஓச்சேரி பாதையில் 13-2 மைலில் அகவலம் ஆற்றின் குறுக்கே பாலம். இதன் செலவு ரூ. 2 லட்சம்.

(4) வேலூர் வட்டம் அப்துல்லாபுரம்—பாக்கம் பாதையில் 11-1 மைலில் பேயாற்றின் குறுக்கே பாலம். இதன் செலவு ரூ. 49,500.

பாலங்கள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றப் பட்ட திட்டங்கள் பின்வருமாறு :

(1) கடலூர்-சித்தூர் பாதையில் (மாநிலப் பெருவழி) படவேடு ஆற்றின் குறுக்கே பாலம். இதன் செலவு ரூ. 3,70,000.

(2) கண்ணமங்கலம் அருகில் கடலூர்-சித்தூர் பாதையில் கமண்டலம் ஆற்றின் குறுக்கே பாலம். இதன் செலவு ரூ. 3·23 லட்சம்.

(3) போளூரிலிருந்து மூன்று மைலில் வந்தவாசி - போளூர் பாதையில் செய்யாற்றின் குறுக்கே பாலம். இதன் செலவு ரூ. 4,75,000.

(4) போளூர் வட்டம் கடலாடிக்கு அருகில் போளூர்—செங்கம் பாதையில் கல்லாற்றின் குறுக்கே பாலம். இதன் செலவு ரூ. 75,000.

(5) ராணிப் பேட்டைக்கு அருகில் ராணிப் பேட்டை — கிருஷ்ணகிரி பாதையில் (தேசிய நெடுஞ்சாலை) பாலாற்றின் குறுக்கே பாலம். இதன் செலவு ரூ 29 லட்சம்.

(6) கோரட்டிக்கு அருகில் சேலம்-திருப்பத்தூர் பாதையில் 65-3 மைலில் பாலத்தைத் திருத்தி அமைத்தல். இதன் செலவு ரூ. 56,000.

(7) பச்சக் குப்பம் அருகில் (ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு அருகில்) பாலாற்றின் குறுக்கே ஓடுபாலம். இதன் செலவு ரூ. 1·75 லட்சம்.

முதல் திட்டக் காலத்திலும், இரண்டாவது திட்டக் காலத்திலும் தொடங்கப்பட்டு மூன்றாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்படும் சில திட்டங்களின் விவரம் பின்வருமாறு :

(1) திருப்பத்தூர் வட்டம் ஏலகிரி மலைகளில் ஒரு பாதை அமைத்தல். பாதையின் நீளம் 8 மைல் 6 பர்லாங்கு; செலவு ரூ. 16·4 லட்சம்.

(2) காட்பாடி-வெங்கட்டகிரிகோட்டை பாதையில் 33 மைலில் மலைத்தொடர் பகுதியைச் செப்பனிடல்; செலவு ரூ. 2 லட்சம்.

(3) திருவத்திபுரம் நகரில் செய்யாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்தல். செலவு ரூ. 14·20 லட்சம்.

(4) அப்துல்லாபுரம்-பாக்கம் பாதையில் ஒரு பாலம் அமைத்தல். செலவு ரூ. 1·75 லட்சம்.

(5) அப்துல்லாபுரம்-பாக்கம் பாதையில் 26-லிருந்து 31 மைல்வரை சாலைச் சீரமைப்பு. இதற்குச் செலவு ரூ. 1·18 லட்சம்.

(6) அரக்கோணம் வட்டத்தில், அரக்கோணத்திலிருந்து திருவள்ளூர்வரை 2 மைல் 7 பர்லாங்கு நீளத்திற்குப் பாதை அமைத்தல். செலவு மதிப்பீடு ரூ. 1·64 லட்சம்.

மலைப் பாதை

இவை அனைத்தும் பாதை அமைப்பில் ஏற்பட்ட சாதனைகளை விளக்குகின்றன. மக்கள் நடமாட்டத்திற்கும், சரக்குகளை அனுப்பவும் இவை மிகுந்த அளவில் உதவியிருக்கின்றன. இதனால் பொதுவில் மக்களது வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. முக்கியமாக ஏலகிரி மலைகளில் போடப்படும் பாதை முடிவு பெற்றால், அது மலைவாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே விளங்கும்.

புத்துலகப் போக்குவரத்து நிலைகளுக்குத் தக்க அளவில் பாதைகளை அபிவிருத்தி செய்வதும், சிற்றூர்கள் அனைத்தையும் செம்மையான பாதை அமைப்புக்களால் இணைத்துக் கிராம மக்களின் வாழ்க்கையில் வளமும் முன்னேற்றமும் ஏற்படுமாறு செய்வதும் பெருவழித் துறையினரின் முக்கிய நோக்கமாய் இருக்கின்றன.

மாவட்டத்தில் அரக்கோணத்திற்கும் திருப்பத்தூருக்கும் இடையில் கிழக்கு மேற்காகச் சுமார் 90 மைல் தொலைவுக்கு பிராட்கேஜ் ரயில் பாதையும், வடக்கு தெற்காகச் சுமார் 50 மைல்



எழிலார்ந்த ஏலகிரியில் அமைக்கப்பட்டுவரும் பாதை

தொலைவுக்கு மீட்டர்கேஜ் ரயில் பாதையும் உள்ளன. அரக்கோணத்திற்கும் ஜோலார்பேட்டைக்கும் இடையில் பிராட்கேஜ் ரயில் பாதையை இரட்டிக்கும் வேலை இரண்டாவது திட்டக் காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இது முடியுந் தறுவாயில் உள்ளது. சோலையார் (ஜோலார்) பேட்டை வரையில் ரயில் பாதையை இரட்டிக்கும் பணி மூன்றாவது திட்டத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

பஸ் போக்குவரத்து

மாவட்டத்தில் பஸ் போக்குவரத்தும் பெருகி வந்துள்ளது. சரக்குகள் லாரிகளில் ஏற்றிச் செல்லப்படுவதும் அதிகரித்துள்ளது. 1951 ம் ஆண்டில் 317 ஆக இருந்த பஸ்களின் எண்ணிக்கை 1961 ம் ஆண்டில் 416 ஆக உயர்ந்துள்ளது; ஜவ்வாது மலைகளில் மலைப் பிரதேசங்கள தவிர மற்ற எல்லா இடங்களும் பஸ் போக்குவரத்தினால் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த பத்தாண்டுகளில் லாரிகளின் எண்ணிக்கையும் ஏறக்குறைய இரட்டித்து, 312 லிருந்து 611 ஆக அதிகரித்திருக்கிறது. நெல், கரும்பு, மூங்கில், காய்கறிகள், விறகு, தோல் வகைகள் முதலான பொருள்கள் லாரிகளில் கொண்டு செல்லப்படுகின்றன. தனியார் பஸ்கள், லாரிகள் ஆகியவற்றில் சுமார் 5,000 பேர் வேலை பெற்றுள்ளார்கள். இந்த எண்ணிக்கை 1951 ம் ஆண்டில் 2,500 ஆகும்.

மாவட்டத் தலைமை இடத்திலிருந்து காட்பாடி சந்திப்பு மூன்று மைல் தொலைவில் இருப்பதாலும், திருவண்ணாமலை பக்தர்கள்

நாடிவரும் ஒரு புனிதத் திருத்தலமாக விளங்குவதாலும் இம் மாவட்டத்தில் டாக்சிகளும் போக்குவரத்திற்குப் பயன் படுகின்றன. கடந்த பத்தாண்டுகளில் டாக்சிகளின் எண்ணிக்கை 25 லிருந்து 47 ஆக அதிகரித்துள்ளது.

பெருவழித் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட பெரிய திட்டங்கள் :	முதல் திட்டம்	இரண்டாவது திட்டம்
1. பாலங்களின் எண்ணிக்கை	4	5
2. பாலங்களைத் திருத்தி அமைத்தல்	—	1
3. ஓடுபாலம்	—	1
4. கட்டப்பட்டு வரும் பாலங்களின் எண்ணிக்கை	—	2
5. போடப்பட்டு வரும் பாதைகளின் எண்ணிக்கை	—	2
6. பழுது பார்க்கப்படும் பாதைகளின் எண்ணிக்கை	—	2

போக்குவரத்துத் துறை	1951 க்கு முந்திய நிலை	1961 ல் நிலை
1. பஸ்களின் எண்ணிக்கை	317	416
2. லாரிகளின் எண்ணிக்கை	312	611
3. டாக்சிகளின் எண்ணிக்கை	25	47


சீர்ப் பயணம்

ஏட்டுப் படிப்போடு கல்வி முடிந்து விடுவது இல்லை. பல இடங்களைச் சென்று பார்ப்பதன் மூலமும் அது விரிவடைகிறது. ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்வதன் மூலம், மக்களுக்குள் நல்லுறவு வளர்கிறது. நேரத்தைப் பயனுள்ள முறையிலும், மகிழ்ச்சியான வழியிலும் செலவிட முடிகிறது. இதனால் இன்று சீர்ப்பயணம் (Tourism) மிகவும் போற்றப்படுகிறது.

இம் மாவட்டத்தில் சீர்ப் பயணத்திற்கு உரிய சிறப்பிடங்கள் சில இருக்கின்றன. திருவண்ணாமலை புகழ்மிக்க புனிதத் தலமாக விளங்குகிறது. இங்கு அழகிய மலையும், புகழோங்கிய கோயிலும் இருக்கின்றன. இங்கு நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவுக்குத் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரளாக வந்து செல்லுகின்றனர்.

திருவண்ணாமலையிலிருந்து 21 மைல் தொலைவில் பெண்ணையாற்றின் குறுக்கே 1958 ல் சாத்தனூர் அணை கட்டப்பட்டது. இந்த அணைக்கட்டுப் பிரதேசம் இப்பொழுது அழகோங்கி மிளிர்கிறது. மைசூர் பிருந்தாவனத்தை ஒத்து இங்குத் தோட்டம் கண்கவர் வனப்பில் வளர்க்கப் பட்டுள்ளது. வர்ண விளக்குகளும் கண்ணுக்கு விருந்தளித்துக் கற்பனையைக் கிளர்ந்தெழச் செய்கின்றன. இது சிறந்ததோர் சீர்ப்பயண இடமாக

உருப்பெற்று வருகிறது. ஏற்கெனவே, திரைப்படத் தயாரிப்பாளர் களை மிகவும் கவர்ந்து விட்டது. சாத்தனூர் அணைக்கட்டுப்



திருவண்ணாமலைக் கோயில்

பிரதேச அழகுச் சூழ்நிலையில் பல சினிமா படங்கள் எடுக்கப் பட்டுள்ளன.

நகர் அமைப்பு

முதல் திட்டக் காலத்திலும், இரண்டாவது திட்டக் காலத்தி லும் நகரசபைகளால் பல நகர் அமைப்புத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. வாணியம்பாடிக்கான 8 திட்டங்கள் செயின்ட், ஜியார்ஜ் கோட்டை கெஜட்டில் பிரசுரிக்கப் பட்டுள்ளன. வேலூருக்கான 8 திட்டங்கள் விளம்பரப் படுத்தப்பட்டு, நகர் அமைப்பு நெறியாளரிடமிருந்து நகல் திட்டங்களும் பெறப் பட்டுள்ளன. திருப்பத்தூரில் எடுத்துக் கொள்ளப்பட்ட 3 திட்டங் களும், திருவண்ணாமலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட 2 திட்டங்

களும் ஆரம்ப நிலையில் இருக்கின்றன; அல்லது அரசாங்கத்தினால் ஒத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன.

முதல் திட்டக் காலத்திலும், இரண்டாவது திட்டக் காலத்திலும் நகரசபைகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட நகர் அமைப்புத் திட்டங்கள் பின்வருமாறு:—

தொடர் எண்	நகரசபையின் பெயர்	நகர அமைப்புத் திட்டத்தின் விவரம்
1.	வாணியம்பாடி	முஸ்லீம்பூர் வடக்கு விஸ்தரிப்பு நகர் அமைப்புத் திட்டம்
2.	வாணியம்பாடி	பெரிய பேட்டை கிழக்கு விஸ்தரிப்பு நகர் அமைப்புத் திட்டம்
3.	வாணியம்பாடி	காந்தி நகர் தென் மேற்கு நகர் அமைப்புத் திட்டம்
4.	வாணியம்பாடி	புதூர் கிழக்கு நகர் அமைப்புத் திட்டம்
5.	வாணியம்பாடி	புதூர் மேற்கு நகர் அமைப்புத் திட்டம்
6.	வாணியம்பாடி	திட்டம் எண் 6.
7.	வாணியம்பாடி	திட்டம் எண் 7.
8.	வாணியம்பாடி	திட்டம் எண் 8.
9.	வேலூர்	சுல்லிவென் பேட்டை வடக்கு நகர் அமைப்புத் திட்டம்
10.	வேலூர்	வலப்பாடி கிழக்கு நகர் அமைப்புத் திட்டம்
11.	வேலூர்	மலைப்பகுதி விஸ்தரிப்பு நகர் அமைப்புத் திட்டம்
12.	வேலூர்	சேன்பாக்கம் கிழக்கு நகர் அமைப்புத் திட்டம்
13.	வேலூர்	பாலாறு தெற்கு நகர் அமைப்புத் திட்டம்
14.	வேலூர்	தோட்டப்பாளையம் வடக்கு நகர் அமைப்புத் திட்டம்
15.	வேலூர்	தோட்டப்பாளையம் கிழக்கு நகர் அமைப்புத் திட்டம்
16.	வேலூர்	காகிதப்பட்டடை நகர் அமைப்புத் திட்டம்
17.	ஆரணி	வண்டிப்பாளையம் நகர் அமைப்புத் திட்டம்
18.	ஆரணி	பொரிபொரிச்சான் பாளையம் நகர் அமைப்புத் திட்டம்
19.	ஆரணி	கிழ் ஆரணி நகர் அமைப்புத் திட்டம்
20.	திருப்பத்தூர்	அரிச்செட்டி விஸ்தரிப்புத் திட்டம்
21.	திருப்பத்தூர்	புதுப்பேட்டை தெற்குப் பாதை திட்டம்
22.	திருப்பத்தூர்	பொது நகர் அமைப்புத் திட்டம்
23.	திருவண்ணாமலை	ரமணாசிரமம் நகர் அமைப்புத் திட்டம்
24.	திருவண்ணாமலை	லட்சுமிபுரம் நகர் அமைப்புத் திட்டம்

நகர சபைகள் பஸ் நிலையங்கள், வண்டி நிலையங்கள், சந்தை, மார்க்கெட்டுக்கு 'கொட்டகைகள்', முதலியவற்றைக் கட்டுவதற்காக ரூ. 8·46 லட்சம் கடன்வழங்கப்பட்டுள்ளது.

தொடர் எண்	நகர சபை	கடன் தொகை	சாதனை
1.	அரக்கோணம்	ரூ. 14,000	பிரயாணிகள் ஓய்வு அறையும், தங்கும் அறையும் அமைத்தல்.
2.	ராணிப்பேட்டை	ரூ. 18,000	வாரச் சந்தைக்கு இரண்டு 'கொட்டகைகள்'.
3.	வாணியம்பாடி	ரூ. 64,800	பஸ் நிலைய அபிவிருத்தி, கிடங்கு, ஓய்வு இடம், தங்கியிருக்கும் 'கொட்டகை', 'புக்கிங்' அலுவலகம் அமைத்தல்.
4.	ஆம்பூர்	ரூ. 41,000	வண்டி நிலையம், டிராக்டர், கழிவு உரத்தை எடுத்துச் செல்ல டிரெய்லர் வாங்குதல்.
5.	வேலூர்	ரூ. 2,77,000	பஸ் நிலைய அபிவிருத்தி
6.	ஆரணி	ரூ. 8,42,600	44 ஸ்டால்களுடன் ஒரு புதிய நகரசபை மார்க்கெட்; தண்ணீர் சப்ளைத் திட்ட ஒதுக்கீடு.
7.	ஆர்க்காடு	ரூ. 5,000	தினசரி மார்க்கெட்டில் ஸ்டால்கள், வண்டி நிலையம்.
8.	வாலாஜா	ரூ. 23,000	பஸ் நிலையத்தில் ஒரு சிற்றுண்டிச் சாலையையும், தினசரி மார்க்கெட்டில் 3 கடைகளையும், 8 ஸ்டால்களையும் கட்டுதல்.
9.	திருவண்ணாமலை	ரூ. 1,70,500	காய்கறி மார்க்கெட், பஸ் நிலைய அபிவிருத்தி, பஸ் நிலையத்தில் ஸ்டால்கள், ஒரு சுற்றுலா விடுதி.

10.	குடியாத்தம்	ரூ. 1,29,715	தினசரி மார்க்கெட், பஸ் நிலையம், சுற்றுலா விடுதி, கம்போஸ்ட் உரம் கொண்டு செல்ல ஒரு லாரி.
11.	திருப்பத்தூர்	ரூ. 62,000	நகர சபை வாராந்தர மார்க்கெட்டில் ஸ்டால்கள், பஸ் நிலையத்தைத் திருத்தி அமைத்தல்.

4. குறைந்த வருமானக்காரர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித்தர அரக்கோணம், வேலூர், குடியாத்தம் ஆகிய நகரசபைகளுக்கு ரூ. 1·85 லட்சம் அளவுக்குக் கடன் அனுமதிக்கப் பட்டுள்ளது.

1.	அரக்கோணம்	ரூ. 56,000	ஒவ்வொன்றும் 20 வீடுகளைக் கொண்ட 10 பிளாக்குகளைக் கட்டுதல்.
2.	வேலூர்	ரூ. 50,000	ஒவ்வொன்றும் 4 குடியிருப்புகளைக் கொண்ட 5 பிளாக்குகளைக் கட்டுதல்.
3.	குடியாத்தம்	ரூ. 79,940	ஒவ்வொன்றும் 15 வீடுகளைக் கொண்ட 9 பிளாக்குகளைக் கட்டுதல்.

மத்திய அரசாங்க திட்டங்கள்

தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள மிகப் பெரிய தொழில்கள் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையும், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டமும் ஆகும். இவையல்லாமல் கச்சா பிலிம் தொழிற்சாலை, டெலிபிரின்டர் தொழிற்சாலை, மருத்துவ மனைகளுக்கான அறுவைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை முதலியனவும் அமைக்கப்பட்டு வருகின்றன.

நெய்வேலி நிலக்கரி

இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மிக முக்கியமானது ஆகும். எதிர் காலத்தில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் இதன் சேவை மிகப் பெரியதாகவிருக்கும். தென் ஆர்க்காடு மாவட்டம் நெய்வேலிப் பிரதேசத்தில், 145 லிருந்து 200 அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் 100 சதுர மைல் பரப்பளவுக்கு 200 கோடி டன்கள் பழுப்பு நிலக்கரி படிந்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும். இதைப் பயன்படுத்தி 4 லட்சம் கிலோவாட் வரை மின்சாரம்

உற்பத்தி செய்யவும், 1·5 லட்சம் டன் ஊரியா உரம் தயாரிக்கவும், 3·8 லட்சம் டன் சுட்ட நிலக்கரி அச்சுக்கள் தயாரிக்கவும், 6,400 டன் மோட்டார் ஸ்பிரிட், 54,300 டன் தார், 1,032 டன் பினுயில் ஆகியன தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நிலக்கரியைத் தோண்டும்போது வெளிவரும் தரமான களிமண்ணைப் பயன்படுத்துவதற்கான தொழிற்சாலையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரித் திட்டம் ரூ. 86 கோடி செலவில் உருவாக்கப் பட்டு, மூன்ருவது திட்டக்கால விஸ்தரிப்பு வேலைகளையும் சேர்த்துச் சுமார் ரூ. 110 கோடி செலவிடப்படும்.

பெரம்பூர் ரயில்பெட்டி

பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை முதல் திட்டக் காலத்தில் இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. இது 1955-ல் உற்பத்தியைத் தொடங்கிற்று. சுவிட்ஸர்லாந்து உதவியுடன் இது அமைக்கப்பட்டது. இதில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை 8 கோடி ரூபாய். இரண்டாம் திட்டக் காலத்தில் இத் தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகளைத் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளது. தற்போது இத் தொழிற்சாலையில் சுமார் 7,500 பேர் வேலை செய்கின்றனர். 300 பெட்டிகளுக்கு ஆசனம் முதலிய வசதிகளை அமைப்பதற்கான தொழிற்சாலைப் பிரிவு ரூ. 3·5 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மூன்ருவது திட்ட மத்தியில் இங்குத் தயாராகும் எல்லாப் பெட்டிகளுக்கும் இந்தத் தொழிற்சாலையிலேயே ஆசனம் முதலிய வசதிகள் அமைக்கப்படும்.

உதகை கச்சா பிலிம்

உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பிரெஞ்சு நிபுணர்களின் ஒத்துழைப்புடன் போட்டோ பிலிம்கள் உற்பத்தி செய்யப்படும். இத்திட்ட வேலைக்காக இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி கம்பெனி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் ரூ. 6·5 கோடி செலவாகும். நானூறு நிபுணர்கள் உட்படச் சுமார் ஆயிரம் பேர் இதில் வேலை வசதி பெறுவர். எக்ஸ்-ரே போட்டோ பிலிம், பதிவுத் தாள்கள், போட்டோ லித்தோவுக்கான தாள்கள் முதலியன இதில் உற்பத்தியாகும். மூன்ருவது திட்ட முடிவில் கலர் பிலிம்களும், கலர் போட்டோ தாள்களும் உற்பத்தியாகும். ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் இதில் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுறது. இந்தக் கம்பெனிக்காக 272 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

" ஆலிவெட்டி " என்ற இத்தாலி நாட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்திய அரசாங்கம் கிண்டியில் ஒரு டெலிபிரின்டர் தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. மாதம் 100 டெலிபிரின்டர்கள் இதில் உற்பத்தி செய்யப்படும். இதில் மொத்தம் சுமார் 200 பேர் வேலை பெறுவர். கிண்டித் தொழிற் பண்ணையில் ஏற்கனவே இதற்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு அளவில் உற்பத்தி தொடங்கிவிட்டது.

மத்திய அரசாங்கம், ரஷ்யத் தொழில் நுணுக்க உதவியுடன் கிண்டியில் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்குச் சுமார் 5 கோடி ரூபாய் செலவாகும். இங்கு 150 வகைகளில் சுமார் 25 லட்சம் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கப்படும். இந்தக் கம்பெனிக்காக 115 எக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

சேலம் இரும்பு

சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனி அதிக அளவில் கிடைக்கிறது. ஆயின் அதில் இரும்புச் சத்துக் குறைவாக இருக்கிறது. இப்பொழுது நெய்வேலியில் நிலக்கரி கிடைப்பதினால், அதையும் சேலம் இரும்புக் கனியையும் கொண்டு இரும்பு உற்பத்தி செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. பூர்வாங்க சோதனைகள் நம்பிக்கை அளித்துள்ளன. நிலக்கரி வெட்டியெடுக்கப் பட்ட பின்பு தான், விரிந்த அளவில் சோதனைகளை மேற்கொள்ள இயலும். இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் மூன்றும் திட்டத்தில் ரூ. 25 கோடி ஒதுக்கியுள்ளது. பூர்வாங்க வேலைகளுக்காக மாநில அரசாங்கம் மூன்றுவது திட்டத்தில் ரூ. 75 லட்சம் ஒதுக்கியுள்ளது.

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தோடு



காவேரிப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பற்றிப் பல அயல்நாட்டு நிபுணர்களால் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வந்துள்ளது. 1956-ம் ஆண்டு ரஷ்ய நிபுணர்கள் அவ்விடத்தைப் பார்வையிட்டு இங்கு எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறிகள் இருப்பதைத் தெரிவித்தனர். அதனையொட்டி 1957-58-ல் பூர்வாங்க சோதனைகள் நடத்தப்பட்டன. இந்தியப் புவியியல் ஆராய்ச்சிக் கழகம் இதற்கான சோதனைகளை மேற்கொண்டது. இதுவரை சுமார் 4,000 சதுர மைல் அளவில் சர்வே நடத்தப் பட்டுள்ளது. மேலும் சில பகுதிகளில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பூர்வாங்க சோதனைகள் இந்தப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன.

சேது சமுத்திரத் திட்டமும் இந்திய அரசாங்கத்தின் பரிசீலனை யில் இருந்து வருகிறது. பாக் ஜலசந்திக்கும் மன்னார் வளைகுடா விற்கும் இடையில் அடித்தரை பாறையாக உள்ள பகுதியில் கால் வாய் அமைத்து, போக்குவரத்துக்கு வழி செய்வதே இத் திட்டத் தின் முக்கிய அம்சம் ஆகும். இந்தக் கால்வாய் அமைப்பின் மூலம் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கு வரும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிவர வேண்டிய அவசியம் இராது. இதனமூலம கப்பல் பிரயாண நேரமும், எரி பொருளும் கணிசமாகக் குறையும்.

ரயில் பாதை

தமிழ் நாட்டில் ரயில்பாதை வசதிகளை அதிகரிப்பதற்கான திட்டங்களும் பரிசிலனையில் உள்ளன. சேலம்-பெங்களூர், விருதுநகர்-மானமதுரை, திருநெல்வேலி-கன்னியாகுமரி ரயில்

புதியதோர் நகரமும் எழுந்துள்ளது



பாதைத் திட்டங்களை மூன்றுவது திட்டத்தில் சேர்ப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைத்தொழிலும் வாணிபமும் செழிப்படைவதற்கு வேண்டுமான நிலக்கரி, உருக்கு, மற்றும் இதர கச்சாப் பொருள்கள் போதிய அளவில் கிடைக்க வேண்டுமானுல், ரயில் வசதிகள் அதிகரித்தாக வேண்டும். இந்த வசதியைச் செய்வதின் அவசியம் பற்றி மாநில அரசாங்கம் தீவிரமாக வலியுறுத்தியுள்ளது.

கல்கத்தா-சென்னை, அரக்கோணம்-ஈரோடு ஆகியவைகளுக்கு இடையில் பிராட்கேஜ் லைன் இரட்டைப்பாதை அமைப்பதற்கான ஏற்பாடும், ரயில்வே அபிவிருத்தித் திட்டத்தில் இடம் பெறும் என்று நம்பப்படுகிறது.

வளமான எதிர்காலம்

சுதந்திரப் பாதையில் பயணம் தொடங்கிப் பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேறி விட்டன. தற்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்றுவருகிறது.

நாட்டு மக்கள் நலனுக்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 186 கோடியும் அரசாங்கத்தால் செலவிடப்பட்டதை அறிந்தோம். மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 291 கோடி செலவிடப்படும். இரண்டாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து நடத்தவும், நிறுவனங்களைப் பராமரிக்கவும் ஆண்டுதோறும் ரூ. 8 கோடி செலவிட வேண்டியிருக்கிறது. மூன்றாவது திட்டக்கால அளவில் இச் செலவு ரூ. 40 கோடியாகும். இதற்கு வழி வகுப்பதோடு, திட்டச் செலவுக்காக மாநில அரசாங்கம் ரூ. 101 கோடி ஒதுக்கும். அதற்கு மேல் ரூ. 190 கோடி வரை மத்திய அரசாங்கம் உதவி செய்யும். இந்த வகையில் மூன்றாவது திட்டத்தின் மொத்த அளவு

ரூ. 291 கோடியாக இருக்கும். திட்ட வாரியான செலவு விவரங்கள் பின் வருமாறு :—

(1)	முதல் திட்டச் செலவு (2)	இரண்டாம் திட்டச் செலவு (3)	மூன்றும் திட்ட உத்தேசச் செலவு (4)
	(ரூபாய்கள் கோடியில்)		
வேளாண்மை	9·67	16·80	36·98
சமுதாயநல அபிவிருத்தியும் கூட்டுறவும்		15·23	25·18
பாசனமும் மின்சக்தியும்	50·43	95·78	127·61
பெருந்தொழில்களும், நடுத்தரத் தொழில்களும்,	1·53	1·13	3·35
சிறு தொழில்களும், கிராமத் தொழில்களும்		12·72	20·16
சாலைகள், சுற்றுலா வசதிகள்	2·70	5·38	11·25
கல்வி	3·82	13·73	32·16
சுகாதாரம்	6·42	14·35	21·50
வீட்டு வசதி	1·29	4·80	7·00
பின்தங்கிய வகுப்பினர் நலன்	4·52	4·59	5·38 (—) 2·12*
சமூக நலன்		0·18	0·52
தொழிலாளர் நலன்		0·48	1·33
மற்ற இனங்கள்		1·01	0·59
மொத்தம்	80·38	186·18	290·89

* மத்திய அரசாங்கத் துறையில் செலவிடப்படும் தொகை

நம் நாட்டில் பெரும்பாலோர் ஈடுபட்டிருக்கும் வேளாண்மைக்காக உற்பத்திக்கும் சிறு பாசனத்திற்கும் இரண்டாவது திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது மூன்றுவது திட்டத்தில் ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு பாசனக் குளங்களையும் ஏரிகளையும் புதுப்பிப்பதற்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 4·4 கோடி செலவாகியிருக்க, இப்போது அதற்கு ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை மட்டும் அல்லாமல், தூர்வாரிச் செப்பஞ் செய்யும் வேலைத் திட்டம் ரூ. 80 லட்சம் செலவில் தொடர்ந்து நடத்தப்படும். கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 1 கோடி அளவிற்குக் கடன் தொகைகளும், உதவித் தொகைகளும் வழங்கப்படும். சுமார் 7,200 மின்சார மோட்டார் பம்பு செட்டுகளும் 1,240 ஆயில் என்ஜின் பம்பு செட்டுகளும் வாடகைக் கிரய அடிப்படையில் வழங்கப்படும். இதற்குச் சுமார் ரூ. 1 கோடி செலவாகும். வாடகைக் கிரய அடிப்படையில் 250 யந்திரக் கலப்பைகள் வினியோகிக்கப்படும். மேலும் 2,000 துளைக் கிணறுகளுக்காக

ரூ. 50 லட்சம், 150 குழாய்க் கிணறுகள், 500 ஊற்றுக் கிணறுகள் ஆகியவற்றிற்காக ரூ. 94 லட்சம், 3,000 வடிமுனைக் கிணறுகளுக்காக ரூ. 50 லட்சம் செலவிடப்படும். அரசாங்க விதைப் பண்ணைகள் புதிதாக 76 நிறுவ ரூ. 100 லட்சம் செலவாகும். தனிப்பட்ட சாகுபடியாளர்க்கு வாடகைக்கு விடுவதற்காக 25 கனரக டிராக்டர்கள் வாங்க ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிருமி, பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் வழங்க ரூ. 100 லட்சமும், சிறந்த வேளாண்மைக் கருவிகளை வழங்க ரூ. 20 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. வாணிகப் பயிர்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்குரிய பல்வேறு திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 192 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாசனத்துக்கு ரூ. 27 கோடி

பாசனத்துக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 17 கோடி செலவிடப்பட்டது. மூன்றாவது திட்டத்தில் இதற்கென ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வகை செய்துள்ள ரூ. 21 கோடியும் இதில் சேர்ந்ததாகும். ரூ. 48 லட்சம் செலவில் பாலாறு கால்வாய்த் திட்டம், ரூ. 55 லட்சம் செலவில் சாத்தனூர் (இரண்டாம் நிலை) திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளால் உணவு உற்பத்தி 53 லட்சம் டன்களிலிருந்து திட்ட முடிவில் 70 லட்சம் டன்களாக உயரும் என எதிர்பார்க்கலாம். கரும்பு (வெல்லம்) 40 லட்சம் டன்னிலிருந்து 50 லட்சம் டன்னுகவும், எண்ணெய் வித்துக்கள் 10·50 லட்சம் டன்னிலிருந்து 13·40 லட்சம் டன்னுகவும், பருத்தி 4·20 லட்சம் பேல்களிலிருந்து 5·20 லட்சம் பேல்களாகவும், தேங்காய் 4,150 லட்சம் காய்களிலிருந்து 5,160 லட்சம் காய்களாகவும் உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கால்நடை நலம்

கால்நடை வளர்ப்புக்கென மூன்றாவது திட்டத்தில் ரூ. 352 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கேந்திர கிராம நிலையங்களுக்கான ரூ. 75 லட்சமும், கோழி வளர்ப்புக்கான ரூ. 52 லட்சமும் இதில் அடங்கும்.

பால் பண்ணையும், பால் வழங்கலும் என்பதன்கீழ் மூன்றாவது திட்டத்தில் ரூ. 275 லட்சம் செலவாகும். இத்தொகையிலிருந்து சென்னை பால் பண்ணைத் திட்டத்திற்காக ரூ. 100 லட்சமும், திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் அமைக்க ரூ. 53 லட்சமும் செலவிடப்படும்.

மதுரையில் ஏற்படுத்தப்படும் இயந்திரத்திற்காக ஐக்கிய நாட்டு சர்வதேச குழந்தைகள் நிதியிலிருந்து உதவி கிடைக்கக்கூடும். ரூ. 15 லட்சம் செலவில் வெண்ணெய், பால் பவுடர் தொழிற்சாலையும், ரூ. 6 லட்சம் செலவில் கால்நடைத் தீனி தயாரிப்பு நிலையமும் அமைக்கப்படும்.

மீன் வளத்திற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 79 லட்சம் செலவாயிற்று. இப்போது மூன்றுவது திட்டத்தில் இதற்காக மொத்தம் ரூ. 2·22 கோடி செலவிடப்படும். அத்தொகையில் படகுகள் வழங்க ரூ. 63 லட்சமும், நைலான் வலைகள் போன்றவை வாங்க ரூ. 20 லட்சமும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்க ரூ. 30 லட்சமும், மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும், மீன்களைக் கரைசேர்க்கும் வசதிகளைச் செய்து தரவும் ரூ. 35 லட்சமும் செலவிடப்படும்.

ரப்பர் தோட்டம்

மூன்றுவது திட்டத்தில் வன வளத்திற்காக ரூ. 2·12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 2·62 லட்சம் ஏக்கரில் கிராமக்காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூ. 75 லட்சம் செலவாகும். ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் ஆகியவற்றின் கரைகளில் மரங்கள் நட ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பில் ரப்பர் தோட்டம் வைக்கப்படும். மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக ரூ. 250 லட்சம் செலவிடப்படும். குந்தா பள்ளத்தாக்கு மண்வளப் பாதுகாப்பு, சிறப்புத் திட்டத்திற்கு ஆகும் செலவுக்காக ரூ. 25 லட்சம் செலவுத் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்கும்.

சமுதாய நல வளர்ச்சித் திட்டத்திற்கு மூன்றுவது திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1962-63க்குள் மாநிலம் முழுவதற்கும் சமுதாய நலவளர்ச்சி வேலை விஸ்தரிக்கப்படும்.

மூன்றுவது திட்டக்கால அளவில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் குறுகியகால, நடுத்தரக் காலக் கடன்களாக ரூ. 47 கோடியும், நீண்டகாலக் கடன்களாக ரூ. 3 கோடியும் வழங்கும். கூட்டுறவு என்பதன்கீழ் பல்வேறு திட்டங்களுக்காக ரூ. 471 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான ரூ. 110 லட்சமும், 1,030 கிடங்குகளைக் கட்டுவதற்கான ரூ. 100 லட்சமும் அடங்கும்.

இரண்டாவது திட்டக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் பேட்டை, நாசரத் ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்

டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டையிலும் ஆக நான்கு இடங்களில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது. பேட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகியவைகளில் ஆலைகள் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தி தொடங்கிவிட்டன. நாசரத்தில் கூட்டுறவு நூற்பு ஆலை விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை இன்னும் உருவாகும் கட்டத்தில் உள்ளது. மூன்ருவது திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் மேலும் நான்கு கூட்டுறவு நூற்பு ஆலைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு நூற்பாலைகளின் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்ருவது திட்டக் காலத்தில் இதற்கென ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்கச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

அணு மின்சார உற்பத்தி

மின்சார அபிவிருத்திக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 79 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்டத்தில் மின்சாரப் பெருக்கத்திற்கு ரூ. 100 கோடி செலவிடப்படும். நெய்வேலியில் மத்திய அரசாங்கத்திட்டத்தின்கீழ் அனல் மின்சாரநிலைய விஸ்தரிப்பு வேலை ரூ. 15 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இரண்டாம் திட்ட முடிவில் தமிழ்நாடு மின்சார இணைப்பில் உற்பத்தி 5·71 லட்சம் கிலோ வாட்டாகும். மூன்றும் திட்ட முடிவில் 10·46 லட்சம் கிலோ வாட்டாக இது உயரும். ஆனாலும்கூட, மின்சாரத் தேவை இந்த உற்பத்தித் திறனுக்கும் மேல் போகக் கூடுமாதலால், மாநிலத்தில் அணுமின்சார நிலையம் அமைப்பு சம்பந்தமான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சார விநியோக வேலைத் திட்டங்களுக்காக ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு மின்சார வசதியும் இதில் அடங்கும். 7,300 கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிப்பதென்ற லட்சிய அளவை அடைவது கடினமாக இருக்காது என்று கருதப்படுகிறது. கிராம மின்சாரத் திட்டங்களுக்காகத் தனிப்பட்ட லைசென்சுதாரர்களுக்குக் கடன் கொடுப்பதற்கென ரூ. 200 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக மூன்ருவது திட்டத்தில் ரூ. 11·2 கோடி செலவிடப்படும். தொழிற் கூடங்கள், தொழிற்சாலை யூனிட்டுகள் இவற்றை நிறுவவும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளை வழங்கவும் ஒதுக்கப்பட்ட ரூ. 320 லட்சம் இத் தொகையில் அடங்கும். கைத்தறிகளுக்காக மொத்தம் ரூ. 800 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களில்

2,500 விசைத் தறிகளை நிறுவுவதற்கென மத்திய அரசாங்கத் தொழில் துறையின் கீழும் தொகை ஒதுக்கப்படும்.

சாலைகள் அபிவிருத்திக்காக இரண்டாம் திட்டத்தில ரூ. 5·33 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்டத்தில் இந்த வகையில் சுமார் ரூ. 11 கோடி செலவிடப்படும்.

கல்வி அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 25 கோடி செலவிடப்படும். கட்டாய ஆரம்பக் கல்வியை அமுலாக்க ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் 6 முதல் 11 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளும் 1965-66-ஆம் ஆண்டுக்குள் பள்ளி செல்வர். மூன்றும் திட்டக்கால முடிவில் 17 லட்சம் குழந்தைகள் மதிய உணவு பெறும்படியாகத் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

கட்டாயக் கல்வி

பொறியியற் கல்லூரிகளில் மேற்கொண்டு 610 மாணவர் களைச் சேர்க்கவும், பாலிடெக்னிக்குகளில் மேற்கொண்டு 1,060 மாணவர்களைச் சேர்க்கவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்தியத் திட்டத்தின் பாகமாகப் பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஒன்று இம்மாநிலத்தில் நிறுவப்படும். தனியார் துறையில் மேலும் ஒரு பொறியியற் கல்லூரி ஏற்படும். புதிதாக ஆறு பாலி டெக்னிக்குகள் தொடங்கப்படும். அவற்றுள் மூன்று பெண்களுக் கானவை. ரூ. 100 லட்சம் செலவில் 20 ஜுனியர் தொழில் நுட்பப் பள்ளிகள் தொடங்கப்படும்.

ஹரிஜன நலனுக்காக 1955-56-ம் ஆண்டுச் செலவு ரூ. 117 லட்சமாக இருந்தது. 1960-61-ல் இது ரூ. 355 லட்சமாக அதி கரித்தது. மூன்றும் திட்டத்தில் ஹரிஜன நலனுக்காக மேற் கொண்டு ரூ. 5·4 கோடி செலவிடப்படும். அதில் மத்திய அர சாங்கப் பங்கு ரூ. 2·1 கோடியாகும். இத்தொகை மாநிலத் திட்டத் தில் ஒதுக்கிய தொகைக்கு மேற்பட்டுள்ள தொகையாகும். ஹரிஜன நலன் சம்பந்தப்பட்ட எல்லாத் திட்டங்களுக்காகவும் மூன் றுவது திட்டத்தில் ரூ. 20 கோடி செலவிடப்படும்.

வீட்டு வசதி, நகர அபிவிருத்தித் திட்டங்களுக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 4 கோடி மத்தியத் திட்டத்தின் பங்காக இருக்கும்.

சுகாதார அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 21·5 கோடி செலவிடப்படும். நகர தண்ணீர் வசதித் திட்டங்களுக் காக ரூ. 7½ கோடியும், கிராமங்களில் தண்ணீர் வசதித் திட்டங் களுக்காக ரூ. 1½ கோடியும் இதில் அடங்கும்.

மூன்ருவது திட்டக் காலத்தில் புதிய மருத்துவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்படும். ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிகள் அபி விருத்திக்காகவும், மருத்துவப் பயிற்சி வசதிகள் அதிகரிக்கவும் ரூ. 456 லட்சம் செலவிடப்படும். குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களுக்காக ரூ. 161 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத்தில் அந்த வகையில் ரூ. 64 லட்சம் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. பாக்கியுள்ள ரூ. 97 லட்சத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

இவ்விதமாக, வளமான எதிர்காலத்தை நோக்கி மேலும் முன்னேறும் முயற்சியாக மூன்ருவது திட்டம் விளங்குகிறது.
